பக்கங்கள் : பதினாறு


Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 20 வள்ளுவர் ஆண்டு 2035 மார்கழி 27செவ்வாய்க்கிழமை (11.01.2005) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர் :46



கடற்பெருக்கால் இடம்பெயர்ந்து பருத்தித்துறை வட. இந்து மகளிர் கல்லூரியில் தங்கியுள்ள மக்களைச் சந்திப்பதற்காக மாகாண ஆளுநர் டிரோன் பெர்னாண்டோ படையினர் சகிதம் கல்லூரிக்குள் பிரவேசிப்பதையும், ஆளுநரின் வருகைக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் வகையிலான பதாகைகளைத் தாங்கியவாறு மக்கள் எதிர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டிருப்பதையும், பாடசாலைக் கட்டடத்துக்குள் நுழைந்த ஆளுநரைப் பொதுமக்கள் சூழ்ந்துகொண்டதையும் படங்களில் காணலாம். (படங்கள்: சி.சுந்தரலிங்கம்-கரவெட்டிச் செய்தியாளர்)

# ஆளுநருக்கு யாழ்ப்பாணத்தில் எதிர்ப்பு!

## கறுப்புக்கொடியுடன் 'திரும்பிப் போ' கோஷம்; வடமராட்சியில் அகதிகள் கொதித்தெழுந்தனர்

யாழ்ப்பாணம்,ஜனவரி 11

**நேற்று யாழ்ப்பாணம் வந்த வடக்கு - கிழக்கு மாகாண ஆளுநர் டிரோன் பெர்னாண்டோவுக்கு ஆழிப்பேரலை அனர்த்தத்தால் பாதிப்புற்ற அகதிகள் கறுப்புக்கொடிகாட்டி 'திரும்பிப் போ!' எனக் கோஷமிட்டுக் கடும் எதிர்ப்புத் தெரிவித்தனர்.**

**நேற்றுப் பிற்பகல் 3.15 மணியளவில் வடமராட்சியில் பருத்தித்துறை வட. இந்து மகளிர் கல்லூரிப் பகுதியில் இந்த எதிர்ப்பு நிகழ்வு இடம்பெற்றது.**

கல்லூரியின் கலாசார மண்டபத்தில் அமைந்திருந்த நலன்புரி நிலையத்தில் தங்கியிருந்த அகதிகளே இந்த எதிர்ப்பை வெளிப்படுத்தினர்.

சுனாமி அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட வடமராட்சிக் கரையோரப் பிரதேசங்களை வடக்கு - கிழக்கு மாகாண ஆளுநர் டிரோன் பெர்னாண்டோ நேற்று நேரில் பார்வையிட்டார்.

ஒருநாள் உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டு ஆளுநர் தலைமையிலான குழுவினர் நேற்றுக் காலை யாழ்ப்பாணம் வருகை தந்தனர்.

ஆளுநருடன் செயலாளர் எஸ்.அமிர்தலிங்கம், மேலதிக செயலாளர் எஸ்.கணேசதாஸன், புனர்வாழ்வு அமைச்சின் செயலாளர் எஸ்.சிவதாஸன் ஆகியோரும் வந்திருந்தனர்.

முதலில் தெல்லிப்பழை புற்றுநோய் வைத்தியசாலைக்கு விஜயஞ்செய்த ஆளுநர், அங்கு மேற்கொள்ளவேண்டிய நடவடிக்கைகள் பற்றியும் கலந்துரையாடினார்.

அதனைத் தொடர்ந்து யாழ். செயலகத்தில் இடம்பெற்ற திணைக்களத் தலைவர்களுடனான கலந்துரையாடலில் சுனாமி அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வழங்க

(16ஆம் பக்கம் பார்க்க)



சுனாமி அனர்த்தத்தில் உயிரிழந்த தமது உறவுகளின் ஆத்மாக்கள் சாந்தியடைய வேண்டி தமிழகத்தின் கரையோரப் பகுதி ஒன்றில் சிறுவர்கள் நேற்று மொட்டை வழித்து சமயக்கிரியைகளுக்கு ஆயத்தமானபோது...

# சமாதானத்துக்கான அரிய வாய்ப்பை ஜனாதிபதி சந்திரிகா தகர்த்து விட்டார்

## அதனாலேயே ஆளுநர் வருகையைப் பகிஷ்கரித்தோம் என்கிறார் மாவை

யாழ்ப்பாணம்.ஜன.11

ஐ.நா.பொதுச் செயலாளர் கோபி அனான் தமிழர் தாயகத்துக்கு விஜயம் செய்வதைத் தடுக்கும் - மனிதாபிமானமற்ற - நாகரிகமற்ற - செயலை ஜனாதிபதியும், அவரது அரசினரும் நிறைவேற்றிவிட்டனர். இதன் மூலம், சமாதான வழிகளில் - பேச்சுக்கள் வாயிலாக - இனப் பிரச்சினைக்குத் தீர்வுகாண முடியும் என்ற பொது நம்பிக்கையை ஜனாதிபதி தகர்த்து விட்டார். இந்தக் காரணத்தினால்தான் ஜனாதிபதியின் பிரதிநிதியாக வடக்குக்கு வந்த, வடக்கு - கிழக்கு ஆளுநரின் விஜயத்தையொட்டிய நிகழ்ச்சிகளில் கலந்துகொள்வதில்லை என்ற முடிவைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எம்.பிக்கள் எடுத்தனர்.

- இப்படித் தெரிவித்துள்ளார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ். மாவட்ட எம்.பியான மாவை சேனாதிராஜா.

இதுதொடர்பாக அவர் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

கடற் பேரழிவு நிகழ்ந்த தினத்திலிருந்து இன்றுவரைக்கும் தமிழ்ப் பிரதேசங்களில் பாதிக்கப்பட்ட மக்களை முகாம்களிலும், தனியார் இடங்களிலும் பாதுகாத்து, உணவு, உடை, மருத்துவ உதவிகள் மற்றும் துப்புரவுப் பணிகள் உட்பட அவர்களுக்கான பராமரிப்பு நடவடிக்கைகளைப் பொதுமக்களின் அமைப்புகளும் அரச சார்பற்ற நிறுவனங்கள் - குறிப்பாகத் தமிழர் புனர்வாழ்வுக்கழகம் போன்றவையும் - தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கமும் மட்டுமே நிறைவேற்றிவந்தன.

(02 ஆம் பக்கம் பார்க்க)

## வீதிகள் திருத்தப்படாமையைக் கண்டித்து தீவக மக்கள் மண்கும்பானில் மறியல்

யாழ்ப்பாணம்.ஜன.11

தீவுப்பகுதி வீதிகள் புனரமைக்கப்படாமையைக் கண்டித்து மண்கும்பானில் நேற்று வீதி மறியல் போராட்டம் நடத்தப்பட்டது.

இதனால், தீவுப்பகுதிகளுக்கான சகல போக்குவரத்துக்களும் நேற்று சுமார் இரண்டு மணி நேரம் தடைப்பட்டன.

யாழ். ஊர்காவற்றுறை வீதியில், மண்கும்பான் நான்காம் கட்டைச் சந்தியில் நேற்றுக் காலை ஒன்றுகூடிய நூற்றுக்கணக்கான தீவுப்பகுதி மக்கள் தமது பகுதி வீதிகள் புனரமைக்கப்படாமையைக் கண்டிக்கும் சுலோகங்கள் அடங்கிய பதாகைகளைத் தாங்கியவாறு மறிய

(16ஆம் பக்கம் பார்க்க)

## எஸ்.பி.திஸநாயக்காவுக்கு ஜனாதிபதி தாமே பொதுமன்னிப்பு வழங்குவார்

கொழும்பு.ஜன.11

சர்வதேச நல்லெண்ணத்தைப் பெறும் வகையில் ஜனாதிபதி சந்திரிகா, முன்னாள் அமைச்சரும் ஐக்கிய தேசியக் கட்சிப் பிரமுகருமான எஸ்.பி.திஸநாயக்காவுக்குத் தன்னிச்சையாகவே பொதுமன்னிப்பு வழங்குவார் என ஆளும் தரப்பின் சிரேஷ்ட அமைச்சர் ஒருவர் தெரிவித்தார்.

சுனாமி அனர்த்தம் ஏற்படுவதற்கு முன் ஐ.தே.க. நாடாளுமன்ற உறுப்பினரும், முன்னாள் அமைச்சருமான எஸ்.பி.திஸநாயக்கவுக்கு இரண்டுவருட கடுழியச் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது. இது நாட்டில் அரசியல் கொந்

(16ஆம் பக்கம் பார்க்க)

## அமெ.படைகளின் இலங்கை வருகையை விடுதலைப் புலிகள் எதிர்க்கவில்லை!

கொழும்பு.ஜன.11

சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான உதவிப் பணிகளுக்கென அமெரிக்கப் படைகள் இலங்கைக்கு வந்துள்ளதைத் தாங்கள் எதிர்க்கவில்லை என விடுதலைப் புலிகள் தெரிவித்துள்ளனர்.

விடுதலைப் புலிகளின் சமாதானச் செயலகப் பணிப்பாளர் எஸ்.புலித்தேவன் கொழும்பில் வைத்து வெளிநாட்டுச் செய்தி நிறுவனம் ஒன்றுக்கு வழங்கிய செவ்வியிலேயே இதனைத் தெரிவித்துள்ளார்.

மனிதாபிமானப் பணிகளுக்காக அமெரிக்க இராணுவம் இங்கு வருவதை நாம் எதிர்க்கப் போவதில்லை - என்றார் புலித்தேவன்.

சுனாமியால் பாதிக்கப்பட்ட வடக்கு - கிழக்குப் பகுதிகளுக்கு அரச உதவிகளை விநியோகிப்பதில் குறைபாடுகள் இருக்கின்றன என்றும் புலித்தேவன் கூறினார்.

இடம்பெயர்ந்த மக்கள் தங்கியிருக்கும் நலன்புரி நிலையங்களின் பொறுப்பை இராணுவத்திடம் ஒப்படைக்க ஜனாதிபதி உத்தரவிட்டதைத் தொடர்ந்து அந்த நிலையங்களை விட்டு அச்சம் காரணமாக மக்கள் வெளியேறி

(16ஆம் பக்கம் பார்க்க)

## வவுனியாவில் நேற்று மோட்சார்ச்சனை

வவுனியா.ஜன.11

ஆழிப்பேரலையின்போது உயிர் நீத்த மக்களின் ஆத்ம ஈடேற்றத்திற்காக வவுனியா குடியிருப்பு சித்திவிநாயகர் ஆலயத்தில் நேற்று மோட்சார்ச்சனை நடைபெற்றது.

வவுனியா மாவட்ட இந்து ஆலயக் குருமார்களினால் ஏற்பாடுசெய்யப்பட்ட இந்தப்பிரார்த்தனையில் பௌத்த, கத்தோலிக்க குருமாரும் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களும் விடுதலைப் புலிகளின் முக்கிய பிரமுகர்களும் கலந்துகொண்டனர். (எ-12)

# நலன்புரிமுகாம் பொறுப்பாளரைத் தாம் தாக்கவில்லை பொலீஸ் பொறுப்பதிகாரி ஆணைக்குழுவிடம் தெரிவிப்பு

வல்வை சிதம்பரா நலன்புரி முகாமின் நிர்வாக உறுப்பினரான இராசதுரை இந்திரராசா என்பவரைத் தாங்கள் தாக்கவில்லை என்றும்-

அவர் போதையில் நின்று வீதி ரோந்து பணியில் ஈடுபட்ட பொலீஸாருடன் ரகளையில் ஈடுபட்டதனாலேயே அவரைக் கைதுசெய்து பொலீஸ் நிலையத்தில் நீண்டநேரம் தாம் தடுத்து வைத்திருந்ததாகவும் -

வல்வெட்டித்துறை பொலீஸ் நிலையப் பொறுப்பதிகாரி அனுர பிரேமரட்ண மனித உரிமைகள் ஆணைக்குழுவுக்குத் தெரிவித்துள்ளார்.

வல்வை சிதம்பராக் கல்லூரி நலன்புரி முகாமின் நிர்வாக உறுப்பினர் ஒருவரைப் பொலீஸார் தாக்கிய சம்பவம் தொடர்பாக மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்.அலுவலக விசாரணை அதிகாரிகள் நேற்றுத் தமது விசாரணைகளை மேற்கொண்டனர்.

அப்பொழுதே மேற்கண்ட தகவலை வல்வெட்டித்துறைப் பொலீஸ் நிலையப் பொறுப்பதிகாரி தெரிவித்தார் என்று மனித உரிமைகள் ஆணைக்குழுவின் விசாரணை அதிகாரி எம்.பெறோஸ் தெரிவித்துள்ளார்.

சிதம்பராக் கல்லூரி நலன்புரி முகாமுக்கு நேற்றுமுன்தினம் சென்ற வல்வைப் பொலீஸார் அங்கு தங்கியுள்ளவர்களின் விவரங்களைப் பதிவுசெய்யும் முயற்சியில் ஈடுபட்டபோது அங்கு பொறுப்பாக இருந்த இராசதுரை இந்திரராசா அதனைத் தடுத்துள்ளார்.

இதனை அடுத்துப் பதிவுகளை மேற்கொள்ளாது பொலீஸ் நிலையத்திற்குத் திரும்பிய பொலீஸார், பின்னர் வீதி ரோந்துப் பணியில் ஈடுபட்டனர். அப்பொழுது மதுபோதையில் காணப்பட்ட மேற்படி நபர் பொலீஸாருடன் வாய்த்தர்க்கத்தில் ஈடுபட்டார். இதனால், அவரைக் கைதுசெய்து நள்ளிரவு 12 மணி வரை பொலீஸ் நிலையத்தில் தடுத்து வைத்திருந்ததாகவும் அவர் மீது எவ்வித தாக்குதல்களும் மேற்கொள்ளப்படவில்லை என்றும் தம்மிடம் பொலீஸ் நிலையப் பொறுப்பதிகாரி தெரிவித்ததாக விசாரணை அதிகாரி தெரிவித்தார்.

இதேவேளை, இச்சம்பவம் தொடர்பாகச் சம்பந்தப்பட்ட நபரிடமும் பொலீஸாரிடமும் தொடர் விசாரணைகள் மேற்கொள்ளப்படும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (10-5)

## ஆயுதங்களுடன் இளைஞர் ரத்தோட்டையில் கைது!

மாத்தளை, ரத்தோட்டைப் பகுதியில் ரி-56 ரகத் துப்பாக்கி மற்றும் கிளைமோர் வெடிகுண்டு என்பவற்றுடன் இளைஞர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

மாத்தளை பொலீஸாருக்குக் கிடைத்த தகவலொன்றையடுத்து ரத்தோட்டைப் பகுதியில் உள்ள வீடொன்றை முற்றுகையிட்ட பொலீஸார், அங்கு மறைத்து வைக்கப்பட்டிருந்த ரி-56 ரகத் துப்பாக்கி மற்றும் அதற்குரிய 83 ரவைகள், கிளைமோர் குண்டொன்று என்பனவற்றைக் கைப்பற்றியுள்ளனர். அங்கிருந்த இளைஞர் ஒருவரும் கைதுசெய்யப்பட்டார்.

கைதுசெய்யப்பட்ட இளைஞர் இராணுவத்தில் இருந்து தப்பிவந்தவர் என ஆரம்ப விசாரணைகளிலிருந்து தெரியவந்துள்ளது என்று பொலீஸார் கூறினர்.

இதேவேளை, கொழும்பு மற்றும் அதன் சுற்றுப்புறங்களில் வைத்து 8 பாதாள உலக நபர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர். அண்மையில் அவிசாவளையில் கைதுசெய்யப்பட்ட வம்பட்டா என்று அழைக்கப்படும் பிரபல பாதாள உலகத் தலைவரிடம் மேற்கொண்ட விசாரணைகளைத் தொடர்ந்து கிடைக்கப்பெற்ற தகவல்களை அடுத்தே மேற்படி நபர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டது.(எ-க)

# சிறப்புற நடைபெற்ற நூல் வெளியீட்டு விழா

வலி.வடக்கு,ஜன.11

சிவத்தமிழ்ச் செல்வி கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டியின் 80 ஆவது அகவை முத்துவிழாவையொட்டி கலாநிதி மனோன்மணி சண்முகதாஸினால் எழுதி வெளியிடப்பட்ட 'காலம் தந்த கைவிளக்கு' மற்றும் ஜேர்மன் நாட்டில் வசிக்கும் குரும்பசிட்டியைச் சேர்ந்த கலாநிதி வெற்றிமணி மு.சு.சிவகுமாரன் எழுதி வெளியிட்ட 'சிவத்தமிழ்' என்னும் இரு நூல்களின் வெளியீட்டு விழா நேற்று சிறப்புற நடைபெற்றது.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத் தமிழ்த் துறைத் தலைவர் பேராசிரியர் அ.சண்முகதாஸ் தலைமையில் தெல்லிப்பழை அருள்மிகு துர்க்காதேவி தேவஸ்தான திருமண மண்டபத்தில் இந்நிகழ்வு இடம்பெற்றது.

ஆசியுரையினை அருட்கவி சீ.விநாசித்தம்பி, நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகளும் நிகழ்த்தினர்.

வாழ்த்துரையை யாழ்.பல்கலைக்கழக இந்து நாகரிகத்துறைப் பேராசிரியர் கோபால கிருஷ்ணஐயர் வழங்கினார்.

'காலம் தந்த கைவிளக்கு' நூலை நூலாசிரியர் கலாநிதி மனோன்மணி சண்முகதாஸும் 'சிவத்தமிழ்' நூலை நூலாசிரியர் கலாநிதி வெற்றிமணி மு.சு.சிவகுமாரனும் வெளியிட்டு வைக்க விழாநாயகி சிவத்தமிழ்ச்செல்வி கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி பெற்றுக்கொண்டார்.

சிறப்புப் பிரதிகளை தமிழீழ விடுதலைப் புலிகளின் கலை பண்பாட்டுக் கழகப் பொறுப்பாளர் புதுவை இரத்தினதுரை, யாழ்ப்பாணம் பல்கலைக்கழக உயர்பட்டப்படிப்புகள் பீடாதிபதி பேராசிரியர் சி.க.சிற்றம்பலம், தமிழ்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி எஸ்.சிவலிங்கராசா ஆகியோரும் பெற்றுக்கொண்டனர். (எ-86)

# காணாமற்போனோர் பற்றி பொலீஸ் முறைப்பாடு அவசியம்

## பதிவாளர் நாயகம் அறிவுறுத்தல்

கொழும்பு,ஜன.11

சுனாமி அனர்த்தத்தினால் காணாமற்போனோர் தொடர்பாக பொலீஸ் நிலையங்களில் முறைப்பாடு செய்யப்படல் வேண்டும். அவ்வாறு முறைப்பாடு செய்தல் எதிர்காலத்தில் பயனுள்ளதாக இருக்கும்.

பதிவாளர் நாயகத்தினால் கடந்த 7 ஆம் திகதி வெளியிடப்பட்டுள்ள சுற்றறிக்கையில் மேற்கண்டவாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

அண்மையில் ஏற்பட்ட சுனாமி அனர்த்தத்தினால் பலர் காணாமற்போயுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது. இதனையடுத்தே இவ்வாறு காணாமற்போனவர்கள் தொடர்பாக பொலீஸ் நிலையங்களில் முறைப்பாடு செய்தல் வேண்டும் என்று பதிவாளர் நாயகம் அறிவி[illegible]ள்ளார்.

அத்துடன், தத்தமது பிரதேச கிராம அலுவலர்களிடமும் முறைப்பாடு செய்தல் வேண்டும் என்று அந்தச் சுற்றறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடற்கொந்தளிப்பால் ஏற்பட்ட திடீர் மரணங்களைப் பதிவுசெய்வது தொடர்பாகவும் சகல பிறப்பு, இறப்பு பதிவாளர்களுக்கும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

மரணவிசாரணை நடைபெற்ற இறப்புகள் மற்றும் மரணவிசாரணை நடைபெறாது சடலம் அடையாளம் காணப்பட்டு இறுதிக்கிரியை நடைபெற்ற இறப்புகள் ஆகியவற்றைப் பதிவு செய்தல் தொடர்பாகவும் இந்தச் சுற்றறிக்கையில் அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளன.

இந்தச் சுற்றறிக்கையின் பிரதிகள் பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சின் செயலாளர், நீதி அமைச்சின் செயலாளர், மாவட்டச் செயலாளர்கள், உதவிப் பதிவாளர் நாயகம் (வலயம்), பிரதேச செயலாளர்கள், காணி மேலதிக மாவட்டப் பதிவாளர்கள் ஆகியோருக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளன. ([illegible]-10)

# சுனாமி அனர்த்த நிதி சேகரிப்பு கிரிக்கெட் உலக அணி அபார வெற்றியீட்டியது

மெல்பேர்ன்,ஜன.11



சுனாமி அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிதி சேகரிப்பதற்காக, உலக அணிக்கும் ஆசிய அணிக்கும் இடையே நடைபெற்ற கிரிக்கெட் போட்டியில் உலக அணி 112 ஓட்டங்களால் வெற்றியீட்டியுள்ளது.

ஆஸ்திரேலியாவின் மெல்பேர்னில் நேற்று நடைபெற்ற பகலிரவுப் போட்டியில் ரிக்கி பொண்டிங் தலைமையிலான உலக அணியும் சௌரவ் கங்குலி தலைமையிலான ஆசிய அணியும் மோதிக்கொண்டன.

நாணயச் சுழற்சியில் வெற்றியீட்டிய உலக அணி முதலில் துடுப்பெடுத்தாடி 50 ஓவர்கள் நிறைவில் 8 விக்கெட்டுக்களை இழந்து 344 ஓட்டங்களைப் பெற்றது. அணியின் சார்பில் பொண்டிங் 115 ஓட்டங்களையும் கிறிஸ் கெய்ன்ஸ் 69 ஓட்டங்களையும் பிறையன் லாரா 52 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்து வீச்சில் முரளிதரன் 3 விக்கெட்டுக்களையும், சஹீர்கான், அனில்கும்ளே ஆகியோர் தலா 2 விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர்.

தொடர்ந்து துடுப்பெடுத்தாடிய ஆசிய அணி 39.5 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 232 ஓட்டங்களை மாத்திரமே பெற்றுக்கொண்டது. ராகுல் ட்ராவிட் ஆட்டமிழக்காமல் 75 ஓட்டங்களையும் ஷேவாக் 45 ஓட்டங்களையும் சனத் ஜயசூரிய 28 ஓட்டங்களையும் எடுத்தனர்.

பந்து வீச்சில் டானியல் வெட்டோரி 3 விக்கெட்டுக்களையும் ஷேன்வோர்ன் 2 விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர். ஆட்ட நாயகனாக உலக அணியின் தலைவர் பொண்டிங் தெரிவு செய்யப்பட்டார்.



இப்போட்டியை 80 ஆயிரம் ரசிகர்கள் நேரில் கண்டு களித்தனர். அத்துடன், 122 நாடுகளைச் சேர்ந்த ரசிகர்கள் தொலைக்காட்சி மூலம் கண்டு களித்தனர். இதன்மூலம் கிடைத்த நிதி சுனாமி அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வழங்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (10)

# சமாதானத்துக்கான ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இப்பணிகள் மேற்கொள்ளும் பொருட்டு அமைக்கப்பட்ட முகாம்களையொட்டி செயலணிக் குழுக்களும் ஸ்தாபிக்கப்பட்டு அவை இயங்கிவருகின்றன. இச்செயலணிகளில் மாவட்ட, பிரதேச செயலகப் பொறுப்பாளர்களும் வெளிநாட்டு, உள்நாட்டு அரச -அரச சாரா பிரதிநிதிகளும் செயலாற்றி வருகின்றனர்.

சிறிலங்கா அரசின் நடவடிக்கைகளும் உதவிப் பணிகளும் 4 அல்லது 5 தினங்களுக்குப் பின்னரே ஆரம்பிக்கப்பட்டனவாயினும் இற்றைவரை முழுமையாக உருப்படியாக அதன் செயற்பாடுகள் அமையவில்லை.

கடற்பேரழிவின் பின் ஆரம்பத்தில் அரச ஆயுதப்படை உறுப்பினர்கள் சிலரும் சில இடங்களில் மனிதாபிமான உதவிகளில் ஈடுபட்டிருந்தனர் என்பதும் மறுக்கப்படவில்லை. இன முரண்பாடுகளும் ஆயுதப்போரும் நிலவிய இலங்கைத் தீவில்தான் சுனாமி கடற்பேரழிவும் ஏற்பட்டிருக்கின்றது என்பதை நாம் கவனத்தில் கொள்ளவேண்டும்.

20 ஆண்டுகால யுத்தத்தினாலும் இனக் கலவரங்களினாலும் 70 ஆயிரம் மக்கள் அழிக்கப்பட்டுள்ளனர். தமிழ்த் தேசத்தின் பொருளாதார அடித்தளங்கள் அழிக்கப்பட்டுவிட்டன. லட்சக்கணக்கான மக்கள் அகதிகளாக வெளிநாட்டிலும் உள்நாட்டிலும் சொந்த வாழ்விடங்களை விட்டு வெளியேறி அகதி முகாம்களில் சீரழிகின்றனர்.

தமிழ்த் தேசத்தின் பெரும்பகுதி தமிழழ விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டிலும் நிர்வாகக் கட்டமைப்பிலும் இருக்கின்றபொழுது சில பகுதிகள் அரசின் இராணுவ ஆக்கிரமிப்புப் பிரதேசமாகவுள்ளன.

இந்நிலையில், மூன்றாண்டு காலமாக யுத்த நிறுத்தம் நடைமுறையில் இருக்கின்றது. இக்காலத்தில் வெளிநாடுகள் - குறிப்பாக, வடக்கு - கிழக்கின் புனர்வாழ்வு நடவடிக்கைகளுக்கு என வழங்கவுள்ள நிதியைப் பயன்படுத்த இடைக்காலத் தன்னாட்சி அதிகாரசபை நிறுவ வேண்டிய சந்தர்ப்பத்தையும் அதன்மூலம் இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாணும் சந்தர்ப்பத்தையும் ஜனாதிபதி முறியடித்துவிட்டார்.

மீண்டும் யுத்தம் வெடிக்கப்போகிறது எனும் சூழலில்தான் - சர்வதேச நாடுகள் சமாதான முயற்சிகளை முன்னெடுத்த வேளையில்தான் - சுனாமி கடற்பேரழிவு ஏற்பட்டிருக்கிறது. இச்சந்தர்ப்பத்தில் மனிதாபிமான நடவடிக்கைகள் முதன்மை பெறவேண்டியது அவசியமாகும்.

அடுத்ததாக, இச்சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி இன நல்லுறவை ஏற்படுத்தவும் அதிகாரத்தைப் பகிர்ந்தளிப்பதன் மூலம் இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாணவும் வேண்டும் எனும் அரசியல் இலக்கை அடிப்படையாகக் கொண்டு நிவாரண நடவடிக்கைகளும் கட்டுமானப் பணிகளும் வடிவமைக்கப்படவேண்டும். சர்வதேச சமூகம் இக்கருத்தையே கொண்டு இருக்கிறது.

ஆனால், ஜனாதிபதியும் அரச தரப்பினரும் இன முரண்பாட்டை விரிவுபடுத்துவதிலும் ஜனாதிபதி செயலகத்திலும் மத்தியிலும் அதிகாரத்தைக் குவிப்பதிலும் அதற்கு மேலாக இராணுவமயப்படுத்தும் நடவடிக்கைகளிலும் தொடர்ச்சியாகத் திட்டமிட்டுச் செயலாற்றுகின்றனர். இதனை நாம் வன்மையாகக் கண்டிக்கின்றோம்; தீவிரமாக எதிர்க்கின்றோம்.

ஏற்கனவே, வடக்கு - கிழக்கில் ஓர் இடைக்காலத் தன்னாட்சி அதிகார சபை இருந்திருந்தால் சுனாமி பேரழிவின் பின் நிவாரணப் பணிகளையும் மீள்கட்டுமானப் பணிகளையும் முன்னெடுப்பது இலகுபட்டிருக்க முடியும். அதனையும் முறியடித்துவிட்டு, நிவாரணத்திற்காக அரசு மற்றும் புலம்பெயர்ந்த தமிழ் மக்கள், அரச சாரா நிறுவனங்கள் அனுப்பவுள்ள உதவிகளையும் தடுத்து நிறுத்தும் நடவடிக்கைகளிலும் ஜனாதிபதி ஈடுபடுகின்றார்.

சுனாமி பேரழிவையும் அதனால் ஏற்பட்டுள்ள மனிதாபிமானத்தையும் மீறி தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைமைக்கு எதிராக அரச ஊடகங்களே உண்மைக்குப் புறம்பான அப்பட்டமான 'கொயபல்ஸ்' பாணியிலான பிரசாரத்தைச் செய்துவருகின்றன.

இந்துமா சமுத்திரப் பிராந்தியத்தில் பல கொள்கை முரண்பாடுகளையும் பிராந்திய ஆதிபத்திய நலன்களையும் கொண்டுள்ள படையணிகளை சுனாமி பேரழிவைப் பயன்படுத்தி இலங்கையில் நிலைகொள்ள வைத்திருப்பது குறிப்பாகத் தமிழ்த்தேச மக்களை அச்சுறுத்தி நிற்கின்றது.

இன முரண்பாடுகளும், பேரினவாத சிந்தனையும் கொண்ட 100 வீதம் சிங்கள மத இராணுவத்தை - தமிழ்த்தேச மக்களின் நிர்வாகத்திலும் பராமரிப்பிலுமுள்ள முகாம்களைப் பொறுப்பேற்று நடத்த ஜனாதிபதி உத்தரவு பிறப்பித்துள்ளார். இந்த நடவடிக்கையானது வடக்கு - கிழக்கில் இராணுவ நிர்வாகக் கட்டமைப்பை ஏற்படுத்துவதன் மூலம் ஜனாதிபதி அதிகாரத்தை நிலைநாட்டும் செயலாகும்.

இந்நடவடிக்கைகளுக்குப் பின்னரும் தமிழ்த் தேசத்தில் சுனாமிப் பேரழிவால் பாதிக்கப்பட்ட மக்களின் எதிர்கால நலன்களை மையமாகக் கொண்டு, சர்வதேச நிவாரண உதவிகளைப் பயன்படுத்தும் கட்டமைப்புக்களை மேற்கொள்ள தமிழீழ விடுதலைப் புலிகளும் தமிழர் புனர்வாழ்வுக் கழகமும் நாமும் ஈடுபட வந்திருக்கின்றோம்.

இச்சந்தர்ப்பத்தில் ஐ.நா.சபையின் செயலாளர் நாயகம் இலங்கைக்கு மனிதாபிமானச் சுற்றுப்பயணத்தை மேற்கொண்டு கடந்த 8 ஆம் திகதி வருகைதந்திருந்தார்.

கடற்பேரழிவால் அழிந்துபோன வடக்கு-கிழக்குத் தமிழ்த் தேசத்தையும் அவர் பார்வையிடுவார் எனும் நம்பிக்கை தமிழ்த் தேசத்தில் ஏற்பட்டிருந்தது. அதற்கான முன்முயற்சிகளும் எடுக்கப்பட்டிருந்தன. நிகழ்ச்சி நிரலில் தமிழ்ப் பிரதேசங்களுக்குச் செல்ல கோபி அனானும் விருப்பம் கொண்டிருந்தார்.

இன முரண்பாடுகள் குறைந்து மனிதாபிமான உணர்வுடன் இலங்கையில் சமாதான முயற்சிகள் முன்னெடுக்கப்பட்டு இனப்பிரச்சினைக்குத் தீர்வு ஏற்படச் சந்தர்ப்பம் வந்திருக்கின்றதென்றே அனைவரும் நம்பியிருந்தனர்.

ஆனால், ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவும் அவரது அரசுத் தரப்பினரும் தீவிர இராஜதந்திர நடவடிக்கைகளைப் பயன்படுத்தி ஐ.நா. செயலாளர் நாயகம் கோபி அனான், சுனாமி பேரழிவினால் மோசமாகப் பாதிக்கப்பட்ட - குறிப்பாக - அம்பாறை, முல்லைத்தீவு, வடமராட்சி கிழக்கு ஆகிய பிரதேசங்களுக்குப் பயணம் செய்வதைத் தடுத்து நிறுத்திவிட்டனர்.

பகிரங்கமாக அனைவரும் தெரிந்துகொண்ட ஒரு மனிதாபிமானமற்ற - நாகரிகமற்ற - செயலை ஜனாதிபதியும் அவரது அரசும் நிறைவேற்றிவிட்டனர்.

சமாதான வழிகளில் - பேச்சு மூலம் - மனிதாபிமானப் பணிகளினூடாக - இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாணமுடியும் என்ற பொதுநம்பிக்கையை ஜனாதிபதி தகர்த்துவிட்டார்.

இந்தப் பின்னணியில்தான் ஜனாதிபதியின் பிரதிநிதியான வடக்கு - கிழக்குக்கான ஆளுநர் யாழ்ப்பாணம் வருகிறார். இச்சூழலில் தமிழ் மக்களின் பிரதிநிதிகளாகிய தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களாகிய நாம் ஆளுநரின் நிகழ்சிகளில் கலந்துகொள்ளாமல் விடுவது என்று தீர்மானித்தோம்.

தமிழ்த்தேச மக்களின் மனக்குமுறலையும் உணர்வுகளையும் இதன்மூலம் சிறிலங்கா ஜனாதிபதியும் சர்வதேசமும் அறிந்துகொள்ள வேண்டுமென வேண்டுகோள் விடுக்கின்றோம் - என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-க-173)

# பலஸ்தீன ஜனாதிபதியாக மஹ்மூத் அப்பாஸ் தெரிவு



ரமல்லா,ஜன.11

பலஸ்தீன ஜனாதிபதியாக பலஸ்தீன விடுதலை இயக்கத்தின் தலைவர் மஹ்மூத் அப்பாஸ் பெரும்பான்மைப் பலத்தோடு வெற்றிபெற்றிருக்கிறார். இவரை எதிர்த்துப் போட்டியிட்ட பலர் குறைவான வாக்குகளையே பெற்றுள்ளனர்.

நேற்றுமுன்தினம் நடந்த ஜனாதிபதித் தேர்தலில் மஹ்மூத் அப்பாஸ் சுமார் 66 வீதமான மக்கள் ஆதரவைப் பெற்றுள்ளார். இவரை எதிர்த்துப் போட்டியிட்ட சுயேச்சை வேட்பாளரான பலஸ்தீன தொழிற் சங்கத் தலைவர் மார்வன் பர்கோதி சுமார் 19.7 வீதமான வாக்குகளையே பெற்றார்.

பலஸ்தீன ஜனாதிபதித் தேர்தலில் பெண்கள் ஆர்வத்தோடு வாக்களித்திருந்தனர். அநேகமான பகுதிகளில் வாக்களிப்பு நடவடிக்கைகள் சுமுகமாக நடைபெற்றதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. தேர்தல் நடைபெறுவதற்கு முன்னர் நடத்தப்பட்ட கருத்துக்கணிப்புகள் பல மஹ்மூத் அப்பாஸே பலஸ்தீன ஜனாதிபதியாகத் தெரிவுசெய்யப்படுவார் என்று தெரிவித்திருந்தன.

மஹ்மூத் அப்பாஸுக்கு இஸ்ரேலும், அமெரிக்காவும் ஆதரவு தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (க-8)

## இந்தியாவில் பஸ் விபத்து ஐம்பது பேர் உயிரிழப்பு!

பெங்களூர்,ஜன.11

இந்தியாவில் கர்நாடக அரச போக்குவரத்துக் கழகத்திற்குச் சொந்தமான பஸ்ஸொன்று நேற்று விபத்துக்குள்ளானதில் 50 பயணிகள் பரிதாபகரமாக உடல் நசுங்கிப் பலியாகினர்.

ஹுப்ளியில் இருந்து குல்பர்கா மாவட்டம், சித்தாபூருக்குச் சென்றுகொண்டிருந்த பஸ்ஸே கால்வாய்க்குள் விழுந்து விபத்துக்குள்ளானது. இந்த பஸ், விபத்துக்குள்ளானது அதிகாலை வேளை என்பதால் மீட்புப் பணிகளில் தாமதமும், தடங்கலும் ஏற்பட்டன.

கால்வாயில் தண்ணீர் ஓடிக்கொண்டிருந்ததால் பயணிகளில் பலர் தண்ணீரில் மூழ்கியே உயிரிழந்தனர், பஸ்ஸுக்கு அடியிலும், கால்வாய்க்குள்ளும் மேலும் சடலங்கள் இருக்கலாம் என்று அஞ்சப்படுகிறது. இதனால், இறந்தவர்களின் எண்ணிக்கை அதிகரிக்கலாம்.

பஸ் கட்டுப்பாட்டை இழந்தே கால்வாய்க்குள் விழுந்து விபத்துக்குள்ளானதாக முதற்கட்ட பொலீஸ் விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளது.

(க-8)

# சுமாத்திராவில் மீண்டும் நிலநடுக்கம்!

பண்டா அசே,ஜன.11

**இந்தோனேஷியாவின் சுமாத்திராத் தீவுப் பகுதியில் நேற்று அதிகாலை 4.13 இற்கு (இலங்கை நேரப்படி) மீண்டும் நிலநடுக்கம் ஏற்பட்டிருக்கிறது. இதனால், அப்பகுதி மக்கள் அச்சத்தில் ஓட்டம் பிடித்தனர்.**

**சுமாத்திராத் தீவின் மேற்குக் கடலோரப் பகுதியில் சுமார் 14 கிலோ மீற்றர் தூரத்தில் கடலுக்கு அடியில் இந்த நிலநடுக்கம் ஏற்பட்டுள்ளது. இது 5.7 ரிச்டர் புள்ளியாகப் பதிவாகியுள்ளது.**

**சுமாத்திராத் தீவின் மேற்குக் கடலோரப் பகுதிகளில் ஏற்பட்ட இந்த நிலநடுக்கத்தின் தாக்கத்தை இந்தோனேஷியா முழுவதும் உணரக் கூடியதாக இருந்தது. குறிப்பாக அசே மாகாணத்தின் தலைநகர் பண்டா அசேயை மிகக் கடுமையாக இந்த நிலநடுக்கம் குலுக்கியது.**

**இந்த நகரில் வீடுகள் குலுங்கியதால் மக்கள் அதிர்ச்சியடைந்தனர். இதனால், வீட்டை விட்டு வெளியேறிய மக்கள் அலறியபடி ஓடினர். மக்கள் கடும் பீதியுடன் காணப்படுவதால் தமது வீடுகளுக்குத் திரும்பாமல் அகதி முகாம்களில் தஞ்சமடைந்துள்ளனர்.**

**நேற்று இடம்பெற்ற இந்த நில நடுக்கம் கடந்த மாதம் ஏற்பட்ட நிலநடுக்கத்திற்குப் பிறகு உருவாகியுள்ள பெரிய நிலநடுக்கமாகும்.**

**இந்த நிலநடுக்கம் காரணமாக இந்தோனேஷியாவில் எந்த உயிரிழப்பும் ஏற்படவில்லை ஆனால், கட்டடங்கள் மற்றும் பொருள் சேதங்களே ஏற்பட்டிருப்பதாகத் தெரியவந்துள்ளது.**

**சுமாத்திராத் தீவுப் பகுதியில் இதுவரை நூற்றுக்கும் அதிகமான நில அதிர்வுகள் ஏற்பட்டுவிட்டன. இது இன்னமும் இரண்டு மாதங்களுக்கு நீடிக்கும் என்று நிபுணர்கள் எச்சரித்துள்ளனர்.**

**அமாவாசை தினத்தன்று சுமாத்திராத் தீவில் மீண்டும் பயங்கர நிலநடுக்கம் ஏற்படலாம் என்றும் ஏற்கனவே அவர்கள் கூறியுள்ளனர். அந்த எதிர்வுகூறலின் அடிப்படையிலேயே நேற்றைய நில நடுக்கமும் ஏற்பட்டிருக்கிறது.**

**நிலநடுக்கம் ஏற்பட்டதை அடுத்து முன்னெச்சரிக்கைப் பாதுகாப்பு நடவடிக்கையில் அரசு ஈடுபட்டிருக்கின்றது..**

(க-8)

## இந்தோனேஷிய அசேயில் பீதி மீட்புப் பணிகளுக்கு ஆபத்து!

இந்தோனேஷியாவின் அசே மாகாணத்தில் கிளர்ச்சியாளர்கள் துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்களை நேற்றுமுன்தினம் நடத்தியுள்ளனர். இச்சம்பவம் மூன்றாவது வன்முறைச் சம்பவமாகும். இதனால், மீட்புப் பணிகளுக்கு தடங்கல்கள் ஏற்பட்டுள்ளன.

இந்தோனேஷியாவில் பூகம்பம் மற்றும் சுனாமி அழிப்பேரலைகளால் ஒரு லட்சம் பேர் வரை உயிரிழந்தனர். இவர்களில் இதுவரை மீட்கப்படாத சடலங்களை மீட்கும் பணியில் ஐ.நா. மற்றும் பல்வேறு வெளிநாட்டுக் குழுக்களும் தொண்டு நிறுவனங்களும் ஈடுபட்டுள்ளன.

இதைச் சீர்குலைக்கும் வகையிலேயே கிளர்ச்சியாளர்கள் நேற்றுமுன்தினம் துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்களை நடத்தி பீதியை ஏற்படுத்தியுள்ளனர். அசே மாகாணத்தின் தலைநகரான பண்டா அசேயில் உள்ள பிரதிப் பொலீஸ்மா அதிபரின் வீட்டை நோக்கி கிளர்ச்சியாளர்கள் திடீரென துப்பாக்கியால் சுட்டனர் என்றும் -

இதற்குப் பதிலடி கொடுக்கும் வகையில் பொலீஸார் திருப்பிச்சுட்டனர் என்றும் -

இதனால், அப்பகுதியில் பதற்றம் ஏற்பட்டது என்றும் - பொலீஸார் தெரிவித்தனர். இந்தத் துப்பாக்கிச் சண்டை பத்து நிமிடங்கள் நீடித்தது என்றும் தெரிவிக்கப்பட்டது.

தாக்குதலில் ஈடுபட்ட கிளர்ச்சியாளர்களை பொலீஸார் பிடிக்க முனைந்தபோது அவர்கள் தப்பிச் சென்றுவிட்டனர். கிளர்ச்சியாளர்களின் இந்தச் செயலால் மீட்புப் பணியில் ஈடுபட்டுள்ள வெளிநாட்டுக் குழுக்கள் அச்சமடைந்துள்ளன என்று பொலீஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

## சுனாமியால் நிமோனியா வரும்! மருத்துவ நிபுணர்கள் எச்சரிக்கை

சுனாமியால் பாதிக்கப்பட்டோருக்கு நிமோனியா காய்ச்சல் மற்றும் சுவாசக்கோளாறுகள் பரவக்கூடிய அதிகவாய்ப்பு இருப்பதாக மருத்துவ நிபுணர்கள் எச்சரித்துள்ளனர்.

இதுகுறித்து இயற்கை என்ற மருத்துவ பத்திரிகையில் வெளியான தகவல்:-

சுனாமியால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் வயிற்றுப்போக்கு மற்றும் கொலரா பரவும் அபாயம் இருப்பதாக உலக சுகாதார அமைப்பு உட்படப் பல்வேறு மருத்துவ அமைப்புகள் எச்சரித்தன. பேரழிவுகள் நிகழ்ந்த 15 நாள்களுக்குப் பிறகுதான் இவ்வகை நோய்களின் தாக்கம் வெளியே தெரியவரும்.

சுகாதாரமில்லாத - சுத்தமில்லாத - தண்ணீர் மற்றும் கழிவுகளின் பெருக்கத்தால் உருவாகும் பற்றீரியாக்கள் இந்த நோய்களுக்கு முக்கிய காரணமாக அமைகிறது. இருப்பினும் முன்னெச்சரிக்கை காரணமாக ஓரளவு அது கட்டுப்படுத்தப் பட்டுவருகிறது.

ஆனால், நிவாரண முகாம்களில் நிலவும் நெரிசலால் நிமோனியா மற்றும் சுவாசக் கோளாறுகள் அதிகம் ஏற்பட வாய்ப்புப் பெருகி வருகிறது. சர்வதேச செஞ்சிலுவைக் குழுவின் அவசர நிவாரண உதவிக்குழுவின் சுகாதார அதிகாரி ஹேகன் சேண்ட்பிளத் கூறுகையில் -

"சுனாமி பாதித்த நாடுகளில் மழை, பாதுகாப்பற்ற தங்குமிடம் போன்ற காரணங்களால் நிமோனியா மற்றும் சுவாசக் கோளாறுகள் அதிகம் ஏறபட வாய்ப்புகள் இருக்கின்றன என்று எங்கள் மருத்துவக் குழுவினர் தெரிவிக்கின்றனர்" - என்றார்.

லண்டனைச் சேர்ந்த மருத்துவ உதவிக்குழு தகவல் தொடர்பாளர் மார்டின் பிராட்டன் கூறுகையில்-

இந்த நோய் தவிர்க்க முடியாதது என்ற நிலை ஏற்படக்கூடாது கொலராவைத் தடுக்க முன்னெச்சரிக்கை நடவடிக்கை எடுப்பதுபோல இதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் - என்றார்.(க-8)

உங்கள் விமானப் பயணத்திற்கு!
Aero Lanka
In Domestic Operation
New way of flying
Head Office
No.500, Galle Road, Wellawatte, Colombo - 06.
Tel.:2505632 - 3 Fax:2500626
Jaffna Office
No.86, PointPedro Road, Jaffna. Tel.:021-2226242
Fax:021-2225600
Trinco Office
No.47, Kandy Road, Trincomalee.
Tel.:026-2221519
Fax:026-2221519
Branch
No. 295, Jampettah Street, Colombo-13 Tel.:2430782 Fax:2430782
(C/38014)
கொழும்பு - யாழ். | யாழ். - கொழும்பு

## பூமி இன்னமும் அதிர்கிறது!

சிட்னி,ஜன.11

இந்தோனேஷியாவின் சுமாத்திராத் தீவில் கடந்த மாதம் 26ஆம் திகதி ஏற்பட்ட சக்தி வாய்ந்த பூகம்பத்தை அடுத்து, பூமி இன்னமும் அதிர்ந்துகொண்டிருக்கிறது. இந்த அதிர்ச்சி இன்னும் பல வாரங்களுக்குத் தொடரும் என்று ஆஸ்திரேலிய தேசியப் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர்.

இதுபற்றி அந்தப் பல்கலைக்கழகத்தின் புவி அறிவியல் ஆய்வுக் கல்லூரியைச் சேர்ந்த விஞ்ஞானி ஹெர்ப்மெக்குயின் கூறுகையில் தெரிவித்ததாவது:-

மிகமிக நுட்பமாக புவி ஈர்ப்பு விசை குறித்து ஆராய்வதற்காக கான்பெர்ராவில், மவுண்ட்ஸ்ட்ராம்லோ ஆய்வகத்தில் மிக சக்திவாய்ந்த கருவி நிறுவப்பட்டுள்ளது.

இந்தோனேஷியாவின் சுமாத்திரா அருகே இந்துமா சமுத்திரப் பகுதியில் ஏற்பட்ட பெரும் பூகம்பத்தை அடுத்து பூமி தொடர்ந்தும் அதிர்ந்து கொண்டிருக்கிறது என்பதை இக்கருவி பதிவு செய்துள்ளது. இந்த அதிர்வுகள் இன்னும் பல வாரங்களுக்குத் தொடரும் - என்றார் அவர்.(க-8)

## நேபாளத்தில் 300 பேர் விடுதலை

காத்மண்டு,ஜன.11

நேபாளத்தில் தாம் கடத்திச்சென்று பணயக் கைதிகளாக வைத்திருந்த 300 பேரை பொது மக்களின் நெருக்குதலை அடுத்து மாவோயிஸ்ட் தீவிரவாதிகள் விடுதலை செய்துள்ளனர்.

நேபாளத்தில் அரசை எதிர்த்துப் போராடி வரும் மாவோ தீவிரவாதிகள் வீதிப் போக்குவரத்துத் தடையை விதித்திருந்தினர். இத்தடையை மீறி தெற்கு நேபாளத்தின் ராதஹட் மாவட்டத்தில் லமாஹி என்ற பகுதியில் 6 பஸ்களில் சென்ற 300 பயணிகளை துப்பாக்கி முனையில் மாவோயிஸ்ட்டுகள் பணயக் கைதிகளாகக் கடத்திச் சென்றனர்.

தீவிரவாதிகளின் இந்தச் செயற்பாட்டுக்கு மனித உரிமைகள் பாதுகாப்பு அமைப்பும், பத்திரிகையாளர்களும் கடும் எதிர்ப்பை வெளிப்படுத்தினர். பொதுமக்களிடம் இருந்தும் கடும் நெருக்குதல் வந்தன. இதன்பின்னர், 6மணி நேரம் கழித்து 300 பயணிகளையும் மாவோ தீவிரவாதிகள் விடுவித்தனர். (க-8)

## சூடானில் சமாதான ஒப்பந்தம் கைச்சாத்து!

சூடானிய அரசுக்கும், கிளர்ச்சிக் குழுவுக்கும் இடையே சமாதான -அமைதி - உடன்பாடு கைச்சாத்திடப்பட்டுள்ளது. ஆபிரிக்காவில் மிக நீண்ட காலம் நடந்து, லட்சக்கணக்கான மக்களைப் பாதித்த உள்நாட்டுப் போருக்குத் தீர்வு கிட்டியிருக்கிறது.

இந்தச் சமாதான உடன்பாட்டை அடுத்து சூடானின் தார்பூர் பிராந்திய மக்கள் பெரும் மகிழ்ச்சியடைந்துள்ளனர். ஆபிரிக்க ஒன்றியத்தின் ஏற்பாட்டில் நடைபெற்றுவந்த இந்த சமாதான - அமைதி - பேச்சுகளில் பல சிக்கல்கள் இருந்துவந்தன.

இருதரப்பினரும் இந்த பேச்சுகளில் அடிக்கடி பல முட்டுக்கட்டைகளைப் போட்டு வந்தாலும், இப்போது அரசுக்கும், பிரதான தென் பகுதி கிளர்ச்சிக் குழுவுக்கும் இடையில் ஒரு முழுமையான சமாதான - அமைதி - ஒப்பந்தம் ஏற்பட்டுள்ளது.

செச்சினியத் தலைநகர் நைரோபியில் விமர்சையாக நடைபெற்ற விழாவில் சூடான் துணை ஜனாதிபதி அலி உஸ்மான் தாஹாவும் எஸ்.பி.எல்.ஏ. கிளர்ச்சிக்குழுவின் தலைவர் ஜோன்கிரான்ங் ஷேக்கும் இந்தச் சமாதான - அமைதி - ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டனர். அச்சமயம் அங்கு கூடியிருந்த ஆபிரிக்கருக்கான சூடானிய அகதிகள் ஆடிப் பாடி தமது மகிழ்ச்சியைத் தெரிவித்தனர்.

ஒப்பந்தத்தில் கையெழுத்திட்ட பின்னர் பேசிய சூடானிய துணை ஜனாதிபதி தாஹா கூறுகையில் "இன்னும் சில வாரங்களில் தேசிய ஐக்கிய அரசு ஒன்று உருவாகும்" - என்று தெரிவித்தார்.

தார்பூர் பிராந்தியத்தில் ஏற்பட்டுவந்த வன்முறையில் 70ஆயிரத்திற்கும் அதிகமானவர்கள் இதுவரை கொல்லப்பட்டிருக்கின்றனர்; பலர் அகதிகளாக இடம்பெயர்ந்துள்ளனர்.

அரசுக்கும், கிளர்ச்சியாளர்களுக்கும் இடையில் இடம்பெற்றுவரும் மோதலை நிறுத்தி தார்பூரில் ஒரு நிரந்தர சமாதானத்தை - அமைதியை - ஏற்படுத்த ஆபிரிக்க ஒன்றியம் முழுவீச்சில் செயற்பட்டது. இந்த ஒன்றியத்தின் தலைவரான நைஜீரிய ஜனாதிபதி,

சூடானில் அமைதியை ஏற்படுத்தும் வரை தமது முயற்சிகளைக் கைவிடப்போவதில்லை - என்று தெரிவித்திருந்தார்.

அவர் இவ்வாறு கூறி ஓரிரு நாள்களின் பின்னரே இரு தரப்பினருக்கும் இடையில் ஒரு முழுமையான சமாதான - அமைதி - ஒப்பந்தம் ஏற்பட்டிருக்கின்றமை குறிப்பிடத்தக்கது.

(க-8)

# விதைபொருள் தட்டுப்பாட்டை நீக்க கிளிநொச்சியில் விசேட நடவடிக்கை

கிளிநொச்சி மாவட்டத்தில் நல்லின விதை நெல்லின் தட்டுப்பாட்டினை நீக்கும் பொருட்டு, விவசாயத் திணைக்களம், விதை நெல் உற்பத்தியாளர்களை ஊக்குவிக்கும் நடவடிக்கைகளை எடுத்துள்ளது.

இத்திட்டத்தின் ஒரு கட்டமாக, விவசாயத் திணைக்கள கிளிநொச்சி மாவட்ட உதவி விவசாய பணிப்பாளர் (விரிவாக்கம்) திருமதி சீ. ஆனந்தராசா 30 விவசாயிகளை தெரிவுசெய்து இவர்கள் மூலம் விதைநெல் உற்பத்தி மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

இவர்களுக்கான விதைநெல் மற்றும் உள்ளீடுகளை உணவு விவசாயத்தாபனம் வழங்கியுள்ளது.

இது தொடர்பாக தெரிவிக்கப்பட்டதாவது:- எதிர்காலத்தில் விதைநெல் உற்பத்தியாளர்களை மேலும் கூட்டுவதன் மூலம் விதைநெல்லின் தேவை முழுமைசெய்யப்படும்.

அத்துடன், யாழ்ப்பாணம் போன்ற ஏனைய மாவட்டங்களுக்கும் விதைநெல் வழங்க நடவடிக்கை எடுக்கப்படும்.

இதேபோன்று ஏனைய பயிர் உற்பத்திக்கும், உபஉணவு மற்றும் சிறுதானியம், எண்ணை வித்துப் பயிர்கள், மரக்கறிப் பயிர்கள் போன்றவற்றின் விதை உற்பத்தியாளர்களையும் தெரிவுசெய்து விதை உற்பத்தி மேற்கொண்டால் இம்முறை பெரும்போகத்திற்கு கிளிநொச்சி மாவட்டத்தில் ஏற்பட்ட விதைபொருளகளுக்கான தட்டுப்பாடு இனிமேல் ஏற்படாது என்று தெரிவிக்கப்பட்டது. (4-352-204)

# 50 வருடங்களாகச் சேவையாற்றும் வேரவில் மருந்தகத்தில் வசதியீனம்

## சீர்செய்யுமாறு மக்கள் கோரிக்கை

வேரவில்,ஜன.11

வேரவில் அரசினர் மருந்தகம் 50 வருடங்களுக்கு மேல் சேவையாற்றி வருகின்ற போதிலும அதன் திருத்தவேலைகள் எதுவும் செய்யப்படாது உள்ளமையால் மக்கள் பெரும் சிரமத்தை எதிர்கொண்டு வருகின்றனர்.

பாலாவி, பொன்னாவெளி, கிராஞ்சி, வலைப்பாடு, மொட்டையன் குளம், மாதிரிக்கிராமம், பிருந்தாவனம், இல்வன்குடா, சிவபுரம் ஆகிய கிராம மக்களுக்கு சேவையாற்றிவரும் மேற்படி மருந்தகம் நோயாளர் பராமரிப்புக்கான இடம், ஆண்கள் விடுதி, பெண்கள் விடுதி எதுவும் இன்றிக் காணப்படுகின்றது.

அத்துடன் நோயாளர்களுக்குத் தேவையான மருந்துவகைகள். பரிசோதனைக் கருவிகள் ஆகியனவும் இங்கு குறிப்பிட்ட அளவிலேயே உள்ளன.

நவீன பரிசோதனைக் கருவிகள் எதுவும் இந்த மருந்தகத்திற்கு வழங்கப்படவில்லை.

சவக்காலை கூட பல ஆண்டாகத் திருத்தப்படாமல் உள்ளது. இதனால் மக்கள் பெரும் அசௌகரியங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

எனவே, அந்த மருந்தகத்தை உரிய தரப்பினர் கவனத்தில் எடுத்துப் புனரமைத்து மக்களின் நல்வாழ்வுக்கு உதவுமாறு அப்பகுதி மக்கள் கேட்டுள்ளனர். (4-323-203)

# முல்லைத்தீவில் புனர்வாழ்வுப் பணிகளை விரைவில் மேற்கொள்ள வேண்டுகோள்

ஒட்டுசுட்டான்,ஜன.11

முல்லைத்தீவில் ஏற்பட்ட இயற்கையனர்த்தத்தால் பாதிக்கப்பட்டுப் பாடசாலைகளில் முகாமிட்டுள்ள மக்களுக்கான புனர்வாழ்வுப் பணிகளை விரைவில் அரசு மேற்கொள்ள வேண்டும் என்று பொது அமைப்புக்கள் கோரியுள்ளன.

பாடசாலைகள் தொடங்கப்பட்டுள்ள இந்நாள்களில் அங்கு முகாமிட்டுள்ள மக்கள் இருப்பிடமின்றி வெளியேற முடியாதுள்ளனர். இதனால் மாணவர்களின் கல்வியில் பாதிப்பு ஏற்படும். எனவே, மக்களுக்கு வேண்டிய தற்காலிகக் கொட்டகைகளையேனும் அமைத்து அவர்களைத் தங்கவைக்க வேண்டும்.

அத்துடன் முல்லைநகரின் பாடசாலைகளில அநேகமானவை அழிந்துவிட்டது. அவற்றைப் வெகுவிரைவில் புனரமைத்துக் கல்வியை மேம்படுத்த உதவவேண்டும் என்றும் பொது அமைப்புக்கள் கோரிக்கை விடுத்துள்ளன. (8-341-202)

# வீதி ஒழுங்குகளைக் கடைப்பிடிக்குமாறு தமிழீழ காவல்துறையினர் கோரிக்கை

கிளிநொச்சி,ஜன.11

துவிச்சக்கர வண்டி மற்றும் மோட்டார் சைக்கிள ஓட்டுநர்களை வீதி ஒழுங்குகளை கடைப்பிடிக்குமாறு தமிழீழ காவல்துறையின் வாகனப் போக்குவரத்துப் பிரிவுப் பொறுப்பாளர் சி. சிவகுமாரன் கேட்டுள்ளார்.

இவ்விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:-

சுனாமி அனர்த்தம் காரணமாக எமது மக்கள் இடம்பெயர்ந்து கிளிநொச்சிப் பகுதியில் வாழ்ந்து வருகின்றனர். இவர்களுக்கு உதவி செய்யும் நோக்கத்துடன் தென் பகுதியிலிருந்தும் யாழ்.மாவட்டத்திலிருந்தும் அரச மற்றும் அரசசாரா நிறுவனங்களும் சுனாமி அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்களின் உறவினர்களும் ஏ-9வீதியினூடாக எமது பகுதிக்கு ஒவ்வொரு வாகனங்களில் வந்துசெல்கின்றனர்.

இவ் வீதிகளில் போக்குவரத்துக்கு இடையூறாக பக்கம் பக்கமாக தங்கள் துவிச்சக்கர வண்டிகளையும் மோட்டார் சைக்கிள்களையும் ஓட்டுகின்றனர்.

இதனால் போக்குவரத்துக்கு இடையூறு ஏற்படுவதுடன் விபத்துக்களும் ஏற்பட வழிசமைக்கின்றது.

இதனால் வீதிப் போக்குவரத்துகளை கடைப்பிடிக்குமாறும் அதனை மீறி நடக்கும் ஓட்டுநர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் - என்றார். (8-204)

# அக்கராயன் கமநல நிலையத்தில் இரசாயன மருந்துகள் தேக்கம்!

## 15லட்சம் ரூபா பெறுமதியானவை

பரந்தன்,ஜன.11

கமநல சேவை திணைக்களத்தின் அக்கராயன் கமநல சேவை நிலையத்தில் 15லட்சம் ரூபா பெறுமதியான இரசாயன மருந்துப் பொருள்கள் தேங்கிக் கிடப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கடநத யுத்த காலங்களில் விவசாயப்பொருள்களுக்கு அரசினால் மட்டுப்படுத்தப்பட்ட அளவு தடைவிதிக்கப்பட்டது.

அப்போது தென்னிலங்கையில் இருந்து கிளிநொச்சி மாவட்டத்திற்கு விவசாயத் தேவைகளுக்காக கொண்டுவரப்பட்ட மேற்படி இரசாயனப் பொருள்களே இதுவரை விற்பனை செய்யப்படாது தேக்க நிலையில் வைக்கப்பட்டுள்ளதாக அக்கராயன் கமநல சேவை நிலையத்தை சேர்ந்தவர்கள் தெரிவித்துள்ளனர்.

இதனை கமநல சேவை நிலைய உயர் அதிகாரிகளும் ஏற்றுக்கொண்டுள்ளனர்.

இந்த இரசாயன கிருமிநாசினிகளை பயன்படுத்தாது தேக்கி வைக்கப்பட்டுள்ளதால், மக்களின் பெருமளவு பணம் முடக்கப்பட்டுள்ளதாக விவசாயிகள் விசனம் தெரிவித்திருக்கின்றனர். (4-352-204)

## உதவிப்பொருள்கள் வழங்கப்பட்டன

ஒட்டுசுட்டான்,ஜன.11

மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட முத்துஐயன்கட்டு 18 ஏக்கர் பகுதியில் உள்ள 22 குடும்பங்களுக்கும், சமளங்குளம் பகுதியில் குடியேறிய 11 குடும்பங்களுக்கும் ஏ.எஸ்.பி. நிறுவனத்தின் அனுசரணையுடன் முல்லைத்தீவு மாவட்ட பொருண்மிய மதியுரையகத்தால். கடந்த முதலாம் திகதி உதவிப்பொருள்கள் வழங்கப்பட்டுள்ளன.

கூரை விரிப்புகள், நுளம்பு வலைகள், பிளாஸ்ரிக் வாளிகள், பாய், பெற்சீற், சவர்க்காரம் என 2 ஆயிரத்து 500 ரூபா பெறுமதியான பொருள்கள் வழங்கப்பட்டுள்ளன. (8-203-341)

✣ ✣ ✣

புதுக்குடியிருப்பு,ஜன.11

இயற்கை அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்டு நலன்புரி நிலையங்களில் உள்ள முல்லைத்தீவு மக்களுக்கு மக்கள் வங்கியின் தலைமைப் பணிமனையினர் முல்லைத்தீவுக் கிளையுடன் இணைந்து உதவிப்பொருள்களை வழங்கியுள்ளனர்.

இவர்கள் பாய்கள், வாளிகள், பால்மா, சவர்க்காரம், பெறசீற், துவாய், பிஸ்கட் ஆகிய பொருள்களை வழங்கியுள்ளனர். (8-203-352)

## யாழ்.ஆயருடன் பாப்பரசரின் பிரதிநிதி முல்லைத்தீவையும் பார்வையிட்டார்

புதுக்குடியிருப்பு,ஜன.11

அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட முல்லைத்தீவுப் பிரதேசத்தையும் அதனைச் சூழவுள்ள பிரதேசங்களையும் பாப்பரசரின் பிரதிநிதியும் யாழ்.மறைமாவட்ட ஆயர் தோமஸ் சௌந்தர

கிளிநொச்சி வன்னிச் செய்திகள் முல்

நாயகம் ஆகியோர் கடந்த 5ஆம் திகதி நேரில் சென்று பார்வையிட்டனர். அங்குள்ள அழிவடைந்த தேவாலயங்களைப் பார்வையிட்டதுடன் நலன்புரி நிலையங்களில் உள்ள மக்களையும் பார்வையிட்டு அவர்களுக்கு ஆ[illegible] வார்த்தைகளும் கூறினர். (4-203-353)

# முகாம்களில் தங்கியுள்ள மக்களின் உளநலம் பாதிக்கப்படக் கூடாது

## இதற்காகவே அரங்க நிகழ்வுகள் நடைபெறுகின்றன

பரந்தன்,ஜன.11

இயற்கை அனர்த்தம் காரணமாக தம் கண்ணுக்கு முன்னே எத்தனையோ உறவுகளை இழந்து தற்போது நலன்புரி முகாம்களில் வாழ்ந்து வருகின்ற மக்களின் எதிர்கால வாழ்வில் உளப்பாதிப்பு ஏற்படக்கூடாது என்பதற்காகவே அரங்கச் செயற்பாட்டுக் குழுவினரால் இந்த அரங்க நிகழ்வுகள் நடத்தப்பட்டு வருகின்றன.

இவவாறு தெரிவித்தார் முல்லைத்தீவு மாவட்ட மகளிர் அரசியல் துறைப் பொறுப்பாளர் செல்வி வேழினி.

அரங்க நிகழ்வுகளை நலன்புரி நிலையங்களில் நடத்துவதன் நோக்கம் தொடர்பாக அவரிடம் கேட்ட போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது தொடர்பாக வேழினி மேலும் தெரிவித்ததாவது:

கடல் அனர்த்தத்தினால் பாதிப்படைந்த மக்கள் தற்போது நலன்புரி நிலையங்களில் தங்கவைத்து பராமரிக்கப்பட்டு வருகின்றனர். இவர்களில் சிறுவர்களே அதிகம் காணப்படுகின்றனர். இவர்களின் மனநிலை பாதிக்கப்பட்டுள்ளதை நாம் அவதானித்தோம். இதனால், இவர்களது எதிர்கால வாழ்விலும் இப்படியானதொரு பாதிப்பு இருக்கக் கூடாது என்பதற்காக அரங்க நிகழ்வுகளை நடத்தி வருகின்றோம்.

இதன் முதற்கட்டமாக முல்லைத்தீவு கைவேலி கணேசா வித்தியாலய நலன்புரிநிலையத்தில் அரங்க நிகழ்வை நடத்தினோம். இதன் முன்னேற்றத்தின் அடிப்படையில் ஏனைய நலன்புரி நிலையங்களிலும் செயற்படவுள்ளோம்.

நலன்புரி நிலையங்களில் உள்ள பாதிக்கப்பட்ட மக்களுக்கு தமிழீழ சுகாதார சேவையினர் சுகாதார நடவடிக்கைகளையும் உணவு மறறும் ஏனைய விடயங்களை தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தினரும் மேற்கொண்டு வருகின்றனர்.

இந்த அரங்கச் செயற்பாடுகளை நாம் நலன்புரி நிலையங்களில நடைமுறைப்படுத்திய பின்னர் அங்குள்ள சிறுவர்கள் கொஞ்சம் கொஞ்சமாக இயல்பு நிலைக்குத் திரும்புவதைக் காண முடிகிறது - என்றார். (8-203-352)

## பட்டம்விட்ட சிறுவன் தவறுதலாக கிணற்றில் வீழ்ந்து மரணம்

விசுவமடு,ஜன.11

பட்டம் விடச் சென்ற சிறுவன் கிணற்றுக்குள் தவறி வீழ்ந்து பரிதாபகரமாக உயிரிழந்தார்.

இச்சம்பவம் புத்தூர் கிழக்கு விக்னேஸ்வரா வீதியில் இடம்பெற்றது. அதே இடத்தைச் சேர்ந்த சுதாகரன் தமிழின்பன் (வயது 8) எனற சிறுவனே இவ்வாறு பரிதாபகரமாக உயிரிழந்துள்ளார். (8-203-402)

## உறவினர் வீடுகளில் தங்கும் பாதிப்புற்றோருக்கும் உதவி

புதுக்குடியிருப்பு,ஜன.11

இயற்கை அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்டு நலன்புரி நிலையங்களிலும் உறவினர்களின் வீடுகளிலும் தஞ்சமடைந்துள்ள முல்லைத்தீவுப் பிரதேச மக்களுக்கு உலர் உணவுப் பொருள்களும் உணவு அல்லாத பொருள்களும் வழங்கப்பட்டு வருகின்றது.

நலன்புரி நிலையங்களில் உள்ள ஆயிரத்து 103 குடும்பங்களுக்கும், உறவினர் வீட்டில் உள்ள 985 குடும்பங்களுக்கும் இந்தப் பொருள்கள் வழங்கப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (203-353)

# முல்லைத்தீவு கரையோரப் பாடசாலைகளும் பாலங்களும் அழிவடைந்துள்ளன

## அரச அதிபர் தெரிவிப்பு

முல்லைத்தீவில் ஏற்பட்ட ஆழிப்பேரலையால் நகரின் கரையோரப் பாடசாலைகளும் 7 பாலங்களும் அழிவடைந்துள்ளதாக முல்லைத்தீவு அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் தெரிவித்தார்.

வவுனியா அரச செயலகத்தில் இடம்பெற்ற வடக்கு-கிழக்கு ஆளுநருடனான சந்திப்பின் போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:- நகரின் முக்கியமான பாலங்கள் சேதமுற்றிருப்பதால் பாதைகள் தடைப்பட்டுள்ளது. அத்துடன், பாடசாலைகள் அதிகமாகப் பாதிக்கப்பட்டுள்ளதுடன் இடம்பெயர்ந்தவர்களும் பாடசாலைகளில் தொடர்ந்தும் தங்கவைக்கப்பட்டிருப்பதால் உரியமுறையில் பாடசாலைகளை ஆரம்பிக்க முடியாத நிலையிலும் எமது மாவட்டம் இருக்கின்றது.

ஆழிப் பேரலையினால் முல்லைத்தீவு மாவட்டதில் ஒரே பாடசாலையில் கல்வி கற்று வந்த 300இற்கும் மேற்பட்ட மாணவர்கள் கொல்லப்பட்டிருக்கலாம். அத்தோடு, முல்லைத்தீவு மாவட்டத்தில் இறந்தவர்களில் 700 வரையிலானோர் பாடசாலை மாணவர்கள்- என்றார் அவர். (8-341-202)

## தொலைபேசி இணைப்புக்கள் கிளிநொச்சியில் சீரில்லை.

திருவையாறு,ஜன.11

கிளிநொச்சிப் பிரதேசத்திற்கு வழங்கப்பட்டுள்ள தொலைபேசி இணைப்புகள் சீரற்ற முறையில் இயங்கி வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இதனால் மக்கள், வியாபாரிகள், அரச சார்பற்ற நிறுவனங்கள் எனப் பலரும் பெரும் அசௌகரியங்களை அடைந்து வருகின்றனர் எனவும் -

இது தொடர்பாக உரியவர்களுக்கு அறிவித்தும் அவர்கள் எதுவித நடவடிக்கைகளையும் எடுக்கவில்லை என்று அப்பகுதி மக்கள் தெரிவித்துள்ளனர். அத்துடன், புதிய தொலைபேசி இணைப்புகளுக்காக எத்தனையோ பேர் விண்ணப்பித்திருந்தும் மட்டுப்படுத்தப்பட்ட அளவிலேயே தொலைபேசி இணைப்புகள் வழங்கப்பட்டு வருவதாகவும் அவர்கள் மேலும் கவலை தெரிவித்துள்ளனர். (4-203-393)

உதயன்
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி, தொலைநகல் - 222 2030, 222 2083, 222 3837.

# பல சுனாமிகளை எதிர்கொண்ட தமிழர்

சுனாமிப் பேரலை அனர்த்தத்தை அடுத்து இலங்கையின் பல்வேறு பகுதிகளிலும் மேற்கொள்ளப்பட்ட அவசர மீட்புப்பணிகள் மற்றும் நிவாரண் நடவடிக்கைகள் குறித்து சர்வதேச அவதானிகளின் கருத்துக்கள் இப்போது வெளியாகி வருகின்றன.

அரசுக் கட்டுப்பாட்டுப் பகுதிகளிலும், புலிகளின் பிரதேசங்களிலும் மேற்கொள்ளப்பட்ட அவசர மீட்புப்பணிகளை ஒப்பிடும் சர்வதேச ஊடகவியலாளர்கள், அரச இயந்திரத்தின் மெத்தனப்போக்கைக் குறைகூறும் அதேசமயம், துரிதமாகவும் ஒழுங்குபடுத்தப்பட்ட முறையிலும் புலிகளின் பிரதேசங்களில் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளை மெச்சவும் தவறவில்லை.

"ஆழிப்பேரலை தமிழீழத்தைத் தாக்கிய சில நிமிடங்களிலேயே தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தினரையும், விடுதலைப் புலிகளையும் கடற்கரையோரங்களிலும், பாதிக்கப்பட்ட பிரதேசங்களிலும் காணக்கூடியதாக இருந்தது.

"சிலமணி நேரத்திலேயே விடுதலைப் புலிகள் பல அகதி முகாம்களை ஏற்படுத்தினர். குறுகிய நேரத்திலேயே தற்காலிக மருத்துவ முகாம்கள் ஏற்படுத்தப்பட்டு தேவையான மருத்துவ வசதிகளும் செய்யப்பட்டன. காயமடைந்தவர்களை அவர்களின் நிலைமைக்கேற்ப தரவரிசையாகப் பிரித்து உடனுக்குடன் அவர்களுக்கு சிகிச்சை அளித்தது மட்டுமன்றி, அவர்களை வைத்தியசாலைகளுக்கும் அனுப்பிவைத்தனர்."

- இவ்வாறு சர்வதேச ஊடகவியலாளர் ஒருவர் வியந்து பாராட்டியிருக்கின்றார். அவர் குறிப்பிட்டுள்ள மற்றுமொரு விடயமும் இங்கு கவனிக்கத்தக்கது.

"அனர்த்தம் நடைபெற்ற அன்று தென்னிலங்கையில் இடம்பெற்றது போன்று விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் எந்தவொரு திருட்டுச் சம்பவங்களும் இடம்பெற்றிருக்கவில்லை. அதேபோன்று வீதிகளில் நிவாரணப்பொருள்களுடன் வண்டிகள், வாகனங்கள் வரும்போது அப்பிரதேச மக்கள் அந்த வண்டிகளின் பின்னால் நிவாரணப்பொருள்களைப் பெறும் பொருட்டு ஓடி அலைவதையோ அல்லது அம்மக்கள் உணவிற்காகக் கையேந்தி நிற்பதையோ காணமுடியவில்லை."- என்றும் அவர் சுட்டிக்காட்டியிருந்தார்.

இப்படி புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் அவர்கள் மீட்பு மற்றும் நிவாரண நடவடிக்கைகளைத் திட்டமிடப்பட்ட முறையில் ஒழுங்குரீதியாக மேற்கொண்டதை அவதானித்த வெளிநாட்டுச் செய்தியாளர் ஒருவர், உள்ளூர் தமிழ்ப் பத்திரிகையாளர் ஒருவரிடம், தமது வியப்பைத் தெரிவித்ததோடு, ஒரு கேள்வியையும் எழுப்பினார்.

"இவ்வளவு தயார் நிலையில் இருந்தவர்கள்போல புலிகளும், புனர்வாழ்வுக் கழகத்தினரும் செயற்பட்டிருக்கின்றனர். சுனாமிப் பேரலைத் தாக்கம் ஏற்படும் என்று தயாரிப்புகளோடு புலிகள் அதை எதிர்பார்த்துக் காத்திருந்தார்களா?"- என்பதுதான் அவரின் கேள்வி.

"இல்லை இல்லை தென்னிலங்கையைப் பொறுத்தவரை சுனாமிப் பேரலைத் தாக்கம் புதிய அனுபவமாக இருக்கலாம்.

"ஆனால், தமிழர்களுக்கு அவை புதியவையல்ல. பேரினவாதம் - மேலாண்மை வாதம் - என்ற கணக்கில் சுழன்றடித்த பேரினவாத அலைகளின் தாக்குதல்களை கடந்த 50 ஆண்டு காலமாக அவர்கள் சந்தித்தும் அனுபவித்தும் வந்திருக்கின்றார்கள். இனக் கலவரம், இராணுவ அடக்குமுறை, கொடூரப்போர் என்ற பெயர்களில் தாக்கிய பல 'சுனாமி' அலைகளை எதிர்கொண்டு, அழிந்து, அதிலிருந்து மீண்டவர்கள் அவர்கள். அழிவும் இடப்பெயர்வும், அகதிவாழ்வும், அவலமும் அவர்களின் பட்டறிவு அனுபவங்கள். அதனால் அது போன்ற ஓர் அனர்த்தத்தை அவர்கள் எதிர்கொண்டதில் வியப்பேதுமில்லை. அனர்த்தம் ஏற்பட்டதும் விரைந்து மீட்பு, நிவாரணப் பணிகளை மேற்கொள்ளும் செயற்பாடு அவர்களின் வாழ்வோடு ஒட்டிய விவகாரம். அழிவிலிருந்து உயிர்ப்போடு எழுச்சி கொள்வது அவர்களின் இரத்தத்துடன் ஒட்டிய அம்சம்" - என்று பதிலளித்தார் அந்தத் தமிழ்ப் பத்திரிகையாளர்.

இத்தகைய கட்டமைப்பு ஒழுங்கும் திட்டமிட்ட செயற்பாடும் சரியான வழிநடத்தலும் உள்ள அமைப்பினால்தான் நிவாரண, மீள் கட்டமைப்புப் பணிகளை சரியாகவும், நேர்மையான முறையிலும், பாரபட்சமின்றியும் முன்னெடுக்கமுடியும்.

எனவேதான், ஆழிப்பேரலை அனர்த்தத்தால் பாதிப்புற்ற தமிழர் தாயகத்திற்கென சர்வதேச சமூகம் தரும் உதவிகளையும் செயற்றிட்டங்களையும் அப்பகுதிகளுக்கென புலிகள் உருவாக்கியுள்ள கட்டமைப்புக்கள் மூலம் வழங்கிச் செயற்படுத்துமாறு ஈழத்தமிழர்கள் கோருகின்றனர். நியாயமான அக்கோரிக்கைக்கு செயல்திறன் அற்ற இலங்கை அரசு செவிசாய்க்குமா?

# சுனாமியால் ஏற்பட்ட அனர்த்தங்களை அரசியலுக்காகப் பயன்படுத்த வேண்டாம்

## சர்வதேசத்துக்கு பத்மினி எம்.பி. வேண்டுகோள்



யாழ்ப்பாணம்.ஜன.11

சுனாமி பேரலையின் அனர்த்தங்களை அரசியலுக்குப் பயன்படுத்தாது இலங்கை ஜனாதிபதிக்கு அழுத்தம் கொடுக்க சர்வதேச சமூகம் முன்வரவேண்டும்.

இவ்வாறு சர்வதேச நாடுகளுக்கு அழைப்பு விடுத்துள்ளார் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் திருமதி பத்மினி சிதம்பரநாதன்.

சுனாமி அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட தமிழர் பிரதேசங்களை ஐ.நா செயலாளர் நாயகம் கோபி அனான் நேரில் வந்து பார்வையிடவேண்டும் என்பதனை வலியுறுத்தி அகதிகளுக்கான ஐ.நா. அலுவலகம் முன்பாக கவன ஈர்ப்புப் போராட்டம் ஒன்று நேற்றுமுன்தினம் இடம்பெற்றது.

அதில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே பத்மினி எம்.பி. இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர்மேலும் தெரிவித்ததாவது:-

சுனாமி அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட எமது மக்களுக்கு வேண்டிய உதவிகளை விடுதலைப் புலிகளுடன் இணைந்து செயற்படுத்தப்போவதாகவும் எவ்வித வேறுபாடுகளுமின்றி சகல செயற்பாடுகளும் மேற்கொள்ளப்படும் எனவும் கூறிய ஜனாதிபதி இன்று தமிழ் மக்கள் மீது பாரபட்சம் காட்டிச் செயற்பட்டு வருகிறார்.

எமது மக்கள் படும் துன்ப துயரங்களை ஐ.நா.செயலாளர் நாயகம் நேரில் வந்து பார்வையிடாதது ஓர் அரசியல் நோக்கமே அரசின் நடவடிக்கைகள் எமது மக்களை அதிருப்திக்குள்ளாக்கியிருக்கின்றன, என்றார்.

இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் சிரேஷ்ட துணைப் பொதுச் செயலாளர் எஸ்.பஞ்சலிங்கம் தனதுரையில்-

மனித நேயம் மிக்க பணிக்கு அரசியல் தலையீடு வேண்டாம். தமிழர், சிங்களவர் என்ற வேறுபாடுகள் காட்டப்படக் கூடாது. இது ஒரு தனியரசு காலகெதியில் நாங்கள் அவரை இங்கு அழைப்போம் என்றும் குறிப்பிட்டார்.

(10 -5,111,86)

# நலன்புரி நிலையங்களில் சுகாதாரம்பேண உள்ளூராட்சி செயலாளர்கள் ஆவன செய்யவும்

## உள்ளூராட்சி உதவி ஆணையாளர் வேண்டுகோள்

யாழ்ப்பாணம்,ஜன.11

சுனாமி கடற்கொந்தளிப்பினால் பாதிக்கப்பட்டு முகாம்களில் தங்கியிருப்போருக்குத் தேவையான தற்காலிக மலசல கூட வசதிகளை ஏற்படுத்தி சுகாதாரம் பேண சகல செயலாளர்களும் உடன் முன்வர வேண்டும்.

இவ்வாறு யாழ்.பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் க.இராசையா சகல உள்ளூராட்சிச் சபைகளின் செயலாளர்களையும் கேட்டுள்ளார்.

முகாம்களில் உள்ளவர்களுக்கும் மக்கள் செறிந்து வாழும் பகுதிகளுக்கும் சுத்தமான குடிதண்ணீர் உடன் கிடைக்க வழிவகை செய்யவேண்டும்.

பௌசர்கள் மூலம் தண்ணீர் விநியோகிக்கப்பட வேண்டும்.

பொதுக்கிணறுகள், தனியார் கிணறுகள் என்பன சுத்தம் செய்யப்பட்டு குளோரின் உடன் இடப்படவேண்டும் இதற்கென ஏனைய உள்ளூராட்சிச் சபைகளில் உள்ள சுகாதாரத் தொழிலாளர்களை முழுமையாகப் பயன்படுத்தலாம்.

மேலும் திண்மக்கழிவுகளைப் பொருத்தமான இடத்திற்கு அப்புறப்படுத்துவதுடன் மலசல கூடக் கழிவுகளையும் அப்புறப்படுத்தி சுகாதார நிலையை ஏற்படுத்த வேண்டும்என அவர் மேலும் கேட்டுள்ளார்.

இதேவேளை, முறையாகச் சுகாதாரம் பேணப்படாத இடங்களில் உள்ள நலன்புரி நிலையங்களில் பொறுப்பாளர்கள் அவ்வப்பகுதி பிரதேசசபை, நகர சபை ஆகியவற்றின் திட்டமிடற்பிரிவு உள்ளூராட்சி உதவியாளர்களுடன் தொடர்புகொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளனர். (10-185)

# தென்பகுதி மீன் சந்தைகளில் நன்னீர் மீன்களுக்குக் கிராக்கி

கொழும்பு,ஜன.11

சுனாமி பேரலைகளின் அனர்த்தம் காரணமாக தென்பகுதியில் உள்ள மீன் சந்தைகளில் நன்னீர் மீன்களுக்குப் பெரும் கிராக்கி ஏற்பட்டுள்ளது.

இதனால் குளங்கள் மற்றும் ஆறுகளில் பிடிக்கப்படும் நன்னீர் மீன்கள் கிலோ 80ரூபா முதல் 150ரூபா வரை விற்பனை செய்யப்பட்டு வருகின்றன. சுனாமி அனர்த்தத்தின் பின்னர் கடல்மீன்கள் சந்தைக்கு வராமையே இந்தக் கிராக்கிக்குக் காரணமாக அமைந்துள்ளது.

வருடாந்தம் 3லட்சம் மெற்றிக்தொன் மீன்கள் இலங்கையில் பிடிக்கப்பட்டு வந்தன. அதில் 12 ஆயிரத்து 386 மெற்றிக் தொன் மீன்கள் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டன. எஞ்சிய மீன்களே உள்ளூர் சந்தைகளில் விற்பனைக்கு வந்தன.

தற்பொழுது கடல் மீன்களை இந்நாட்டு மக்கள் உண்ண விரும்பாமையால் அவற்றின் விற்பனை பெரும் வீழ்ச்சி கண்டுள்ளதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

கடற்தொழிலாளர்களில் 12 ஆயிரத்து 83 பேர் அண்மையில் ஏற்பட்ட சுனாமி அனர்த்தத்தின் காரணமாகப் பலியாகியுள்ளதுடன் சுமார் 32 ஆயிரம் மீன்பிடிப் படகுகள் அழிந்து போயுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (10)

# அழிந்த சொத்துக்கள் ஆவணப்படுத்தப்படும்

யாழ்ப்பாணம்.ஜன.11

சுனாமி பேரனர்த்தத்தினால் அழிவடைந்த உள்ளூராட்சிச் சபை சொத்துக்கள் - கட்டடங்கள் வீடியோப் படம் மூலம் ஆவணமாக்கப்படவுள்ளன.

பேரனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட பருத்தித்துறை பிரதேச சபை, வல்வெட்டித்துறை நகர சபை, பருத்தித்துறை நகர சபை, காரைநகர் பிரதேச சபை எல்லைக்குட்பட்ட அழிவுகளே படப்பிடிப்பு மூலம் ஆவணமாக்கப்படவுள்ளன.

யாழ்.பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் க.இராசையா, உள்ளூராட்சி உதவியாளர் செ.ரமேஷ் ஆகியோர் தலைமையிலான குழுநேரடியாக சம்பந்தப்பட்ட இடங்களுக்குச் சென்று இவற்றை ஆவணப்படுத்தவுள்ளனர்.

# உலக வங்கி உதவியுடன் வீடமைப்பு; கட்டம் கட்டமாக அமுல் செய்யப்படும்

யாழ்ப்பாணம்.ஜன.11

உலக வங்கி உதவியுடன் நிகொட் வீடமைப்புப் புனர் நிர்மாணத் திட்டம் இம் மாதம் தொடக்கம் 2008 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் வரை கட்டம் கட்டமாக நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

எனவே, உள்ளூராட்சிச் சபைகள், வீடுகள் அமைக்கும் திட்டம் தொடர்பில் கட்டட விண்ணப்பப் பத்திரத்திற்கான அனுமதியை காலதாமதப்படுத்தாது உடனுக்குடன் வழங்கவேண்டும்.

- இவ்வாறு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் செல்வி தெ.து.விஜயலட்சுமி வடக்கு - கிழக்கில் உள்ள 72 உள்ளூராட்சிச் சபை செயலாளர்களையும் கேட்டுள்ளார்.

யாழ்.மாவட்டத்தில் முதற்கட்டமாக வீடுகள் அமைக்கும் திட்டத்திற்கு பிரதேச செயலர் பிரிவு ரீதியாக ஆள் தெரிவு (பயனாளிகள் தெரிவு) இடம்பெற்றுள்ளன.

எனவே, அரச அதிபர்களிடம் இருந்து அல்லது திட்டப்பணிப்பாளரிடமிருந்து அதற்கான விவரப்பட்டியலை அவ்வப் பகுதி உள்ளூராட்சி சபைத் திட்டமிடற் பிரிவினர் பயனாளிகளின் விவரங்களை பெற்றுக்கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளனர்.

(4- 185)

## உதயவாக்கு

பழக்கம் என்பது நாமாகவே உருவாக்கிய மலை, அதைத் தாண்டுவதும் கடினம் தகர்ப்பதும் கடினம்.

-ஸ்ரீ சைதன்யர்

## நாளை

மார்கழி 28
புதன்கிழமை
(12.01.2005)
திதி : துதியை
பிற்பகல் 02.01 வரை
நட்சத்திரம் : திருவோணம்
பிற்பகல் 03.50 வரை
சுபநேரம் : 05.03 - 06.33
ராகுகாலம்: 12.33- 02.03
(யாவும் பழைய நேரப்படி)

# பாம்பின்மேல் படுத்திருந்த கிருஷ்ணரை நடுக்கடலில் மீனவர்கள் கண்டனரா?

## கல்முனையில் சுனாமி தாக்கிய வேளை!

காரைதீவு,ஜன.11

சுனாமி பேரலை தாக்கிய வேளை நடுக்கடலில் நின்ற முஸ்லிம் மீனவர்கள் பாற்கடலில் பாம்பணையில் விஷ்ணுபகவான் பள்ளி கொள்வது போன்ற காட்சியைக் கண்டனரா என்ற சந்தேகம் பரவலாக நிலவுகிறது.

இச் சம்பவம் கல்முனைக்கடலில் இடம்பெற்றதாகச் சொல்லப்படுகிறது.

இந்துக்கடவுள் வடிவங்களைப் பெரிதாக அறிந்திராத முஸ்லிம் மீனவர்கள், காரைதீவு விஷ்ணு ஆலய உருவங்களைக் காட்டி, இவர்தான் கடலில் பாம்பின்மேல் சயனித் தவரென்று மற்றவர்களிடம் கூறியிருக்கின்றனர்.

காரைதீவு ஸ்ரீ சித்தானைக்குட்டி சுவாமி மடாலயத்திலிருந்து சித்தானைக்குட்டி வடிவிலான ஒருவர், கடல் வரும்போது கடலை நோக்கிச் சென்றதைக் கண்டதாகச் சிலர், கூறியிருக்கின்றார்கள்.

"உலகம் அழியப்போகுது ஓடித்தப்புங்கள்" என்று கூறியவண்ணம் சுவாமியார் ஓடியதாகவும் அவர்கள் தெரிவித்ததாக அறியவந்துள்ளது.

இதேவேளை, காரைதீவில் அனுமானை வழிபட்டு வந்த சிறுவனை பேரலை வந்தபோது, குரங்கொன்று வந்து மரத்திலேற்றி உதவியதாகவும் பேசப்படுகின்றது.

(4-14)

# அரசின் தமிழர் விரோதப் போக்கு அழிவுகளின் பின்னரும் மாறவில்லை!

## சுரேஷ் எம்.பி. அறிக்கை

யாழ்ப்பாணம்,ஜன.11

உதட்டளவில் அரசு ஒற்றுமை பற்றிப் பேசினாலும் இவ்வளவு இடாபாடுகளுக்குப் பின்னரும்கூட அவர்களின் தமிழர் விரோத நிலைப்பாட்டில் எந்தவிதமான மாற்றமும் இல்லை என்பதை அவர்களின் செயறபாடுகள் காட்டுகின்றன.

இவ்வாறு தெரிவித்துள்ளார் தமிழ்க் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினரும் ஈ.பி.ஆர்.எல்.எவ. செயலாளர் நாயகமுமான சுரேஸ பிரேமச்சந்திரன்.

நிவாரண நடவடிக்கைகளில் இராணுவத்தினரை ஈடுபடுத்துவது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

கடந்த 26ஆம் திகதி கடற்பேரலையால் அனர்த்தத்துக்குள்ளாக்கப்பட்ட இலங்கையில் மிக மோசமாகப் பாதிக்கப்பட்ட பகுதி வடக்கு - கிழக்கு மற்றும் தென்பகுதியாகும். இதில் மூன்றில் இரண்டு பகுதி தமிழ் பேசும் வடக்கு - கிழக்கு கரையோரப் பிரதேசம் என்பதுடன், இவ்வனர்த்தத்தால் இறந்தோரும் பாதிக்கப்பட்டவர்களும் மிகப் பெரும்பான்மையாக வடகிழக்கைச் சேர்ந்த தமிழ் மக்களாகவே உள்ளனர்.

இந்த உண்மை அரசுக்கும் தெரிந்த விடயமே.

இருபத்தைந்து வருடங்களுக்கு மேலாக தமிழ் மக்களை அடக்கி, ஒடுக்கி அவர்களது விடுதலைப் போராட்டத்தை சீரழித்து விடுவது என்ற அடிப்படையில் தமிழ் மக்களுக்கெதிராக இலங்கை அரசு நடத்திய யுத்தத்தில் ஏறததாழ 70,000 இற்கும் மேற்பட்டவர்கள் இராணுவத்தால் கொல்லப்பட்டும், பலநூறு யுவதிகள் இராணுவத்தாலும் முப்படையாலும் பாலீயல் வல்லுறவுக்குட்படுத்தப்பட்டுள்ளனர்.

இவ்வாறான இராணுவத்தினர், தமிழ் மக்களின் புனர்வாழ்வு நிலையங்களை பராமரிப்பதெனபதும், அதற்கான உணவு மற்றும் பொருள்களை பங்கிட்டு அளிக்கும் பொறுப்பை அரசு இவர்களுக்கு கொடுத்துள்ளது என்பதும் அரசின் மிக மோசடித்தனமான செயற்பாட்டையே காட்டுகின்றது.

திருகோணமலையில் இராணுவத்தினர் நலனபுரிகளுக்குச் சென்றதால் அங்குள்ள மக்கள் நலன்புரி நிலையங்களை விட்டே வெளியேறியுள்ளனர்.

தமிழர் புனர்வாழ்வுக்கழகம் பாதிக்கப்பட்ட மக்களுக்கு அனுப்பிய பொருள்களை அம்பாறையில் அதிரடிப்படையினர் பறிமுதல் செய்து வதியால் போனோர், வந்தோருக்கு விநியோகம் செய்துள்ளனர்.

எனவே, இவ்வாறான சூழ்நிலையில் வடக்கு - கிழக்கில் புனருத்தாரண நடவடிக்கையில் இராணுவம் ஈடுபடமுடியாதென்பதைத் தமிழ் தேசியக் கூட்டமைப்பினர், ஜனாதிபதிக்கும், பாதுகாப்பு செயலாளருக்கும் அறிவித்துள்ளனர்.

அரசு உதட்டளவில் ஒற்றுமையைப் பற்றிப் பேசினாலும், இவ்வளவு இடர்பாடுகளுக்குப் பின்னரும்கூட அவர்களின் தமிழர் விரோத நிலைப்பாட்டில் எந்த மாற்றமுமில்லை என்பதையே அவர்களின் செயற்பாடுகள் காட்டுகின்றன. இந்த அனர்த்த நிலைமையில் தாம் எவ்வளவு தூரம் தமது வாக்குவங்கியை பாதிக்கப்பட்ட மக்கள் மததியில் ஸ்தாபிக்கலாம் என்பதே இவர்களது நோக்கமாக உள்ளது.

ஆனால், மிக அதிகமான உலக நாடுகள் எமது கோரிக்கையை புரிந்துள்ளன என்பதுடன், தமிழ் மக்களுக்கு அவ்வுதவிகள் கிடைப்பதற்கான முழு நடவடிக்கைகளும் தம்மால் எடுக்கப்படும் என்றும் கூறியுள்ளனர்.

அதுமாத்திரமல்லாமல், சிவில் நடவடிக்கைகளிலும், முகாம் பராமரிப்பு போன்ற விடயங்களில் இராணுவம் ஈடுபடுத்தப்படுமானால் அது மிகப் பாரிய மக்கள் போராட்டங்கள் உருவாகவே வழிவகுக்கும் என்பதையும் இவ்வரசிற்கு கூறிக் கொள்கிறோம். (4)


## சின்னஞ்சிறு விளம்பரங்கள்

### விற்பனைக்கு

கலர் மீன்கள், தொட்டிகள், குருவிகள், கூடுகள், கறுப்பு, வெள்ளை பொமேரியன் நாய்க குட்டிகள், பூங்கன்றுகள், சாடிகள் விற்பனைக் குண்டு. தொடர்பு: 40/11, சீனியார் ஒழுங்கை, தட்டாதெருச் சந்தி, யாழ்ப்பாணம். (40661)

நல்ல நிலையிலுள்ள PIV கணனியும் CD பிளேயரும் விற்பனைக்கு உண்டு. தொடர்புகளுக்கு: தொலைபேசி இலக்கங்களான 077 3049890, 077 6059864 ஆகியவற்றுடன் தொடர்பு கொள்ளவும். (40651)

### காணி விற்பனைக்கு

யாழ். கச்சேரியடி, காட்டுக்கந்தோர் ஒழுங்கையில் நல்ல தண்ணீக் கிணற்றுடன் 2 பரப்புக் காணி விற்பனைக்குண்டு. தொடர்பு: கல்யாண வேலன், திருமண சேவை, இல.72, கச்சேரி நல்லூர் வீதி, யாழ்ப்பாணம். (38354)

நல்லூர், செட்டித்தெரு வீதியில் (தினக்குரல் தங்ககத்திற்கு எதிராக) 4 (நான்கு) பரப்புக் காணி இருவழிப் பாதையுடன் விற்பனைக் குண்டு. தொடர்புகளுக்கு: 0777 744863, 0777 609928. (40663)

### சொகுசு பஸ், வான் விற்பனைக்கு

JC-3XXX தொடர் இலக்கமுடைய சொகுசு பஸ், GV - 9XXX தொடர்இலக்கமுடைய சொகுசு பஸ், GT-9XXX தொடர் இலககமுடைய சொகுசு பஸ் (பூசோ), JD-9XXX தொடர் இலக்கமுடைய வான் (Super GL, Reguss) ஆகிய மேற்குறிப்பிட்ட வாகனங்கள் விற்பனைக்குண்டு. தொடர்புகொள்ளவேண்டிய தொலைபேசி இல. 0777 744863, 0777 609928. (40662)

### கோழிக்குஞ்சு விற்பனைக்கு

தரமான நம்பர் - 1 பகிரா புறொயிலர் குஞ்சுகள் 12-01-2005 மாலை விநியோகிக்கப்படும். பதிவுகளை மேற்கொள்ளவும். றாஜீவ், ஆனைக்கோட்டைச் சந்தி, தாரகை கால்நடைத் தீவன விற்பனை நிலையம், முதலாம் கட்டை, பருத்தித்துறை, P.ரவி, தபாற்கந்தோர் வீதி, சாவகச்சேரி, ஶ்ரீராம் பருத்தித்துறை, பஸ் நிலையம் முன்பாக. T.P.No.:222 2867, 3529. (40665)

### ஆள் தேவை

கணக்குவேலை தெரிந்த பெண் பிள்ளைகள் தேவை. உடன் நேரில்வரவும்.

**சுதா ரேடர்ஸ்**

இல. 339, அரசடி வீதி, நல்லூர், யாழ்ப்பாணம். (40595)

### யாழ். - திருகோணமலைக்கான நேரடி சொகுசு பஸ் சேவை (A/C)



**Atlas Travels**

*எமது சேவை 2005 -01-16ஆம் திகதி தொடக்கம் ஆரம்பமாகின்றது என்பதை எமது வாடிக்கையாளர்களுக்கு அறியத்தருகின்றோம்.*

யாழ்.ஆசனப் பதிவிற்கு:

**அற்லஸ்**

இல.77, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 021 - 2222990
021 - 2222557

யாழ்ப்பாணத்திலிருந்து காலை 8.30 மணிக்குப் புறப்படும்.

திருகோணமலை ஆசனப்பதிவிற்கு:-

**கிரபிக் வீடியோ வேலட்**

இல.164, திருஞானசம்பந்தர் வீதி, திருகோணமலை.
தொலைபேசி: 0777 - 213021

திருகோணமலையிலிருந்து காலை 7.00 மணிக்குப் புறப்படும்.

(40664)(26-18-16) - நிர்வாகம்.


## சர்வதேச உதவிகளை புலிகளிடம் நேரடியாகக் கையளிக்காதீர்கள்

### ஐ.நா.செயலாளரிடம் ஜே.வி.பி.கோரிக்கை

கொழும்பு,ஜன.11

சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான சர்வதேச உதவிகள் எவற்றையும் விடுதலைப் புலிகளிடம் நேரில் கையளிக்கக்கூடாது என்று ஐ.நா.செயலாளரிடம் ஜே.வி.பி.கோரியுள்ளது.

கோபி அனானின் இலங்கை விஜயத்துக்கு நன்றி தெரிவித்து ஜே.வி.பி.கடிதம் ஒன்றை எழுதியுள்ளது. அதிலேயே மேற்கண்டவாறு தெரிவித்துள்ளது. அதில் மேலும் தெரிக்கப்பட்டுள்ளதாவது:-

இலங்கைத் தீவகத்தில் ஆழிப்பேரலையால் ஏற்பட்டுள்ள பாதிப்புகளுக்கு உடனடியாக கப்பல்களையும், விமானங்களையும் உலங்கு வானூர்திகளையும் மட்டுமன்றி, தமது நாட்டுப்படைகளையும் வழங்கிய உலக நாடுகளுக்கு எமது நன்றிகளைத் தெவிக்கின்றோம்.

இலங்கைக்கு உதவியளித்த அனைத்து நாடுகளுக்கும் நன்றி.

இராண்டாவது உலகப் போரின்பின்னர் ஜேர மனியும், ஜப்பானும் எழுச்சிபெற ஐக்கிய நாடுகள் சபையும், மேற்குலக நாடுகளும் வழங்கிய ஒத்துழைப்புப் போன்று இலங்கைக்கு வழங்கவேண்டும் என்று வேண்டுகோள் விடுக்கின்றோம்.

சர்வதேச நிதி உதவிகள் விடுதலைப் புலிகளுக்கு நேரடியாக வழங்கக்கூடாது. அதற்குரிய சகல ஏற்பாடுகளையும் ஐக்கிய நாடுகள் சபை மேற்கொள்ளவேண்டும்.

வடக்கு - கிழக்குப் பகுதிக்கு நிவாரணப் பொருள்கள் வழங்கப்படுவதில்லை என தமிழத் தேசியக் கூட்டமைப்பினர் தெரிவிக்கும் குற்றச் சாட்டுக்கள் உண்மைக்குப் புறம்பானவை.

சர்வதேச தேர்தல் விதிகளுக்கு முரணான வகையில் தெரிவு செய்யப்பட்டுள்ள தமிழ்த் தேசிய கூட்டமைப்பினரின் கருத்துக்கள் குறித்து உலக நாடுகள் கவனம் செலுத்த தேவையில்லை - என்றுள்ளது. (க-8)

## ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டம்

வலி.தெற்குப் பிர தேச செயலர் பிரிவுக்குட்பட்ட திணைக்களத் தலைவர்கள் கலந்துகொள்ளும் பிரதேச ஒருங்கிணைப்பு குழுக் கூட்டம் இன்று முற்பகல் 10மணிக்கு பிரதேச செயலர் எஸ். திருவாகரன் தலைமையில் நடை பெறவுள்ளது. இக்கூட்டத்தில் இப்பிர தேசத் தைச் சேர்ந்த சகல திணைக்களத் தலைவர்களும் கலந்துகொள்ளுமாறு அழைக்கப்பட்டுள்ளனர். பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தைத் தொடர்ந்து விவசாயக் குழுக்கூட்டமும் நடைபெறும்.

## முன்பள்ளி ஆசிரியர்களுக்கு சம்பள அதிகரிப்பு

வலிதெற்கு,ஜன.11

சுன்னாகம் பனை - தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தின் கீழ் இயங்கி வரும் 15முன்பள்ளிகளில் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கு இவ்வருடம் முதல் அதிகரித்த சம்பளத்தை வழங்குவதற்கு சங்க நிர்வாகம் முடிவுசெய்துள்ளது.

இதன்படி இதுவரை காலமும் வழங்கப்பட்டு வந்த 750ரூபா வேதனத்தை ஆயிரம் ரூபாவாக வழங்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

மேற்படி சங்கத்தின்கீழ் 32 முன்பள்ளிகள் இயங்கி வருகின்றபோது 17முன்பள்ளி ஆசிரியர்களுக்கே வலிதெற்குப் பிரதேச சபையினால் வேதனம் வழங்கப்பட்டுவருகின்றது.

ஏனைய 15முன்பள்ளி ஆசிரியர்களுக்கு அதிகரித்த வேதனம் வழங்குவதென தற்பொழுது முடிவுசெய்யப்பட்டுள்ளது. (10-152)




உ

சுவாமி சரணம் ஐயப்பா சரணம்

அருள்மிகு
ஶ்ரீ ஐயப்பசுவாமி திருக்கோயில்
மகரஜோதிப் பெருவிழா

இருமுடி கட்டுதல்: 12-01-2005 புதன்கிழமை மாலை 5 மணிக்கு நடைபெறும்.

இடம்: கட்டுவன் நாச்சிமார் கோயில்

யாத்திரை புறப்படுதல்: 13-01-2005 வியாழன் காலை 10 மணிக்குப் புறப்பட்டு ஆலயத்தையடைந்து ஒரு மணிக்கு விசேட அபிஷேக ஆராதனையும் எம்பெருமானுடைய பஜனையும் விசேட பூசை வழிபாடுகளும் நடைபெறும்.

14-01-2005 வெள்ளிக்கிழமை தைப்பொங்கல் நாளில் மகரஜோதி தரிசனம் பிற்பகல் 3 மணிக்கு அபிஷேக ஆராதனைகள் நடைபெறும்.

*அடியார்கள் அனைவரையும் உரிய நேரத்திற்கு வருகைதந்து ஐயப்ப சுவாமியின் அருளைப் பெற்று உய்யும் வண்ணம் அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.*

கட்டுவன் மேற்கு, தெல்லிப்பழை. (40667)(26-18-16)
சிவ.அருணாசலக்குருசுவாமி, ஐயப்பதாசன்.

### தேவை

*யாழ்.நகர் மத்தியில் இயங்கும்*

- யாழ்.பேபி நீட்ஸ் அன் பார்மசி
- சன்றைஸ் மெடிகிளினிக்

ஆகிய ஸ்தாபனங்களுக்கு பின்வரும் பதவிகளுக்கு ஆள்கள் தேவை.

1) Accountent [கணக்காளா/Book keeper (ஆண/பெண்)
2) கணனி இயக்குநர் (பெண்)
3) தாதிய உதவியாளர் (பெண்)
4) மருந்து விற்பனையில் அனுபவமுள்ள பெண்கள்

இவர்களுக்குரிய நேர்முகத் தேர்வு நாளை (12-01-2005) புதன்கிழமை நண்பகல் 12 மணிக்கு நடைபெறும்.

இடம்: சன்றைஸ் மெடிகிளினிக்.
388, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
(26-18-16) (40660)


## மரண அறிவித்தல்

### திருமதி நாகம்மா சிவகுரு

சாவகச்சேரி வடக்கைச் சேர்ந்த திருமதி நாகம்மா சிவகுரு 08.01.2005 சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற செல்லப்பா சிவகுருவின் அன்பு மனைவியும் தங்கம்மாவின் பாசமிகு சகோதரியும் திருநாவுக்கரசு, மல்லிகா தேவி, யோகேஸ்வரன், சந்திரபாலன் (சாவகச்சேரி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம்), சிவயோகபாலன் (சுவிஸ்), செலவபாலன் (சுவிஸ்) ஆகியோரின் பாசமிகு தாயாரும் மகேஸ்வரி, தங்கராசா, ஆனந்த பாஷினி, இராஜேஸ்வரி, சிவலோஜினி (சுவிஸ்), மனோகரி (சுவிஸ்) ஆகியோரின் அன்பு மாமியும் மதிபரன் (மட்டக்களப்பு தேசிய கல்வியியல் கல்லூரி), கலைமதி, கலாகரன், கைலைநாதன், ஜெயரூபன், ஜெயரூபன், ஜெயஶ்ரீ, ஹேமலதா(ஆசிரியை வெற்றிலைக்கேணி றோ.க.த.க.பாடசாலை),ஹேமரதி, கேசவன் (G.A.Q. 2004), ஹேமரஞ்சி, கேதீபன், கேதினி, நிஷாந்தன் (மலேசியா), நிறோன், டர்சன், மதுஷன், தாருஜா (சுவிஸ்), காயத்திரி (சுவிஸ்), தர்சன் (சுவிஸ்), ஈழதர்சன் (சுவிஸ்), யாழினி (சுவிஸ்), ராஜி ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் சிம்ஜோன், ஜெப்தா, சிமியோன் ஆகியோரின் அன்புப் பூட்டியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (11.01.2005) செவ்வாய்க் கிழமை அன்னராது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் பி.ப. ஒரு மணியளவில் சாவகச்சேரி கண்ணாடிப்பிட்டி இந்துமயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*மருதடி வீதி, சாவகச்சேரி வடக்கு, சாவகச்சேரி.* (சி-40339)(46-18-16-26)

தகவல்: பிள்ளைகள்.

## 10ஆம் ஆண்டு நினைவலைகள்



**க.இளையதம்பி**
(அதிபர்)

பிறப்பு 23-03-1936 இறப்பு 02-01-1995

**அன்பின் திருவுருவே!**
என் அன்னை செய்தபாவம்
நான் மண்ணில் வந்தது
எனது அழகு செய்த பாவம்
நீ என்னைக் கண்டது
நம் கண்கள் செய்த பாவம்
நாம் காதல் கொண்டது
நாங்கள் செய்த பாவம்
எம்மைப் பிரித்து விட்டது
எனக்கு சோதனை தீரவில்லை
சொல்லி அழ யாருமில்லை
முன்னம் பின்னம் அழுததில்லை
சொல்லி ஆற்ற யாருமில்லை
கண்ணீர்ப் பூக்களைக் காணிக்கை
ஆக்குகின்றோம்.
*ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!*

*மிதிலை, கைதடி நுணாவில், சாவகச்சேரி.*
மனைவி, மகன், உறவினர்கள்.

# குடலைப் பருவத்தில் வெள்ளம்; வேளாண்மை நாசம் அம்பாறை மாவட்டம் எதிர்நோக்கும் மற்றுமோர் அபாயம்

காரைதீவு,ஜன.11

சுனாமியால் நிலைகுலைந்திருந்த அம்பாறை மாவட்டத்தில் பெருவெள்ளம் ஏற்பட்டதையடுத்து மற்றுமோர் அபாயம் எதிர்நோக்கப்பட்டுள்ளது. பெருவெள்ளம் கரையோரப் பிரதேசங்களில் 3 அடி அளவில் நிற்கின்ற அதேவேளை, விவசாய நிலங்களில் 4' அடிக்கு மேலாகப் பாய்கிறது.

அம்பாறை மாவட்ட விவசாயத்தைப் பொறுத்தவரையில் தற்போது குடலைப் பருவ காலம். கருக்கட்ட வேண்டிய காலத்தில் வெள்ளம் ஊடறுத்தால் அப்பயிர் நாசமாகிவிடுமெனறு கூறப்படுகின்றது. பெரும் போகத்தில் சுமார் ஒரு லட்சம் ஏக்கர் வயல் நிலங்கள் செய்கை பண்ணப்பட்டன. இரு தடவைகள் வெள்ளம் வந்து விதைப்பை இரு தடவையாக்கி ஆரம்பத்திலேயே சேதங்கள் ஏற்பட்டன.

காலம் தப்பி விதைக்கப்பட்ட பயிர்கள் குடலைப் பருவத்தையடைந்த இவ்வேளை மீண்டும் மூன்றாவது தடவையாக பெருவெள்ளம் தற்போது ஏற்பட்டுள்ளது.

இவ்வெள்ளத்தால் அம்பாறை மாவட்ட பொருளாதாரம் பாரிய வீழ்ச்சியை எதிர்நோக்குமென எதிர்பார்க்கப்படுகிறது. சுனாமியின் அலைகள் தப்பித்தவறி வயலில் இறங்கியிருந்தால் சில காலங்களுக்கு பயிர்செய்ய முடியாமல போயிருக்குமெனவும் கூறப்படுகின்றது. (ஐ)

## மகளிர் அமைப்பு உதவி

வடமராட்சி,ஜன.11

கொழும்பு தமிழ் மகளிர் அமைப்பு 24 லட்சம் ரூபா பெறுமதியான உதவிப் பொருள்களை யாழ்ப்பாணம், வன்னி ஆகிய பிரதேசங்களில் பாதிக்கப்பட்டவர்களுக்கு வழங்கியது.

அமைப்பின் தலைவி திருமதி ஜமுனா கணேசலிங்கம் தலைமையிலான குழுவினர் இப்பொருள்களை எடுத்துவந்து விநியோகித்தனர்.

பாத்திரங்கள், பாய்கள், சவர்க்காரவகைகள், உடுபுடைவைகள் உட்பட பல பொருள்கள் இவற்றில் அடங்கியிருந்தன. (ஐ-173)

# உல்லாசபுரியான உல்லை உருக்குலைந்து உள்ளது!

வெளிநாட்டு, உள்நாட்டு உல்லாசப் பயணிகளின் சொர்க்கபுரியாக விளங்கிய உல்லைப் பிரதேசம் சுனாமியால் சேதமாக்கப்பட்டு உருக்குலைந்துள்ளது.

அங்கு வாழ்ந்த மக்கள் இனமத பேதமற்ற முறையில் சுனாமியால் அழிக்கப்பட்டுள்ளனர். சுமார் 1000பேர் இதுவரை பலியாகியிருக்கலாமென அங்கு விஜயம்செய்த கிழக்கு உட்கட்டமைப்பு பிரதியமைச்சர் எம்.ஐ.அன்வர் இஸ்மாயில் தெரிவித்தார்.

உல்லையின் நுழைவாயிலிலுள்ள அறுகம்பைப்பாலம் முற்றாக சேதமாக்கப்பட்டுள்ளதால் தரைவழிப் போக்குவரத்து ஸ்தம்பிதமடைந்துள்ளது. அதனையடுத்துள்ள ஒரு கிலோ மீற்றர் வரையிலான பிரதான பாதை கடல் அலையினால் காவுகொண்டுள்ளது.

உல்லை ஒரு மயான பூமியாக காட்சியளிக்கின்றது. அங்கிருந்து நூற்றுக்கணக்கான ஹோட்டல்கள் அழிக்கப்பட்டிருப்பதாகவும் அவர் கூறினார். அங்குள்ள மக்கள் பொத்துவில் பாடசாலையில் அகதிகளாகத் தஞ்சமடைந்துள்ளனர். பிரதியமைச்சர் அன்வர் ஸ்மாயில் தலைமையிலான குழுவினர் கடற்படைப் படகில் உல்லை சென்றடைந்தனர். (04)

## சுகாதாரத் தொண்டர்களுக்கு அழைப்பு

யாழ்ப்பாணம்,ஜன.11

யாழ்.மாவட்ட சுகாதார தொண்டர்கள் அனைவரையும் நாளை புதன்கிழமை காலை 9மணிக்கு கரவெட்டியில் (வதிரி) அமைந்துள்ள "சுனாமி" அனர்த்த கால செயலணி செயலகத்துக்கு தவறாது சமுகமளிக்குமாறு தமிழீழ சுகாதார சேவைகள் யாழ்.மாவட்ட இணைப்பாளர் செ.குணாளன் கேட்டுக்கொண்டுள்ளார்.

ஒருநாள் தங்கிநிற்கக்கூடிய ஒழுங்குகளுடன் வரக்கூடியவர்கள் அவ் ஒழுங்குடன் வருமாறு அவர் கேட்டுள்ளார். (8-190)

## இணைந்த சேவை அலுவலர்களின் இடமாற்றம் தாமதம்

யாழ்ப்பாணம்,ஜன.11

'சுனாமி' இயற்கை அனர்த்தம் காரணமாக வடக்கு - கிழக்கு மாகாண இணைந்த சேவை அலுவலர்களுக்கான இடமாற்றங்கள் மார்ச் முதலாம் திகதி வரை ஒத்திவைக்கப்பட்டுள்ளதாக வடக்கு - கிழக்கு மாகாண பிரதம செயலாளர் எஸ்.ரங்கராஜ் அறிவித்துள்ளார்.

இடமாற்றக் கட்டளைக்கு அமைய ஜனவரி முதலாம் திகதி முதல் இடமாற்றம் பெறவேண்டிய உத்தியோகத்தர்களில் கடமையேற்க முடியாதவர்கள் தாம் கடமையாற்றும் நிலையங்களில் மார்ச் முதலாம் திகதிவரை கடமையாற்றலாம் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-202)

# அழிந்த மீன்பிடி உபகரணங்களின் பெறுமதி அம்பாறையில் ரூ. 82 கோடி

காரைதீவு,ஜன.11

சுனாமி கடல்கோள் அனர்த்தத்தில் அம்பாறை மாவட்ட மீனவர்களுக்கு 81 கோடியே 85 லட்சம் ரூபா இழப்பு ஏற்பட்டுள்ளதாக கணக்கிடப்பட்டிருக்கிறது. அம்பாறை மாவட்ட கடற்றொழில் நீரியல் வளத்திணைக்களத்தின் உதவிப் பணிப்பாளர் டொமிங்கோ ஜோர்ஜ் மேற்படி தகவலை வெளியிட்டுள்ளார்.

கரையோரப் பிரதேசத்திலுள்ள சுமார் 10 ஆயிரம் மீனவர்களின் வீடுகள் முழுமையாக அழிக்கப்பட்டுள்ளன. 1500 இற்கு மேற்பட்ட மீன்பிடிக கலங்கள், இயந்திரங்கள் சேதமாக்கப்பட்டுள்ளன. 60 கிலோமீற்றர் நீளமான மீன்பிடி வீதிகள், மீன்பிடிக் காரியாலயங்கள் அழிக்கப்பட்டன.

இவற்றின் சேதவிவரம் 81 கோடியே 85 லட்சம் ரூபா எனத் தற்போது மதிப்பீடு செய்யப்பட்டுள்ளதாகவும் இதில் வீடுகளின் அழிவுப் பெறுமானம் உள்ளடக்கப்படவில்லை எனவும் பணிப்பாளர் ஜோர்ஜ் மேலும் கூறினார்.

மாவட்டத்திலுள்ள 11 கரையோர மீன்பிடிப் பிரதேசப் பிரிவுகளில் மீன்பிடி இழப்புக்கள் மேலும் மதிப்பீடு செய்யப்பட்டுவருகின்றன.

16,500 மீனவர்கள் அழிந்த வீட்டைவிட்டு வெளியேறி நலன்புரி நிலையங்களில் தஞ்சமடைந்துள்ளனர். (4)

# கட்டட, தச்சு தொழிலாளருக்கான சம்பளத் தொகைகள் வேறுபாடு

## திட்டம் வகுக்க நிர்மாணிகள் சங்கம் முடிவு

யாழ்ப்பாணம்,ஜன.11

யாழ்.மாவட்டத்தில் பணிபுரியும் மேசன், தச்சுத்தொழிலாளர்களை ஒரு நடைமுறையின் கீழ் கொண்டுவருவதற்கு வடபிராந்திய நிர்மாணிகள் சங்கத்தினர் நடவடிக்கை எடுத்து வருகின்றனர்.

தற்போது மேசன், தச்சுத்தொழிலாளர்கள் தனியார் வீட்டு வேலைகள் மற்றும் நிறுவன வேலைகளைச் செய்யும்போது கட்டுப்பாடில்லாத கூலித்தொகையைப் பெற்றுக்கொள்கின்றனர்.

இதனால் திணைக்களங்களில் இருந்து கேள்வி கோரப்பட்டு அதனை ஒப்பந்தக்காரர்கள் பொறுப்பேற்றுச் செய்யும் போது திணைக்களம் கொடுக்கும் கூலித்தொகைக்கும் ஒப்பந்தக்காரர்கள் கொடுக்கும் தொகைக்கும் வேறுபாடு காணப்படுகின்றது.

இதனால் இந்தப் பணியாளர்களை ஒழுங்குபடுத்தி சீரான சம்பளம் கிடைக்க உதவுவதுடன் தொழிலாளர் பற்றாக்குறையையும் நிவர்த்தி செய்யமுடியும் என நிர்மாணிகள் சங்கத்தினர் தெரிவித்துள்ளனர். (ஐ-203)

# பெற்றோரை இழந்த சிறாருக்காக ஒருநாள் சம்பளத்தைத் தாருங்கள்

## சுகாதாரப் பகுதி பணியாளர்களுக்கு வேண்டுகோள்

குருநகர்,ஜன.11

டிசெம்பர் 26ஆம் திகதி ஏற்பட்ட கடல் கொந்தளிப்பால் யாழ்.மாவட்டத்தில் தமது தாய், தந்தையரை இழந்து நிர்க்கதிக்குள்ளாகித் துயருற்று இருக்கும் சிறுவர்களுக்கு உதவும் நோக்குடன் தமது ஒருநாள் சம்பளத்தைக் கொடுத்துதவுமாறு யாழ்.மாவட்டத்தில் சேவையாற்றும் சுகாதாரத்துறை ஊழியர்களை யாழ். பிரதி மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி இ.தெய்வேந்திரன் கோரியுள்ளார்.

அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட அனாதைச் சிறுவர்களுக்கு உதவுதல் தொடர்பாக யாழ் பிரதி மாகாண சுகாதார சேவைப் பணிப்பாளர் அலுவலகத்தின் கீழ் இயங்கும் நிறுவனத் தலைவர்கள் மற்றும் பணியாளர்களுக்கு அவர் கடிதம் அனுப்பியுள்ளார். கடிதத்துடன் இணைக்கப்பட்டுள்ள பட்டியலில் ஒருநாள் சம்பளத் தொகையை உரிய ஊழியர்களின் சம்பளப் பட்டியலில் இருந்து கழிப்பதற்கான தமது விருப்பத்தைத் தெரிவித்து அப்பட்டியலை இம்மாதம் 25ஆம் திகதி செவ்வாய்க்கிழமைக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக யாழ்.பிரதி மாகாண சுகாதார சேவைப் பணிப்பாளர் அலுவலகத்துக்கு அனுப்பி வைக்குமாறு அவர் கோரியுள்ளார். (ஐ-51)

# சுனாமியால் பாதிக்கப்பட்ட இலங்கை, இந்தியாவுக்கு வைத்தியக்குழக்களை அனுப்புகின்றது ஆப்கான்

காபூல்,ஜன.11

இந்தியா மற்றும் இலங்கையில் சுனாமிப் பேரலைகள் மற்றும் பூகம்பத்தால் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு உதவுவதற்காக வேண்டி மருத்துவக்குழுக்களை அனுப்புகின்றது ஆப்கானிஸ்தான்.

மருந்துப்பொருள்கள், மருத்துவ உபகரணங்கள் என்பனவும் வெகுவிரைவில இந்த நாடுகளுக்கு அனுப்பிவைக்கப்படவுள்ளன என்று ஆப்கானிஸ்தான் இராணுவச் செய்தித் தொடர்பாளர் ஜெனரல் ஜாஹீர் முகமது அஸ்மி தெரிவித்தார்.

தொடர்ந்து அவர் கூறுகையில் தெரிவித்ததாவது:-

எங்களுக்கே ஏராளமான பிரச்சினைகள் இருக்கின்றன. இருந்தாலும், பல நாடுகளைக் கொண்ட குடும்பத்தில் ஓர் அங்கமாகவே நாங்களும் இருக்கின்றோம். எனவே, பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு உதவுவது எங்களது கடமை. அதனாலேயே உதவுகிறோம்; உதவ முன்வந்திருக்கின்றோம். இந்தப் பேரழிவுச் செய்தி கேட்டு ஆப்கானிஸ்தான் மக்கள் அதிர்ச்சியடைந்துள்ளனர். பாதிக்கப்பட்ட மக்களுக்கு எனது நாட்டு மக்கள்சார்பாக ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கிறேன் - என்றார் அவர். (க-8)

# மனம் தேறி முன் செல்வோம்

கடலடியில் ஓரிடத்தில் பூமி அதிர்ந்தது. கடல் பொங்கியெழுந்தது. பேரழிவைக் கொணர்ந்தது. அழிவின் சோகங்களைத் தொடரவிட்டுவிட்டு அது சென்றுவிட்டது. எனினும், அது விட்டுச் சென்ற துயரங்களிலிருந்து நாம் மீளவேண்டும். எமது வாழ்வை மீட்டெடுக்க வேண்டும். நாமேதான் மீட்டெடுக்க வேண்டும். அதைச் செய்வதற்கு நாம் எமது மனங்களை முதலில் துயரங்களிலிருந்து படிப்படியாக மீட்டெடுக்க வேண்டும்.

நிகழ்ந்திருக்கும் பேரழிவுகள் எங்களது மனங்களில் ஏற்படுத்தக்கூடிய தாக்கங்களையும் அந்தத் தாக்கங்களை எவ்வாறு நாம் விடுவித்துக்கொள்ளமுடியும் என்பதையும் பற்றிய சில தகவல்களை இச்சிறு பிரசுரம் கொண்டிருக்கிறது.

**எங்கள் மனங்களுக்கு என்ன நடந்துவிடக் கூடும்?**

நடந்துமுடிந்த அழிவுகள் எங்களது மனங்களிலும் எங்களது நடத்தைகளிலும் பல மாற்றங்களை ஏற்படுத்திவிடக்கூடும்.

ஆரம்ப நாள்களில் மன அதிர்ச்சி, ஏக்கம், மனக குழப்பம், உணர்வுகள் யாவும் மரத்துப்போன நிலை, பதட்டம், பதகளிப்பு, கவலை, அடக்க முடியாத அழுகை, குற்றம் புரிந்துவிட்டது போன்றதொரு உணர்வு என்பன ஏற்படக்கூடும்.

இவற்றைத் தொடர்ந்து நித்திரை குழம்புதல், பயங்கரக் கனவுகள் காணுதல், அழிவின்போது நடந்த சம்பவங்கள் திரும்பவும் நடப்பது போல உணருதல், இழப்புக்களை நினைந்து வருந்துதல், மனம் சோர்வடைதல், நம்பிக்கையற்றதொரு மனநிலையில் இருத்தல், வாழ்வின் மீது பிடிப்பற்ற நிலை ஏற்படுதல், எதையும் செய்வதற்கான மன ஊக்கமும் உந்துதலும் இல்லாதிருத்தல் ஏன் இப்படி நடந்தது? எனக்கு ஏன் இது நடந்தது?

எனத் தன்னைத்தானே மீண்டும் மீண்டும் கேட்டுத் தன்னைத் தான் வருத்திக் கொள்ளுதல், உடல் ரீதியாகத் தனக்குப்பல நோய்கள் இருப்பது போல உணர்ந்து முறையிடுதல் போன்ற பலவும் ஏற்படக்கூடும். மேலே கண்டவை போன்ற அறிகுறிகள் உளநோய்கள் அல்ல. இவை காலக்கிரமத்தில் தாமாகவே மறைந்துபோய்விடக் கூடியவை. பேரழிவுகளைத் தொடர்ந்து பொதுவாக மனிதருக்கு ஏற்படக்கூடிய அனுபவங்களே இவை. அசாதாரண நிலைமைகள் ஏற்படும்காலங்களில் தோன்றும் சாதாரண வெளிப்பாடுகளே இவை.

**நாங்கள் செய்யக்கூடியவை யாவை?**

★ எமக்கு நாம் எவ்வாறு உதவிக்கொள்ள முடியும்?

எங்களுக்கு ஏற்பட்டுள்ள தாக்கங்களிலிருந்து நாங்கள் படிப்படியாக மீண்டுவிடலாம்.

★ போதிய ஓய்வு, போதிய உறக்கம், போதிய உணவு என்பவற்றை எடுத்துக் கொள்ளுதல்.

★ எமக்குத் தெரிந்த, எமக்கு பரிட்சையமான வழிமுறைகளில் மனதைச் சாந்தப்படுத்திக் கொள்ளுதல்.

★ எமது உணர்வுகளையும் உணர்ச்சிகளையும் எவருடனாவது கதைத்துப் பகிர்ந்து கொள்ள வேண்டும் போல் இருந்தால், அவ்வாறு செய்தல்.

★ இயலுமான வரையில் எமது குடும்பத்தவர், நண்பர்கள், அயலவர்களோடு சேர்ந்து நாளாந்தக் கருமங்களிலும், இயலுமான வரையில் பொதுக்கருமங்களிலும் இணைந்து ஈடுபடுதல்.

**தகவல்:-அனர்த்தகால உளநலப் பணிக்குழு**



கடல் அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு சிகிச்சையளிக்கவென அண்மையில் யாழ்.வந்த கொரிய நாட்டு மருத்துவக் குழுவினர் தாம் சிகிச்சைக்கென எடுத்துவந்த மருத்துவ உபகரணங்களையும், மருந்துகளையும் யாழ். போதனா வைத்தியசாலைக்கு வழங்கியுள்ளனர். யாழ். தொழில்நுட்பக் கல்லூரி அதிபர் என்.யோகராஜன் விடுத்த வேண்டுகோளையடுத்து மருத்துவக் குழுவினர் அவற்றை பலாலி விமானத்தளத்தில் வைத்து அவரிடம் கையளித்தனர். அப்பொருள்களை தொழில்நுடபக் கல்லூரி அதிபர் யாழ். போதனா வைத்தியசாலை வைத்திய நிபுணர் டாக்டர் பேரானந்தராஜாவிடம் கையளிப்பதைப் படத்தில் காணலாம். *(படம்: அலுவலகப் படப்பிடிப்பாளர்)*

# அம்பாறை மக்கள் உணவின்றி அவதி; அரசின் உதவிகள் அங்கு கிட்டவில்லை

## சிவாஜிலிங்கம் எம்.பி.தகவல்

யாழ்ப்பாணம்,ஜன.11

அம்பாறை மாவட்டத்தில் சுனாமி அனர்த்தத்தினால் பேரழிவு எற்பட்டபோதும், அங்கு மீட்புப் பணிகள் இடம்பெறவில்லை. அரசின் உதவிகள் ஏதும் அந்த மக்களுக்குக் கிட்டவில்லை. அவலநிலையில் உணவுக்கு வழியின்றி அல்லற்படுகின்றனர் அந்தப் பிரதேச மக்கள்.

- இப்படிக் கூறினார் தமிழ்த் தேசிய கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம்.

அம்பாறையில் கடந்த ஐந்து தினங்களாகத் தங்கியிருந்து சகல பகுதிகளுக்கும் சென்று மக்களின் அவலங்களைக் கேட்டு வரும் அவர், அங்குள்ள நிலைமை குறித்து உதயனுக்கு மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

வடக்கு - கிழக்கில் மிகவும் மோசமாகப் பாதிக்கப்பட்ட பிரதேசம் அம்பாறை. தமிழ்மக்களும் முஸ்லிம் மக்களுமே முழுமையான பாதிப்புக்கு உள்ளாகியுள்ளனர்.

அந்த மாவட்டத்தில் பெரும்பகுதி சுடுகாடாகக் காட்சியளிக்கின்றது. அங்குள்ள மக்களின் இருப்பிடங்களை சுத்திகரிக்கும் பணியோ மீட்புப் பணியோ எதுவும் நடக்கவில்லை.

எங்கு திரும்பினாலும் சோகக் கதைகள் தான். அழிவில் இருந்து மீள அந்த மக்களுக்கு எத்தனையோ மாதங்கள் தேவையாக உள்ளன.

நலன்புரி நிலையங்களில் தங்கியுள்ள மக்களுக்கு அரசின் எந்த உதவியும் வந்து சேரவில்லை. பட்டினி நிலையில் வதங்கிப் போய் இருக்கிறார்கள். ஒருபக்கம் சோகம், மறுபக்கம் பட்டினி, இரண்டும் சேர்ந்து அந்த மக்களை வாட்டி வதைக்கின்றன.

மட்டக்களப்பு நகரத்தில் சென்.மைக்கல் கல்லூரி, அதை அண்டிய சவுக்கடி போன்ற இடங்களில் தங்கியுள்ள மக்களுக்குக்கூட அரச நிவாரணம் எதுவும் கிட்டவில்லை.

சர்வதேச நிறுவனங்கள் விரைந்துவந்து இந்த மக்களின் அவலத்தைப் பார்த்து உதவுவதன் மூலமே அவர்கள் வாழ்க்கையில் தெம்பை உருவாக்க முடியும் - என்றார் அவர்.

சிவாஜிலிங்கத்துடன் ரெலோ அமைப்பைச் சேர்ந்த எஸ்.பத்மநாதன் மற்றும் பிரமுகர்களும் அங்கு தங்கியிருந்து மக்களுக்குத் தேவையான உதவிகளை வழங்கிவருகின்றனர்.

இதேவேளை - அம்பாறையில் தங்கியுள்ள 'உதயன்' காரைதீவு நிருபருக்கு சிவாஜிலிங்கம் எம்.பி.வழங்கிய விசேட பேட்டியில் தெரிவித்ததாவது:-

"சுனாமியால் பாதிக்கப்பட்ட தமிழ்மக்கள் வாழும் அகதிமுகாம்களுக்கு இன்னும் அரச நிவாரணம் சென்றடையவில்லையென்ற அதிர்ச்சி தரும் செய்தியை வெளியிடுவதில் வேதனையடைகிறேன்.

"தெய்வம் கொடுத்தாலும் பூசாரி கொடுக்காத நிலை ஏற்பட்டுள்ளது".

"தமிழ்மக்கள் மிகவும அடிமட்டமாக மூன்றாம் நிலையில் வைத்து அரசினால் பார்க்கப்படுவது பிற்காலத்தில் எதிர்பாராத பாரதூரமான விளைவுகளை ஏற்படுத்தும்.

'ஆழிப்பேரலை மக்களை இன, மத, பேதம் பார்க்காது தாக்கி அழித்தது. ஆனால், அரசும் சில அதிகாரிகளும் இன்னமும் இனவூதத்துடன் செயற்படுவது குறித்து அதிர்ச்சியடைகிறேன். சுனாமியின் பின்னும் இப்படியும் மனிதர்களா? எனக்கேட்கத் தோன்றுகிறது.

'ஐந்து மாவட்டங்களிலும் தமிழ்மக்கள் படும பாடு பெரிது. பெரும்பாலான முகாம்களில் காலை உணவு இல்லையெனலாம்.

தமிழ்மக்கள் 3ஆம் தரப்பிரஜையூாக நடத்தப்படுகிறார்கள். அரசும், அரசின் அமைச்சர்களும் பிரதிஅமைச்சர்களும் சிங்கள் மற்றும் முஸ்லிம் பிரதேசங்களுக்கு விஜயம் செய்வதோடு, நிறுத்தி விடுகிறார்கள்.

சுகாதார அமைச்சர் நிமால் ஸ்ரீபால டி சில்வா கல்முனைக்கு விஜயம் செய்திருக்கிறார். சாய்ந்தமருது வைத்தியசாலையைப் பாாத்த அவருக்கு 1½ மைலுக்குள் உள்ள காரைதீவு வைத்தியசாலையைப் பார்க்க நேரமில்லை.

அவரை அழைத்துச்சென்ற அமைச்சர் பேரியல் அஷ்ரப் கூட இது விடயத்தில் கவனமெடுக்காதது வேதனைக்குரியது.

விரக்தியின் விளிம்பில் நிற்கும் தமிழ் மக்கள் சீறினால் பாரதூரமான விளைவுகள் ஏற்படலாம்" - என்றார். (3)




**பண்டிகைக்கேற்ற பட்டாசுகள்!**

இப்பொழுது விற்பனையாகின்றன!

☆ சம்பியன் வெடிகள் ☆ சம்பியன்பூந்திரிகள்
☆ சம்பியன் சக்கரவாணம்
☆ சம்பியன் ஈர்க்குவாணம்
☆ சம்பியன் கோர்வை வெடி ☆ சம்பியன் மத்தாப்பு மற்றும் பல

உங்கள் பண்டிகைக் கொண்டாட்டங்கள் மகிழ்ச்சியில் திளைக்க உங்களுக்காகவே தயாரிக்கப்பட்டவை.

மொத்தமாகக் கொள்வனவு செய்வோருக்கு விசேட கழிவு. சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம்.

விநியோகஸ்தர்கள்:

**சிவா நறுமணப் பூங்கா**

288, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். ☎ 021 222 2567

குறிப்பு: மொத்தமாகக் கொள்வனவு செய்பவர்களுக்கு வான் மூலம் இலவச விநியோகம் செய்யப்படும்.

(சி-40299)



**ஒத்திவைக்கப்பட்டுள்ளது**

நேற்றைய 10-01-2005 உதயன் நாளிதழில் பிரசுரமாகியிருந்த - ASIAN COMPUTERS SYSTEMS விளம்பரத்தில் 09-01-2005 இல் நடைபெறவிருந்த -

கணனிக் கற்கை நெறிகளுக்கான இலவச பரீட்சையானது சுனாமி அனர்த்தம் காரணமாக எதிர்வரும் 23-01-2005 ஞாயிற்றுக்கிழமைக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது என்பதை -

இதுவரை இலவச அனுமதி அட்டைகளைப் பெற்றுக் கொண்ட மாணவர்களுக்கும் இம்முறை க.பொ.த. O/L பரீட்சை எழுதிய மாணவர்களுக்கும் அறியத்தருகின்றோம்.

**ASIAN COMPUTER SYSTEMS**

யாழ்ப்பாணம், சுன்னாகம், நெல்லியடி, சாவகச்சேரி, கிளிநொச்சி.

(26-19-16) (சி-40328)


## மரண அறிவித்தல்

### திருமதி நாகேஸ்வரி திருநாவுக்கரசு

(உரிமையாளர், S.Thirunavukkarasu & Sons Distributor for Ceylon Tobacco Company Ltd. Mannar)

தாவடியைப் பிறப்பிடமாகவும் மன்னாரையும் கொழும்பையும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி நாகேஸ்வரி திருநாவுக்கரசு 08.01.2005 சனிக்கிழமை கொழும்பில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற மன்னார் பிரபல வர்த்தகர் சின்னத்தம்பி திருநாவுக்கரசுவின் அன்பு மனைவியும் சிறிதரன் (பொறியியலாளர் - ஆஸ்திரேலியா), கேதீஸ்வரன் (Doctor - ஆஸ்திரேலியா), கலைச்செல்வி பாஸ்கரன் (கொழும்பு), மகேசன் (Australia Postsidney), காலஞ்சென்ற அசோகன் ஆகியோரின் அன்புத் தாயாரும் வசந்தி சிறிதரன் (ஆஸ்திரேலியா), பவானி கேதீஸ்வரன் (ஆஸ்திரேலியா), பாஸ்கரன் (Road Development Authority - Colombo), அஜிந்துகி மகேசன் (ஆஸ்திரேலியா) ஆகியோரின் அன்பு மாமியும் சிறித்தி, சிறீஷா, கீர்த்தனா, அஸ்வினி, சுகன்யா, சுதர்மன், அபிஷேக், அனுஜன் ஆகியோரின் அன்புப் பாட்டியும் பரமேஸ்வரி சுப்பிரமணியம் (கனடா), சிவபாய்க்கியம் சற்குணநாதன் (USA), திரவியமலர் பொன்னம்பலம் (U.K.), ராஜேஸ்வரி சிறீபத்மநாதன் (Australia) ஆகியோரின் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் அவரது இல்லமாகிய No.110, 16ஆவது ஒழுங்கை, கொட்டாஞ்சேனையில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு, இன்று 11.01.2005 செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2.00 மணிக்கு தகனக்கிரியைகளுக்காகக் கொழும்பு கனத்தை மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவ்ித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

திரு.த.பாஸ்கரன்,
*No.110, 16ஆவது ஒழுங்கை,*
*கொழும்பு - 13,*
T.P.: 2435063, 2433928
*அசோகா, தாவடி வடக்கு,*
*கொக்குவில்.*

தகவல்:
பிள்ளைகள்,
மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.
(40330)(24-19-16-26)

## குருபூசையும் நூல் வெளியீடும்

திருக்கேதீஸ்வரம், திருவாசகம் ஸ்ரீ சபாரெத்தின சுவாமிகள் 17 ஆவது குருபூசையும் வாகீச கலாநிதி எழுதிய நயினை ஸ்ரீ நாகபூஷனி ஆய்வு நூல் வெளியீடும் எதிர்வரும் 16 ஆம் திகதி காலை 9 மணிக்கு பலம்பலப் பிட்டி, சரஸ்வதி மண்டபத்தில் நடைபெறவுள்ளன.

திருப்பணித் தவமணி சி.தியாகராசா தலைமையில் நடைபெறவுள்ள இந் நிகழ்விற்குப் பிரதம விருந்தினராக வடக்கு - கிழக்கு மாகாண காணி விவசாய அமைச்சின் செயலாளர் ப.க.பரமலிங்கமும் சிறப்பு விருந்தினராக பேராதனைப் பல்கலைக்கழகத் தமிழ்த்துறையின் முன்னாள் தலைவர் பேராசிரியர் சி.தில்லைநாதனும் கலந்து கொள்வார். (8-202)

### பெண் சாரணர் கருத்தரங்கு நாளை

யாழ்மாவட்ட பெண சாரணியர்களுக்கான வழிகாட்டல் கருத்தரங்கு நாளை 3 மணிக்கு யாழ்.மத்திய கல்லூரியில் நடைபெறவுள்ளதாக யாழ். மாவட்ட பெண் சாரணிய ஆணையாளர் தெரிவித்துள்ளார். (8-202)


**மோட்டார் சைக்கிள் சேர்விஸ்**



கொழும்பிலிருந்து வரும் நிபுணர்களால் சிவகுரு உந்துருளி வாணிபம், பரந்தன் சந்தி, கிளிநொச்சியில் சென்.அந்தனீஸ் கொன்சொலிடேற்றட் லிமிட்டெட் நிறுவனத்தினரால் மோட்டார்சைக்கிள் சேர்விஸ் ஜனவரி 10, 11, 12 ஆகிய மூன்று தினங்களுக்கு இலவசமாக நடத்தப்படவுள்ளது. உமாசாகி வாடிக்கையாளர்கள் அனைவரும் அரிய வாய்ப்பைப் பயன்படுத்திக் கொள்ளுங்கள்.

- சென் அந்தனீஸ் கொன்சொலிடேற்றட் நிறுவனத்தினர்.

(40601)(12-19-16-26)


## எழுதுநர் பயிற்சிநெறிக்கான வேண்டுகை

01. மேற்படி பயிற்சிநெறிக்கு விண்ணப்பித்த அனைவரும் 12.01.2005, 13.01.2005 ஆகிய - புதன், வியாழன் இரு தினங்களிலும் காலை 9.00 மணி தொடக்கம் மாலை ஒரு மணி வரைக்குமான நேரத்துக்குள் சமுகந்தருமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

02. நேர்முகத் தேர்வுக்கு வருகை தருபவர்கள் தங்கள் கல்வித்தகைமைச் சான்றிதழ்கள், பிறப்புச் சான்றிதழ், வதிவிடச் சானறிதழ், தேசிய அடையாள அட்டை, பிற தகைமைச் சான்றிதழ், குடும்பப்பதிவு அட்டை என்பனவற்றுடன் வருகைதருதல் வேண்டும்.

03. நேர்முகத் தேர்வு நடைபெறும் இடம்:
போக்குவரத்துக் கண்காணிப்புப்பிரிவு,
நடுவப்பணியகம்
(கிளிநொச்சி மகாவித்தியாலயம் அருகில்).

கிளிநொச்சி.

பொதுமேலாளர்,
போக்குவரத்துக் கண்காணிப்புப் பிரிவு.

(சி-40327)(39-19-16-26)

## காணவில்லை

### சிவஜெயந்தன் அபிசேகன்



எனும் 8வயது சிறுவன்
(முல்லைத்தீவைச் சேர்ந்தவர்)

வெள்ள அனர்த்தத்தின் பின் கிளிநொச்சி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு 27-12-2004 அன்று மாலை பொதுநலன் விரும்பி ஒருவரால் பராமரிப்பிற்காகவோ/பொதுமகன் ஒருவரால் தவறுதலாகவோ கூட்டிச் செல்லப பட்டது தெரியவருகிறது. எனவே, கூட்டிச் சென்றவர் குடும்பத்தை இழந்து தவிக்கும் அக்குழந்தையின் பரிதாப நிலையை கருத்திற் கொண்டும் குழந்தையின் தகப்பனின் பரிதாப நிலையைக் கருத்திற்கொண்டும் உடன் ஒப்படைக்குமாறு பணிவுடன் கேட்டுக்கொள்கின்றேன். யாராவது தகவல் தெரிந்தால் உடன் எமக்குத் தெரியத்தரவும்.


தகவல் தரவேண்டிய இடம்:

Mr.S.சிவஜெயந்தன்,
*(தகப்பன்)*
முதலாம் வட்டாரம்,
புதுக்குடியிருப்பு. T.P.No.: 0776540663.

S.ஜெயகணேஸ்,
K.M. லேன், நுணாவில் மேற்கு,
சாவகச்சேரி.

(40652)(26-19-16)

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



அமரர்
**வேலுப்பிள்ளை வல்லிபுரம்**

தோற்றம் 25-08-1929 — மறைவு 12-12-2004

பாசமுடன் எமைப் பெற்றெடுத்து
நேசமுடன் அறிவெனும் அமுதூட்டி
அன்புடன் வழிகாட்டிய தெய்வமே!
பாதியிலே எமைப் பிரிந்து சென்றதேனோ?

அன்னாரின் இறுதிக்கிரியைகளின் போது நேரிலும் தொலைபேசி, கடிதம் மூலமும் அனுதாபந் தெரிவித்தவர்களுக்கும் கொட்டும் மழையிலும் சிரமம் பாராது பல்வேறு உதவிகள் புரிந்த அனைவருக்கும் எங்களது நெஞ்சம் நெகிழ்ந்த நன்றிகள் உரித்தாகட்டும்.

பாடசாலை ஒழுங்கை,
நீதிமன்ற வீதி, மல்லாகம்.

- குடும்பத்தினர்.

(40637)(39-19-16-26)

# உண்மை நிலையைப் புரிந்துகொள்ளாமையே பிரச்சினைகளும் பிணக்குகளும் ஏற்படக்காரணம்

## அனுபவத்துடன் விளக்குகிறார் டாக்டர் ஜயலத் எம்.பி.

வலி.வடக்கு,ஜன.10



தமிழீழ விடுலைப் புலிகளுடன் புரிந்துணர்வு ஒப்பந்தத்தை நாம் செய்துகொண்டபோது களுத்துறையிலுள்ள ஒரு பெண்மணி என்னைத் தொலைபேசியில் மிகவும் தரக்குறைவாகத் திட்டியதுடன் என்னை ஒரு துரோகியெனவும் நாட்டைக் காட்டிக் கொடுத்துவிட்டதாகவும் திட்டினார். அதே பெண் பின்னர், புலிகளின் பிரதேசத்துக்குப் போய்த் திரும்பிய பின்னர் அவர்களை வானளவ புகழ்ந்தார். முக்கிய நிலைமைக்குப் புரிந்துணர்வு இல்லாமைதான் காரணம்.

மேற்கண்டவாறு ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர் ஜயலத் ஜெயவர்த்தன குறிப்பிட்டார்.

'அதிகாரப் பரவலாக்கம் இனப்பிரச்சினைத் தீர்வுக்கான வழியாகும்' என்னும் பொருளில் கொழும்பு கொப்பேகடுவ கமநல ஆராய்ச்சி பயிற்சி நிறுவகத்தில் ஜனநாயக உரிமைகளைக் காப்பதற்கான இயக்கம் மற்றும் ஜனநாயகத்துக்கும் சிறுபான்மை உரிமைகளுக்கும் மற்றும் மோதல்களைத் தவிர்ப்பதற்குமான கூட்டமைப்பும் இணைந்து கடந்த மாதம் இறுதிப் பகுதியில் நடத்திய இரண்டு நாள் வதிவிட செயலமர்வு, இணைத் தலைவர்களான வண.பிதா சேவக்க யொகான் தேவானந்த, வண. பட்டபொல நந்த தேரர் ஆகியோர் தலைமையில் இடம்பெற்றன.

இந்நிகழ்வில் தொடர்ந்து உரையாற்றிய நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர் ஜயலத் ஜெயவர்த்தனா -

புரிந்துணர்வு ஒப்பந்தத்தைத் தொடர்ந்து, குறிப்பிட்ட பெண்மணி யாழ்ப்பாணம் ஏ-9 பாதை ஊடாக நாகவிகாரை உட்பட ஏனைய இடங்களுக்கும் சென்றுவிட்டுத் திரும்பிவந்து, எனக்குத் தொலைபேசியில் தொடர்புகொண்டு கூறினார்.

"நான் யாழ்ப்பாணம் சென்றேன். தமிழீழ விடுதலைப் புலிகளுடன் கதைத்தேன். மிகவும் நல்லவர்கள். அவர்களுக்கு நான் எனது தொலைபேசி இலக்கம், முகவரியைக்கூடத் கொடுத்துவிட்டு வந்துள்ளேன். அவர் எனது வீட்டுக்கு வருகின்றேன் என்றும் முன்பு உங்களைத் தெரியாமல் திட்டித் தீர்த்துவிட்டேன் என்றும் தெரிவித்தார்.

இத்தகைய நிலைமைக்குக் காரணமாக இருந்தது ஒருவரையொருவர் புரிந்துகொள்ளாமை, ஒருவர் மீது ஒருவர் நம்பிக்கை வைக்காமை போன்ற சவால்களே ஆகும். உண்மை நிலைமையை அனைவரும் புரிந்துகொண்டால் எமக்கிடையே பிரச்சினைகள், பிணக்குகள் ஏற்படுவதற்கே வாய்ப்பு இல்லாமல் போகமுடியும்.

ஐக்கிய தேசியக் கட்சி பல எதிர்ப்புகளுக்கு மத்தியிலேயே அதிகாரப் பரவலாக்கலை மாகாண சபைகள் ஊடாகக் கொண்டுவந்தது. இதேநேரம் இனப்பிரச்சினை சம்பந்தமாகப் பல கசப்பான அனுபவங்களை நாம் ஏற்கனவே கண்டுள்ளோம். இந்தப் பிரச்சினைகளுக்கு நாம் நல்ல




தொரு தீர்வைக் கொண்டுவர வேண்டுமாக இருந்தால் அதிகாரப் பரவலாக்கல் மூலமே இதனைக் கொண்டுவர முடியும்.

ஐக்கிய தேசியக் கட்சியைப் பொறுத்த வரையில் என்றும் ஒரே கொள்கையைக் கடைபிடித்து வருகின்றோம். நாம் அரசியல் லாபத்தைக் கருத்திற்கொள்ளாது, நாட்டின் நன்மையை இலக்காக வைத்தே கருத்துக்களைக் கூறியுள்ளோம். துப்பாக்கிகள் என்றுமே இனப்பிரச்சினைக்கான தீர்வைப் பெற்றுத்தரப் போவதில்லை. இதேநேரம் இப்பிரச்சினைக்கான தீர்வுகள் என்பது அகிம்சை வழியிலேயே ஏற்படமுடியும் எனவும் கூறுகின்றோம்.

### எதிர்க்கட்சியினர் கூறியதை மக்கள் நம்பவில்லை

வடக்கு - கிழக்கு மற்றும் வன்னி மக்களுக்கும் மனிதாபிமான அடிப்படையில் மருத்துவ உதவிகளைச் செய்தேன். இதற்கு தென்னிலங்கையில் உள்ள பெரும் அரசியல் கட்சிகள் என்னை சிங்கள மக்களுக்கு புலிகள் எனக் கூறி அறிமுகம் செய்தார்கள். சிங்கள மக்களுக்கு பெரும் துரோகம் செய்து விட்டதாகவும் நாட்டைப் பிளவுபடுத்த உதவியதாகவும் கூறி, பாரிய அளவில் மக்கள் மத்தியில் பிரசாரங்களை மேற்கொண்டனர்.

உண்மையில் நடந்தது என்ன? கம்பஹா மாவட்டத்தில் நான் அதிகப்படியாக வாக்குகளைப் பெற்று, இரண்டாவதாகத் தெரிவு செய்யப்பட்டேன். இதன்மூலம் எதிர்க்கட்சியினர் கூறியது போன்று என்னைச் சிங்கள மக்கள் பார்க்கவில்லையென்று மிகவும் தெளிவாக எடுத்துக் காட்டியுள்ளார்கள் - என்று கூறினார்.

அவர் தொடர்ந்து பேசுகையில், இடைக்கால நிர்வாகத்தை உடனடியாக ஏற்கவேண்டும் என்பதில்லை. இதேநேரம், இதன் அடிப்படையில் உடனடியாகப் பேச்சை ஆரம்பிக்கலாம். சமாதானப் பேச்சு என்பது உண்மையான இதயசுத்தியுடனும் துணிச்சலுடனும் பேசவேண்டியது. இத்தகைய ஒரு நிலைமை - சூழ்நிலை - காணப்படுமாக இருந்தாலே தமிழீழ விடுதலைப் புலிகளும் நம்பிக்கையுடன் பேச்சுக்கு வரமுடியும்.

இலங்கையின் இனப்பிரச்சினை இழுபட்டுக் கொண்டு செல்வதற்குக் காரணமாக அரசில் இருக்கும் சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்கும் ஜே.வி.பிக்கும் இடையே காணப்படும் முரண்பாடுகளே காரணம் எனவும் குறிப்பிட்டார்.

### ஜே.வி.பியும் மாறியுள்ளது

ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் சார்பில் உரையாற்றிய கலாநிதி விக்கினேஸ்வரன்:- காலத்திற்குக் காலம் அதிகாரப் பகிர்வை எதிர்த்த கட்சிகள், இன்று இதனை ஏற்றுக்கொள்ளும் நிலைக்கு வந்துள்ளார்கள். 52 ஆம் ஆண்டு வரைக்கும் வடக்கு - கிழக்கில் உள்ளவர்களினால் சமஷ்டி அமைப்பு பற்றி சிந்திக்கவில்லை. 56 ஆம் ஆண்டு வரைக்கும் சமஷ்டிக் கட்சிக்குத் தமிழ் மக்களிடையே இருந்து பலமான ஆதரவுகள் கிடைக்கவில்லையென்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.

56 ஆண்டின் பின்னர் தொடர்ந்து பல்வேறு பிரச்சினைகளும் ஏற்பட்டன. பண்டா - செல்வா ஒப்பந்தம், டட்லி - செல்வா ஒப்பந்தம் என்று செய்யப்பட்ட ஒப்பந்தம் மற்றும் மாவட்ட சபைகள், மாகாணசபைகள் என்று கொண்டுவரப்பட்ட போதிலும்கூட, இவைகள் எவையும் நிலைத்து இருக்கமுடியவில்லை. இத்தகைய சூழ்நிலையில் 72 ஆம் ஆண்டில் வட்டுக்கோட்டைத் தீமானத்தின் மூலம் தமிழ்மக்கள் பிரிந்து செல்லவேண்டும் என்ற முடிவை முன்வைத்தார்கள்.

கடந்த நான்கு வருடங்களாக ஜே.வி.பியினர் அதிகாரப் பரவலாக்கலை எதிர்த்து வந்தார்கள். இன்று அவர்கள்கூட அதிகாரப் பகிர்வுக்குப் பதிலாக அதிகாரப் பரம்பல் என்ற அடிப்படையில் ஏற்றுக்கொள்ளும் நிலைமைக்கு வந்துள்ளார்கள்.

இதேநேரம், தமிழ் அரசியல்கட்சிகள் இதனை ஏற்கப் பின்நிற்கின்றன. ஏன், நாம் இடைக்கால நிர்வாகம் பற்றிக் கதைக்கவேண்டும். நேரடியாகவே சமஷ்டி பற்றிக் கதைக்கலாம். தமிழர்களின் தலைமையில் ஒருபகுதியினர் சமஷ்டி பற்றிக் கதைக்க மறுத்து வருகின்றார்கள் - என்றார்.

### மக்கள் தம் பொறுப்பை உணரவேண்டும்

நிகழ்வுக்குத் தலைமை தாங்கிய இணைத் தலைவர்களில் ஒருவரான வண.பிதா சேவக்க ஏயாகான் தேவானந்த உரையாற்றும்போது-

மதங்களும் அரசியலும் ஒன்று இணைய முடியாது எனக் கூறப்பட்டு வருகின்றது. இத்தகைய ஒரு சூழ்நிலையில் இந்நிகழ்வானது பல அரசியல்கட்சிகளுடன் இடம்பெறும் நிகழ்வுக்கு இரண்டு மதங்களின் தலைவர்கள் தலைமை தாங்குகின்றார்கள். இது அமைப்பாளர்களின் உண்மையான நிலைப்பாட்டை எடுத்துக் காட்டுகின்றது.

அரசியலுக்கும் மதத்திற்கும் உள்ள உறவைத் தெளிவாகக் கூறவேண்டுமானால் தர்மத்தின் ஊற்றாக மதம் இருக்கின்றது. அரசியலைப் பொறுத்தவரையில் எதிரிக்கு எதிராகப் போராடவேண்டிய நிலைமை காணப்படுகின்றது.

தலைவர்கள் என்று கூறிக்கொள்பவர்களுடைய எந்தவொரு செயற்பாடுகளும் மக்களுக்கு நன்மைகளைக் கொண்டுவருவதில்லை. மக்களாகிய நாங்கள் எமது கடமைகள், பொறுப்புக்களை உணர்ந்து செயற்படவேண்டியது அவசியமாகும் - என்று கூறினார்.

(ப-5-86)

# தெற்கிற்கே அதிக உதவிகளைப் பெற்றுக்கொள்ள அரசு திட்டம்

## யாழ்.மாவட்ட கல்விக் கழகப் பொறுப்பாளர் கூறுகிறார்

"தமிழர் தாயகப் பகுதிகளில் ஏற்பட்ட சுனாமி அழிவுகளை அரசு திட்டமிட்ட வகையில் குறைத்துக் காண்பித்து வருகிறது. இதன் மூலம் அழிவுகள் கூடிய பகுதியாகத் தென் பகுதியை எடுத்துக்காட்டிக், கிடைக்கின்ற உத வித் திட்டங்களைத் தென்பகுதிக்கே கூடுதலாக வழங்குவதற்கான செயற்பாடுகளில் ஈடுபட்டு வருகிறது."

தமிழீழ கல்விக்கழகத்தின் யாழ்.மாவட்டப் பொறுப்பாளர் ஆர்வலன் இவ்வாறு கூறினார்.

சுனாமி இயற்கை அனர்த்தங்களினால் பாதிக்கப்பட்ட மக்களின் துயர்துடைப்பு தொடர்பாக மருதனார்மடம் இராமநாதன் கல்லூரி மண்டபத்தில் நடைபெற்ற வலிகாமம் கல்வி வலயப் பாடசாலை அதிபர்களுக்கான கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே ஆவலன் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

வலிகாமம் வலயக் கல்விப்பணிப்பாளர் திருமதி றெஜினா இருதயநாதன் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் ஆர்வலன் மேலும் கூறியதாவது, தமிழீழ விடுதலைப் போராட்டத்தை நாங்கள் ஆரம்பிக்கின்றபோது எப்படி எங்கள் மக்களுடைய பலத்திலே நின்று போராடினோமோ, அதேபோல இன்றைய கடலலை அனர்த்த துயரங்களின்போதும் மக்களின் பலத்தின் மூலமே பாதிக்கப்பட்ட மக்களின் அடிப்படைத் தேவைகளை நாம் மேற்கொள்ளவேண்டியுள்ளோம்.

எமது விடுதலைப் போராட்டம், மாவீரர் தினம் போன்றவற்றுக்கு ஆசிரிய சமூகம் முன்னின்று உதவிபுரிவது போல இன்றைய துயரத்திலும் உதவவேண்டும்.

ஆசிரியர்கள் மற்றும் அரச ஊழியர்கள் மூலம் 15கோடி ரூபாவை நாம் திரட்ட முடியும். விடுதலைப் போராட்டத்தில் கடந்த 20 வருடங்களில் 80ஆயிரம் மக்களையும் 18 ஆயிரம் போராளிகளையும் இழந்த நாம், இந்த அனர்த்தத்தின் போது 20 நிமிட நேரத்தில் 20ஆயிரத்துக்கும் மேற்பட்ட உறவுகளை இழந்து விட்டோம்.

பாதிக்கப்பட்ட மக்கள் தமது வாழ்வினை ஆரம்பத்தில் இருந்து ஆரம்பிக்க வேண்டியவர்களாக உள்ளனர். அவர்களுக்கு எமது உதவிகள் கிடைக்க வேண்டும் - என்று கூறினார்.

தமிழீழ மாணவர் ஒன்றிய ஆலோசகர் சரா.புவனேந்திரன் பேசுகையில் -

இடப்பெயர்வு, சொத்தழிவு, உயிரழிவு என்பன தமிழ் மக்களுக்குப் பழக்கப்பட்ட விடயங்கள். எனினும், இயற்கையினால் கொள்ளை கொள்ளப்பட்ட உயிர், உடைமை இழப்புக்கள் தமிழர் வரலாற்றில் இடம்பெறாத ஒன்றாகும் - என்றார்.

திருமதி றெஜினா இருதயநாதன் தமது தலைமையுரையில் -

நிவாரணப் பணிகளில் கல்வி மேம்பாட்டுப் பேரவையுடன் மாணவர், ஆசிரியர், அதிபர்களின் பிரதிநிதிகள் இணைந்து செயற்படவேண்டும். நிவாரணம் வழங்குவதில் நேரடியாகச் சம்பந்தப்படுவதன் மூலம் பாதிக்கப்பட்ட மக்களின் நிலையை நேரில் கண்டு, அவர்களுக்குத் தொடர்ந்தும் உதவவேண்டும் என்ற மனநிலை இதன்போது ஏற்படும். ஒழுங்குபடுத்தப்பட்ட முறையில் நிவாரணத்தைச் சீராக வழங்கவும் வழி ஏற்படும் - எனக் கூறினார். (ப-152)

# இல.வங்கியின் மானிப்பாய் விரிவாக்க அலுவலகம் திறப்பு

சங்கானை,ஜன.10

இலங்கை வங்கி தனது 66 ஆவது ஆண்டில் காலடி எடுத்துவைத்துள்ளது. பல பிரதேசங்களிலும் புதிய கிளைகளை நிறுவி, வங்கியின் சேவையை விஸ்தரித்து வருகின்றது. அதேரீதியில், சங்கானையிலும் இவ்வங்கியின் விரிவாக்க அலுவலகத்தை இன்று திறந்து வைக்கின்றோம். இதன் வளர்ச்சிக்கு வாடிக்கையாளர்களை ஆக்கமும் ஊக்கமும் அளித்து இதனை வளர்த்தெடுக்க வேண்டும் என சங்கானையில் மானிப்பாய் இலங்கை வங்கியின் விரிவாக்க அலுவலகத்தைத் திறந்துவைத்து உரையாற்றிய வங்கிச் செயற்பாட்டு முகாமையாளர் பி.ஏ.அருமைநாயகம் குறிப்பிட்டார்.

இந்நிகழ்வில் கலந்துகொண்டு சிறப்புரையாற்றிய வடபிராந்திய உதவிப் பொது முகாமையாளர் க.பாலசுப்பிரமணியம் தனது உரையில் -

சங்கானையில் ஓர் இலங்கை வங்கிக் கிளையைத் திறக்குமாறு இப்பகுதி மக்கள் பலரும் பலவருடமாகக் கோரிக்கை விடுத்ததற்கிணங்கி இன்று இவ்விரிவாக்க அலுவலகம் திறந்துவைக்கப்படுகின்றது. இவ்வங்கியின் வளர்ச்சியில் நீங்களும் வளர்ச்சி பெறுவீகள். வாடிக்கையாளர்களாகிய இப்பகுதி மக்களின் ஆக்கமும் ஊக்கமும் இதனை வளர்ச்சியுறச் செய்யும் - என்றார்

இத்திறப்பு விழாவில் இலங்கை வங்கியின் கொழும்புக் காரியாலய சிரேஷ்ட முகாமையாளர் பி.சுந்தரலிங்கம், யாழ்.மாவட்ட பிரதான முகாமையாளர் சீ.நடராஜலிங்கம், வலி.மேற்கு உதவிப் பிரதேசசெயலர் திருமதி ரீ.பாபு, இந்த வங்கியின் பொறுப்பதிகாரியாகப் பொறுப்பேற்றுள்ள திருமதி கே.இராமலிங்கம் உட்பட வங்கி அதிகாரிகள் பலரும் பங்குபற்றி உரையாற்றினர். (ப-29)

# வல்வை.வைத்தியசாலையின் சேவை: ஜேர்மன் தொழில்நுட்ப நிபுணர் பாராட்டு

"யுத்த அனர்த்தங்களினால் மிகப் பாதிப்படைந்துள்ள இப்பகுதி மக்களிற்கு வல்வெட்டித்துறை மாவட்ட வைத்தியசாலை ஆற்றிவரும் சேவைகள் பெரும் வரப்பிரசாதமாகும். இவ்வைத்தியசாலை மக்களுக்குச் சிறந்த சேவைகளை வழங்கிச் சாதனையை நிலைநாட்டி வருவது பாராட்டிற்குரியதாகும்".

- இவ்வாறு 'நிக்கொட்' நிறுவனத்தால் சுமார் 15 லட்சம் ரூபா செலவில் வல்வெட்டித்துறை மாவட்ட வைத்தியசாலையில் நிர்மாணிக்கப்பட்ட சமையல் கூடத்தைச் சம்பிரதாயபூர்வமாகத் திறந்துவைத்து உரையாற்றிய ஜேர்மன தொழில்நுட்பக் கூட்டுத்தாபன இணைப்பாளர் வால்டர் கெல்லர் குறிப்பிட்டார். விழாவிற்கு வைத்தியசாலை மாவட்ட வைத்திய அதிகாரி வைத்திய கலாநிதி கே.மயிலேறும்பெருமாள் தலைமை வகித்தார் வல்வை அம்பாள் ஆலயப் பிரதமகுரு சிவஸ்ரீ எஸ் தண்டபாணிக தேசிகர் ஆசியுரை வழங்கினார்.

வால்டர் கெல்லர் தொடர்ந்து உரையாற்றுகையில் குறிப்பிட்டதாவது:-

இந்த வைத்தியசாலைக்கு ஜேர்மன் தொழில நுட்பக் கூட்டுத்தாபனமும் உதவிகளை வழங்கியுள்ளது. இவ்வைத்தியசாலை மிகச் சிறப்பாகச் செயற்பட்டு வருவதனால் நோயாளர்கள் சிறந்த வைத்திய சேவைகளைப் பெற்று வருகின்றனர். இவ்வைத்தியசாலையின் மாவட்ட வைத்திய அதிகாரியின் சிறந்த செயற்பாடுகளும் சேவை மனப்பான்மையும் இவ்வைத்தியசாலைக்கு மக்கள் வழங்கிவரும் பங்களிப்புகளும் இவ் வைத்தியசாலையின் அபிவிருத்தி மேம்பாட்டு நடவடிக்கைகளுக்குக் காரணமாகவுள்ளன.

இவ்வைத்தியசாலையின் வைத்திய சேவைச சாதனைகளை அறிந்துள்ளமையினாலேயே இவ்விழாவில் கலந்துகொள்ள வேண்டுமென்ற ஆர்வத்தினால் இன்று திருகோணமலையிலிருந்து இங்கு வந்துள்ளேன் - என்று கூறினார்.

இவ்வைத்தியசாலைக்கு ஆஸ்திரேலியாவில் இயங்கும் வல்வை நலன்புரிச் சங்கம் அனுப்பிவைத்திருந்த சுமார் 10 லட்சம் ரூபா பெறுமதியான இரத்தப் பரிசோதனை நுண் கருவியை யாழ். சுகாதார சேவைப் பிரதிப் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆர்.தெய்வேந்திரன் இயக்கி ஆரம்பித்து வைத்தார்.

வைத்தியசாலை அபிவிருத்திச் சபையால் நடத்தப்பட்ட இலவச கண் வைத்திய முகாமில் கண் பரிசோதித்து வைத்திய நிபுணர்களால் சிபார்சு செய்யப்பட்ட 210 பேருக்கு இலவச மூக்குக் கண்ணாடிகளும் வழங்கப்பட்டன.

வல்வெட்டித்துறையில் 5 ஆம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையில் சிறப்புச் சித்திகள் பெற்ற 10 மாணவ, மாணவிகள் விழா ஆரம்பத்தில் வல்வெட்டித்துறைச் சந்தியிலிருந்து ஊர்வலமாக வைத்தியசாலை வரை அழைத்து வரப்பட்டு, பாராட்டிப் பரிசில்கள் வழங்கிக் கௌரவிக்கப்பட்டனர்.

பருத்தித்துறை சட்டத்தரணிகள், சங்கப் போஷகர் ஆர்.உருத்திரா, பருத்தித்துறை பிரதேச செயலர் எஸ்வசந்தகுமார், யாழ் செயலகத் தலைமைக் காரியாலய உதவி அரச அதிபர் வி.வீரபத்திரபிள்ளை, இளைப்பாறிய மாவட்ட நீதிபதி எம்.திருநாவுக்கரசு, வல்வெட்டித் துறை மக்கள் வங்கி முகாமையாளர் திருமதி ரீ.தவமணி, சட்டத்தரணி எஸ்.சிவனருள்சுந்தரம், மீனவர் கூட்டுறவுச் சங்கச் சமாச முகாமையாளர் எஸ்.சூரியகுமார் ஆகியோரும் உரையாற்றினர். (ப-173)

# பாதிக்கப்பட்டோரின் உள்மன விருப்பங்களை உள்வாங்கி திட்டங்களை செயற்படுத்துவோம்!

26.12.2004 நில அதிர்வுப் பேரலை அனர்த்தத்தில் இழப்புக்களை எதிர்கொண்டு இன்று முகாம்களில் வாழும் எமது மக்கள் தமது அவலங்கள் குறித்துக் கதைக்கிறார்கள். ஆனால், அத்துடன் மட்டும் நின்று விடவில்லை. அவர்கள அன்று நடந்த அனர்த்தம் குறித்தும் அந்த அனர்த்தம் எவ்வாறு நிகழ்ந்தது? அதன் பின்னணி என்ன? போன்றவற்றை எல்லாம் பல்வேறு கோணப்பட்ட ஓர் ஆராய்ச்சி கண்ணோட்டத்தில் அலசிப் பார்க்கும் தன்மை காணப்படுகின்றது. உதாரணமாக வழமையான கடல் கொந்தளிப்பிற்கும் இதற்குமுள்ள வேறுபாடுகள், அலையின் நிற வேறுபாடுகள், அணுகுண்டு வெடிப்பினால் இது ஏற்பட்டிருக்கலாம் என்ற சந்தேகங்கள், ஏற்பட்ட பாதிப்பின் தன்மைகள் போன்றவற்றை தமது அனுபவம், அறிவுக்கு எட்டிய வகையில் அலசிப் பார்க்கின்றார்கள்.


உள் மன விருப்பை வெளிப்படுத்தும் ஒரு தாய்.....

தற்காலிகமாக அவர்கள் தாம் சார்ந்த சமயக் கடவுள்களின் கிருபைகளில், அருளில் தமது நம்பிக்கைகளை இணைத்துக் கொள்கின்றார்கள. தாம் சார்ந்த மீனவச் சங்கங்களில் பெரு நம்பிக்கையை வெளிப்படுத்துகின்றார்கள். தாம் வாழும் முகாம்களில் உள்ள உடனடிப் பிரச்சினைகள் குறித்து முறையிடும் அவர்கள் அவற்றை எல்லாம் மாற்றியமைத்தால் தாம் மகிழ்வாகச் செயற்படலாம் என்பதையும் கூறுகின்றார்கள். எல்லாவற்றுக்கும் மேலாக தமது கௌரவத்தை பெரிதாக எண்ணுகின்றார்கள். தாம் மனிதர்களாக வாழும் உரிமையை வலியுத்தும் அவர்கள் தமது கௌரவத்திற்குப் பங்கம் ஏற்படுத்தும் வகையில் ஏவப்படும் சொலலம்புகள் குறித்தும் சில சமயங்களில், சில செயற்பாடுகள் குறித்தும் தமது வேதனைகளை வெளிப்படுத்துகின்றார்கள்.

## தங்கள் தேவை சார்ந்து திட்டமிடும் தன்மை அவர்களிடம் அரும்புகிறது

கட்டியெழுப்பப்பட வேண்டிய தமது எதிர்காலததின் தேவையைப் பொதுவாக உணர்ந்துள்ளார்கள். அந்த எதிர்காலம் எப்படி இருக்கவேணடும் எனத் தமது தேவை சார்ந்து திட்டமிடும் தன்மையும் மெதுவாக அரும்பி வருகின்றது. சாபிழை என்பதற்கப்பால் தமது இழந்த வீடுகளைக் கொண்டு கடலுக்காக ஓர் அணை கட்டவேண்டும்; அலை அந்த அணையை உடைக்க எடுககும் அவகாசத்தில் எம்மால் உயிர் தப்பிவிட முடியும்; எமதுகடற்கரையில் இருக்கும் மணற்கும்பிகள் ஓர் இயற்கையான பாதுகாப்பரண்; அதனால் பல உயிர்கள் பாதுகாக்கப்பட்டிருக்கிறது; இனி அங்கு மணல் அகழ்வுவேலைகள் நிறுத்தப்படுவதே நல்லது போன்ற தற்காப்பு, நிலைமைகள் குறித்தும் அவர்கள் கதைக்கின்றார்கள். இதுவரை இப்பேரலைகள் சார்ந்த விஞ்ஞான ஆராய்ச்சிகள் குறித்தும் விஞ்ஞானக் கண்டுபிடிப்புகள் குறித்தும் அறியும் ஆர்வம் காணப்படுகின்றது. இனி தங்களின் பாதுகாப்பிற்காக இத்தகைய விஞ்ஞானக் கண்டுபிடிப்புக்கள் வேண்டும்; இதை விஞ்ஞானிகள் கண்டுகொள்ள வேண்டும் எனக் கேட்டுக்கொள்கிறார்கள்.

ஒட்டுமொத்தமாகக் கரையோர வாழ் மக்கள் சந்தித்த பேரிழப்புக்களின் பின் உருவாகிவரும் நிலைமைகளை அவதானிக்கும் போக்கும் அதன் பின் உள்ள சர்வதேச அரசியல் குறிதது நுணுக்கி ஆராய்ந்து பார்த்துக் கதைக்கும் பக்குவத்தையும் அவர்கள் வெளிப்படுத்துகிறார்கள். வார்த்தைகளால் வடித்து உணர வைக்க முடியாத இழப்புக்களைச் சந்தித்த போதும் அவர்களது மனம் ஏதாவது ஒரு நமபிக்கையைப் பற்றிக்கொள்ளத் துடிக்கின்றது.

கனவிலும் எதிர்பார்க்காத இழப்புக்களைச் சந்தித்த பின்னும் இழப்புக்களை மட்டும் நினைத்து மருகிக் கொண்டிருக்காமல் பல்வேறு விடயங்கள் குறித்துக் கதைப்பதும் திட்டங்களை யோசிப்பதும் ஆலோசனைகளை வழங்குவதும் மிகவும் வியப்பிற்குரிய, ஆரோககியமான, எமது சமூகத்தின் மனவலுவிற்கும் உளநலத்திற்கும் சான்றாக அமைக்கூடிய தொன்றாகும். மேலாக மிகப்பெரியதொரு அனுபவத்தைப் பெற்ற அவர்களிடையே நிவாரணப் பணிகளையும் மீள் கட்டுமானப் பணிகளையும் மேற்கொள்ளும் துறைசார் வல்லுநர்கள் ஊடாட வேண்டிய காத்திரமான கருததுக்கள் காத்திருக்கின்றன.

**கணேசமூர்த்தி ஸ்ரீதரன்**
மருத்துவபீட இறுதியாண்டு மாணவன்
யாழ்.பல்கலைக்கழகம்.

நடந்த அழிவுகளில் இருந்து கிளர்ந்தெழுந்த நன்மையாக மானுட உணர்வு கிளரபட்டு இந்தத் தீவிலுள்ள மக்கள் மட்டுமல்ல உலகமே மனித நேயத்தின் பெயரில் ஒன்றுபட்டு நிற்கின்றது. வேளை கூடி வந்தது போல் நம்பிக்கையுடன் வாழத்துடிக்கும் இம்மக்களின் உள்மன விருப்பங்கள் அறியப்பட்டு, அவர்களின் தேவைகளைப் பூர்த்திசெய்யும், நம்பிக்கையூட்டும் திட்டஙகள் முன்மொழியப்பட்டு, அவை வினைததிறனாக செயற்படுத்தப்படும் போது இந்த இழப்புக்களில் இருந்து மீண்டு வருவது மிகப் பெரியதொரு விடயமாக இருக்கப்போவதில்லை. எமக்கு முன் எழுந்துள்ள இந்தக் காலத்தின் தேவையை உரிய முறையில் எதிர்கொண்டு பக்குவமாகச் செயற்படுவதானது இத் தீவில் நீண்ட காலமாகத் தீர்க கப்பட முடியாமல் நீண்டு செல்லும் இனமுரண்பாட்டைக் களைவதில் பேருதவி புரியும் என்பதும் திண்ணம். ☆

## உங்களுடன் ஒரு மனம் பற்றி...

✣பெயர்: (தவிர்க்கப்பட்டுள்ளது)
✣வயது: 18
✣விவாகமானவர், ஒரு குழந்தையின் தந்தை.
✣இடம்: தும்பளை சிவப்பிரகாச வித்தியாலயம்.

நாம் சந்தித்த போது வாங்கு ஒன்றில் அசையாமல் படுத்திருந்தார். ஆற்றுப்படையாளி ஓர் பெண்ணுடன் கதைத்துக் கொண்டிருப்பதை நீண்ட நேரமாக விழி மூடாது பார்த்துக் கொண்டிருந்தார், அதன் பின்னர் அவரது உடல் மெதுவாக அசையத் தொடங்குகின்றது. வாங்கிலிருந்து எழுந்து கதை நடந்து கொண்டிருக்கும் இடத்திற்குச் செல்கின்றார். அருகே இருந்த மேசையில் சரிந்தபடி தொடர்ந்து கதை நடப்பதை அவதானித்துக் கொண்டிருக்கின்றார். அவர் முகத்தில் சிரிப்பு வருகின்றது. மெல்ல மெல்ல ஆற்றுப்படையாளியுடன், கதையாடத் தொடங்குகின்றார்.

"இனி என்ன எல்லாம் போச்சுத்தானே, இனி என்னெண்டு மீட்கிறது?

இடம் போய்ப் பார்த்தனீங்களா"?

"சுடலை மாதிரி இருக்கு. திரும்பத் திரும்ப நாங்கள் அடி வாங்கிறம். நாகர்கோயிலில் கல்வீடு கட்டியிருந்தனாங்கள். பிரச்சினையால வன்னிக்குப் போய் அங்க இருந்து வந்து இஞ்ச இருந்தனாங்கள். இஞ்சையும் இப்படி நடந்து போச்சு. எங்களுக்கு வெளிநாட்டில் சொந்தம் எண்டு இல்லை. இருக்கிற சொந்தமும் எங்களை உயர்த்தி விடாது, பணிக்கத்தான் பார்க்கும்".



ஆரம்பத்தில் அசைவே இல்லாது இருந்த உடம்பில் இருந்து, மடை திறந்த நீராக வார்த்தைகள் கொட்டுகின்றன.

**இறுதியாக...**

"நீங்கள் வந்திருக் காட்டி இதுல படுத்திருந்து யோசிச்சு யோசிச்சு அடிச்சிருக்கும்"

ஆற்றுப்படையாளியை நோக்கி நன்றியுடன் கூறுகின்றார். இறுதியில் ஆற்றுப் படையாளிக்கு விடை கொடுத்து பக்குவமாக வழியனுப்பி வைக்கின்றார்.

### ஆற்றுப்படையாளியின் மனதிலிருந்து..

இழப்புக்களுடன் இருக்கும் ஒருவரை நம்பிக்கையான, நட்பார்ந்த கதை கேட்டல் அல்லது அன்பாகக் கதைத்தல் கவர்ந்திழுக்கின்றது. அதன் விளைவாக மனதிலும் உடலிலும் மாற்றங்கள் ஏற்படுகின்றன. (உடல் அசைவு, சிரிப்பு) கதைக்கும்போது 'எல்லாம் போச்சு' 'திரும்ப திருப்ப அடி வாங்கிறம்' என்ற விரக்தி வெளிவருகின்றது. இருந்தபோதிலும் 'எப்பிடி மீட்கப் போறம்?' என்ற தேடலும் அந்த விரக்திக்குள் பொதிந்திருக்கின்றது. இழப்பினால் விரக்தியுற்று உதவி பெறும் நிலைக்கு தள்ளப்பட்டதால் தனக்குக் கிடைக்கப் போகும் உதவி குறித்தும் உதவி செய்பவர்களின் தன்மை குறித்தும் அவா கதைக்கின்றார். மேலாக தான் கதைப்பதால் தனது கதையைக் கேட்க ஒருவர் வருவதால்தான் ஒரு மனநோயாளி ஆகக்கூடிய அபாயத்தில் சிக்காமல் தப்பமுடியும் என்ற அறிவும் அவரிடம் இருக்கின்றது.

அவர் கதைத்த பிறகு ஒரு நம்பிக்கை பிறக்கிறது. நாங்கள் செய்கிற வேலை அவர்களுக்கு தேவைப்படுவதைப் பார்க்க சந்தோசமாக இருக்கிறது.


நாளைய நம்பிக்கைகளுடன்..... நலன்புரி முகாமுக்கு வெளியே.....

# தமிழ்ச் சமூகத்துக்கான சர்வதேச உதவிகள் நேரடியாகக் கிடைக்க வழி செய்ய வேண்டும்

## 'ஐ.நா.வழி' ஒன்று உருவாக்கப்படவேண்டும்

யாழ்ப்பாணம்,ஜன.11

சர்வதேச உதவியில் தமிழ் சமூகத்திற்கென ஒதுக்கப்படும் பகுதியை நேரடியாக அவர்களிடம் கையளிப்பதற்கான வழிமுறைகளை ஏற்படுத்துங்கள்.

இவ்வாறு சமாதான மனித உரிமைப் பண்பாட்டு பணியகம் ஐ.நா. பொதுச் செயலாளர் கோபி அனானுக்கு அனுப்பியுள்ள மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சமாதான மனித உரிமைப் பண்பாட்டு பணியகத்தின் பணிப்பாளர் வண பிதா ஏ.ஐ.பேனாட இவ்விடயம் தொடர்பாக அனுப்பியுள்ள அந்த மகஜரில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

இலங்கைக்கான தங்கள் வரவு பற்றிய தகவல் வெளியிடப்பட்ட போது நாம் பெருமகிழ்வடைந்தோம். அவ்வரவானது சுனாமியால் பாதிக்கப்பட்டோருடன் சர்வதேச சமூகம் ஒன்றித்து நிற்பதை வெளிப்படுத்திநின்றது. வடபகுதித் தமிழ் மக்கள் அதை ஆவலுடன் எதிர்பார்த்திருப்பதற்கு விசேட காரணமிருந்தது.

யாழ்ப்பாணத்தை யுத்தத்தின் மைய வலயமாகக் கொண்டு 25ஆண்டுகளாக எம்மக்களின் உயிர்களையும், மண்ணையும் சிதைத்து வந்த கொடியபோர், முடிந்தும், முடியாததுமான கட்டத்தில், இந்த நாசகார சுனாமி அனர்த்தம் வெகுண்டெழுந்துள்ளது. யுத்தத்தின் அழிவுகளிலிருந்து மக்கள் தம் வாழ்க்கையை மீண்டும் கட்டியெழுப்ப ஆரம்பித்திருந்தபோது அதுவும் வெளியுதவியின்றி பெரும்பாலும் தம் சொந்த முயற்சியாலேயே மீளக் கட்டியெழுப்பும் வேலையில் ஈடுபட்டிருந்தபோது இந்த சுனாமி என்ற அனர்த்தம் இவ்வாறு இரட்டிப்பாக நொறுங்குண்டவர்கள் இப்பகுதி மக்கள். எனவே, இவர்கள் இரட்டிப்பான கரிசனைக்கு உரித்தானவர்கள். ஆனால், நடந்துள்ளதோ வேறு, மக்களுக்கு கிடைத்தது மனவுடைவுதான். மனிதாபிமான கரிசனை, அரசியல் பழிவாங்கலுக்கு வலுக்கட்டாயமாக அடிபணிய வைக்கப்பட்டுள்ளது. தாங்கள் நொறுக்கப்பட்ட எங்கள் சமூகத்தை சந்திப்பதற்கு இலங்கை அரசு தடைபோட்டது. எமது வேதனையை அதிகரிக்கச் செய்துள்ளது.

இலங்கையரசின், நியாயத்திற்கு முரணான இச்செயல் புதிதானதொன்றல்ல. இலங்கையின் சுதந்திரம் தொடக்கம், நாட்டின் வாழ்க்கையிலும், செழிப்பிலுமிருந்து தமிழ் மக்களைப் புறந்தள்ளிவைக்கும் அரச கோட்பாட்டின் மேலுமோர் எடுத்துக்காட்டே இச் செயல்.

கடந்த காலங்களில் வடக்கு - கிழக்குப் பகுதிக்கென குறிப்பாக ஒதுக்கப்பட்ட உதவிகளில், ஒருசில துளிகளே தமிழ் மக்களைச் சேர்ந்தடைந்தன. ஏனையவை வேறுநோக்கங்களுக்காக அரசினால் திசை திருப்பப்பட்டுள்ளன. இது யாவரும் அறிந்த உண்மையே.

இத்தகைய பின்னணியில் தற்போது இடம்பெறும் நிவாரணப்பணியின் பொறுப்பை அரச படையினரிடம் ஒப்படைப்பது பெருந்தவறாகும். அவர்களை அந்நியப் படையினராகவே தமிழ் மக்கள் நோக்குகின்றனர்.

எனவே, அது தமிழ் மக்களின் மனதைப் புண்படுத்துவதுடன், சமாதானத்தின் எதிர்காலம் மட்டில் பாரிய சேதத்தை உண்டாக்கும். ஈற்றில் வேறுசில நாடுகளிலிருந்து படையினர் இங்கு கொண்டுவரப்பட்டுள்ளமை குழப்பத்தை ஏற்படுத்துகின்றது. இவர்களுடைய வருகையின் நோக்கம் மனிதாபிமான உதவிப்பணியே என்று வெளிப்படையாகக் கூறப்படினும், மக்கள் அதை நம்பாது ஐயத்துடன்தான் பார்க்கின்றனர். அதற்குக் காரணமும் உண்டு.

ஏற்கனவே, சிக்கலானதும், மெதுவானதுமான அரசியல் நிலையை அது மேலும் சிக்கலாக்கக் கூடிய அபாயம் உள்ளது. பதிலாக, ஒரு "ஐ.நா.வழி"யை (UN Corridor) உருவாக்குவதே சிறந்தது.

நொறுங்குண்ட எம்மக்களின் வாழ்க்கையை மீண்டும் கட்டியெழுப்பும் பணியில் மீள்குடியமர்த்தல், புனரமைத்தல் ஆகிய கட்டங்களுக்கு இத்தகைய "ஐ.நா. வழி" அவசியமானதாயிருக்கும்.

எமதுகோரிக்கைகளுக்கு அதிமுக்கிய கரிசனம் செலுத்துவீர்கள் என்று நம்பியுள்ளோம் - என்றுள்ளது.

(8-204)

# சிமெந்து இடிபாடுகளைக் கொண்டு பாதுகாப்பு அணை அமைக்கலாம்

வடமராட்சியில் "சுனாமி" ஆழிப்பேரலையால் அழிவுண்ட பிரதேசத்தைச் சேர்ந்தவர் கட்டுரையாளர் நாகலிங்கம் சிவயோகன்.

26-12-2004 அன்று அனர்த்தம் நிகழ்ந்தகையோடு வடமராட்சிக் கரையோரத்தைச் சுற்றிப்பார்த்த அவர் தான் கண்ட அழிவுக் காட்சிகளைக் கட்டுரைத் தொகுபபாக்கியுள்ளார். அவரது கட்டுரையின் மூன்றாவது இறுதிப்பகுதி இது.

தமது வீடியோ கமெரா மூலம் படமாக்கிய அனர்த்தக் காட்சிகளையும் அவர் உதயனுக்குப் பிரத்தியேகமாக வழங்கியுள்ளார் 3

01.பாதிக்கப்பட்ட மக்கள் திரும்பவும் தமது வீடுகளிற்குச் செல்லும்போது பலவித சமூக, பொருளாதார மாற்றங்களிற்கு முகங் கொடுக்க வேண்டிவரும். நேற்று இருந்தது போல இன்று இருக்காது. மனதைத் திடப்படுத்திக் கொள்ளுங்கள். அத்துடன் மிகவும் அவதானத்துடன் இருக்கவேண்டும். உடைந்து விழாமல் எஞ்சியிருக்கும் சுவர்கள். காஸ் சிலிண்டர்கள், இரசாயனப் பொருள்கள், விசப் பாம்புகள் அல்லது வேறு மிருகங்கள், மிதிவெடிகள், பழுதாகிய உணவு வகைகள், கூரான இரும்புத் துண்டுகள் போன்ற பலவிதமான பொருள்களில் இருந்து எந்நேரமும் உங்களிற்கு ஆபத்து வரலாம். எனவே எடுத்து வைக்கும் ஒவ்வொரு அடியிலும் அவதானமாகவும், நிதானமாகவும் இருக்க வேண்டும்.

02. அநாதைகளாக்கப்பட்ட அல்லது விதவைகளாக்கப்பட்ட அல்லது குடும்ப உறுப்பினர்களை, உறவினர்களை இழந்தவர்களை அல்லது இழப்புக்களை நேரில் பார்த்து மனநிலை பாதிக்கப்பட்டவர்களை ஏற்றுக் கொள்ளக் கூடியவாறு சமூகக் கட்டமைப்பை மாற்றியமைக்க வேண்டும். இது ஒரு குறிப்பிட்ட சமூகத்தைச் சார்ந்த மக்களின் தனிப்பட்ட பிரச்சினையாக எண்ணாமல் அனைத்து சமூகங்களும் பங்கேற்க வேண்டும். பாதிக்கப்பட்டவர்களிடம் அன்பு செலுத்தி அவர்களின் சோக அனுபவங்களை மறக்கும்படி செய்ய வேண்டும்.

03. வீட்டு இடிபாடுகளை அகற்றுவதற்கும் தூக்கி வீசப்பட்ட வள்ளங்களை அகற்றுவதற்கும் பாரிய பாரம் தூக்கும் இயந்திரங்கள் தேவைப்படும். இவற்றின் சேவைகளை அனைத்துப் பாதிக்கப்பட்ட மக்களும் இலவசமாகப் பெற அரசோ, சம்பந்தப்பட்டவர்களோ ஆவன செய்ய வேண்டும். அத்துடன் கட்டட இடிபாடுகளை அகற்றி வேறு இடங்களில் கொண்டு போய்க் கொட்டாமல் அவற்றை மீளப் பயன்படுத்திக் கரையோர பாதுகாப்புச் சுவர்களை அமைக்கலாம். இத்தடுப்புச் சுவர்களை முன் னர் அமைக்கப்பட்டது போன்று ஒரே நேர் கோட்டில் அமைக்காமல் குழிவான பக்கம் கடலை நோக்கி இருக்கக்கூடியவாறு தொடர்ச் சியாக அரைவட்ட வடிவில் அமைப்பதன் மூலம் சுனாமி அலைகளின் தாக்கத்தின் அள வைக் குறைக்கலாம்.

கலாநிதி நாகலிங்கம் சிவயோகன்
சிரேஷ்ட விரிவுரையாளர்
பௌதிகவியல் துறை.
யாழ். பல்கலைக்கழகம்.

04. தற்போதைய நிலைமையில் மனதில் உள்ள சோகங்கள் விலகிக் கடலில் வழமை போன்று மீன் பிடிக்கச் செல்லக்கூடிய வாய்ப்புகள் ஆகக் குறைந்தது இன்னும் ஆறு மாதங்களிற்கேனும் சாத்தியப்படாது. எனவே, ஏற்கனவே இருப்பவற்றை இழந்த குடும்பங்களிற்கு நிரந்தர வருமானம் ஏதும் இல்லாமல் போகும். எனவே அரசு பாதிக்கப்பட்ட அனைத்துக் குடும்பங்களுக்கும் பாரபட்சமின்றி மாதாந்தம் ரூபா 10ஆயிரம் வரையாவது மானியமாக வழங்க முன்வர வேண்டும்.

05. வீடுகள் முற்றாகவோ அல்லது பகுதியாகவோ அழிக்கப்பட்ட மக்களுக்கு உடனடியாக வேறு இடங்களில் வீடுகள் அமைத்துக் கொடுக்க வேண்டும். வேறு இடங்களைத் தெரிவு செய்யும் போது அவர்களது சமூக, பொருளாதார நிலைகளில் பாரிய மாற்றம் ஏற்படாதவாறு பார்த்துக் கொள்ள வேண்டும்.


06. கடற்கரையிலிருந்து ஆகக்குறைந்தது 200 மீற்றர் வரையான பகுதிக்குள்ளாவது குடியிருப்புகள் மீளக் கட்டப்படுவதை அரசு தடைசெய்யவேண்டும். சுற்றுச்சூழல் பாதுகாப்புச் சட்டத்தில் ஏற்கனவே இது உள்ளது. எனவே அதை இனிமேலாவது சரியாக நடைமுறைப்படுத்த வேண்டும். அவ்வாறு செய்யும் போது இடப்பிரச்சினை வரலாம். இதைத் தீர்ப்பதற்குத் தொடர்மாடி வீடுகளை அமைத்துக் கொடுக்கலாம். அவ்வாறு செய்யும்போது அக் கட்டடங்களின் அமைப்பில் விஷேட கவனம் செலுத்தப்படவேண்டும். அவை சுனாமி அலைகள், சூறாவளிக் காற்றுகள் போன்றவற்றின் தாக்கங்களைத் தாங்கக் கூடியவாறு பிரத்தியேகமாகத் திட்டமிட்டு வடிவமைக்கப்படல் வேண்டும். உதாரணமாக கடலைநோக்கி உள்ள சுவர்கள் குழிவான கோளவடிவில் அமைக்கப்படலாம். கடல் பக்கமாகக் கதவுகள், யன்னல்களை வைப்பதையும் தவிர்க்கலாம்.

07.முன் நகர்த்தப்பட்ட அல்லது தூக்கி வீசப்பட்ட முருகைக் கற்களைக் அவற்றின் பழைய நிலைக்குத்தள்ளி கடலரிப்பைத் தடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். அத்துடன் முருகைக்கல் போட முடியாத ஆழமான கடல்களிற்கு (உதாரணமாக வங்காள விரிகுடா) முருகைக் கற்களை கரைகளில் போடலாம். அல்லது பெரிய வட்டவடிவமான தூண்களை நட்டோ அல்லது சிமெந்தினால் செய்யப்பட்ட பாரிய கற்களைக் கரைகளில் போடுவதன் மூலம் (உதாரணமாக இந்தியாவில் உள்ள பம்பாய் கடற்கரையோரம் இவ்வாறு கற்கள் போடப்பட்டுள்ளன.) மண் அரிப்பைத் தடுப்பதோடு மாத்திரமல்லாது எதிர்காலத்தில் சுனாமி அலைகள் வரும்போது அவற்றின் தாக்கத்தையும் ஓரளவு கட்டுப்படுத்தலாம்.

08.கடற்கரையிலிருந்து 200மீற்றர் வரையான தூரமாவது அந்த மண்ணில் விளையக் கூடிய சவுக்கு போன்ற மரங்களை நட்டு சூழலைப் பாதுகாப்புது மட்டுமல்லாது சுனாமி அலைகள், சுறாவளி போன்றவற்றின் தாக்கங்களைக் குறைத்து மண் அரிப்பையும் உயிரிழப்புகளையும் எதிர்காலத்தில் குறைக்கலாம். இது சம்பந்தமான விழிப்புணர்வை மக்களுக்கு ஊட்டுவதோடு வேண்டிய வசதிகளையும் செய்து கொடுக்க அரசோ அல்லது அரச சார்பற்ற நிறுவனங்களோ முன்வரவேண்டும்.

09. மீன்பிடி வள்ளங்களையும், ஏனைய உபகரணங்களையும் பாதுகாப்பது மிகவும் சிரமமான வேலையாகும். ஆயினும் எனக்குத் தோன்றும் வழியொன்றைக் கூறுகிறேன். அதற்கு பெருந்தொகைப் பணம் செலவாகலாம்.

கடற்கரையோரம் உள்ள மீன்பிடிக் கிராமங்கள் ஒவ்வொன்றிற்கும் ஒரு செயற்கைத் தரிப்பிடம் ஏற்படுத்திக் கொடுக்கலாம். செயற்கைத் தரிப்பிடம் என்பது படத்தில் காட்டப்பட்டுள்ளது. போலாகும். நீண்ட வாய்க்கால்களை அமைத்து அதன் மூலம் வள்ளங்களை நிலப் பரப்பிற்கு கொண்டு வந்து பிரத்தியேகமாக வடிவமைக்கப்பட்ட நீச்சல் குளம் போன்ற அமைப்புடைய தரிப்பிடங்களில் நிறுத்தலாம். போதிய நிலமிருந்தால் இவ்விடத்தைச் சுற்றியே மீனவக் கிராமங்களையும் அமைக்கலாம்.




10.தானியங்கி முறையில் எச்சரிக்கை ஒலிகளை எழுப்பக்கூடியவாறும், பூமி அதிர்வு மற்றும் பாரிய காலநிலை மாற்றங்களை அவதானிக்கக் கூடியதாகவும் கண்காணிப்பு நிலையங்களைக் கரையோரமெங்கும் நிறுவவேண்டும். இதற்குப் பெருந்தொகைப் பணமும், தொழில்நுட்பமும் தேவைப்படும். இவற்றைச் செய்துதர வெளிநாடுகள் முன்வர வேண்டும். பாரிய போர்க்கப்பல்கள் மூலம் மீட்பு நடவடிக்கைகளிற்கு உதவும் நாடுகள், எதிர்காலத்தில் நமது தேசத்தைக் காக்கக் கூடிய தொழில்நுட்பத்தையும் பொருளாதார வசதிகளையும் செய்து தர முன்வர வேண்டும்.

பருத்தித்துறை நகரம் கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த ஒரு நகரமாக இருப்பதால் பின்வரும் புனரமைப்பு வேலைகளை உடனடியாகச் செய்து முடிக்கவேண்டியது அவசியமாகிறது.

## வெளிச்ச வீடு

வெளிச்ச வீட்டிற்கு அமைக்கப்பட்டுள்ள பாதுகாப்பு அரண் பாரிய சேதமடைந்துள்ளதாலும், அருகிலுள்ள வீதியில் மண் அரிப்பு ஏற்பட்டுள்ளதாலும் வெளிச்ச வீட்டிற்கு அச்சுறுத்தல் உள்ளதாக நான் எண்ணுகிறேன். அத்துடன், எனது கண்களிற்கு வெளிச்ச வீடு வீதியைநோக்கி சற்று சாய்ந்துள்ளது போல் தெரிகிறது. பிரித்தானிய ஆட்சிக் காலத்தில் கட்டப்பட்டாலும் அது நமது முன்னோர்களின் கடின உழைப்பைப் பயன்படுத்திக்கட்டப்பட்டது என்பதை நாம் மறத்தலாகாது. அதைப் பேணிப் பாதுகாப்பது நமது கடமையாகும். அத்துடன் திருத்த வேலைகளை மேற்கொள்ள வசதியாக அங்குள்ள இராணுவம் உடனடியாக விலகி, நிலக் கண்ணிவெடிகளையும் அகற்றி ஒத்துழைப்பு நல்க வேண்டும்.

## துறைமுகம்

பருத்தித்துறைத் துறைமுகத்தை யாழ்ப்பாண மக்கள் எளிதில் மறந்துவிட முடியாது. பாரிய போர் நெருக்கடிக்குள், A-9 பாதை மூடப்பட்டிருந்த போது யாழ்.குடாநாட்டு மக்களின் உணவு, மருத்துவம், பயணத் தேவைகளிற்காகவும் கைகொடுத்து உதவியது இத் துறைமுகமே. இதற்கு இப்போது பாரிய சேதம் ஏற்பட்டு இறங்குதுறை முற்றாக அழிந்துவிட்டது. எனவே இதை உடனடியாகப் புனரமைக்க அல்லது மீளக் கட்டியமைக்க வேண்டும். ஏதாவதொரு காரணத்தால் ஏ-9 பாதை மீண்டும் மூடப்பட்டு போக்குவரத்துத் துண்டிக்கப்பட்டால், இத்துறைமுகம் புனரமைக்கப்படாத விடத்து யாழ்ப்பாண மக்களின் உணவு, பிரயாண, மருத்துவ தேவைகள் முடங்கிப்போய பாரிய நெருக்கடிக்கு ஆளாக இடமுண்டு. இதற்கு அங்கிருக்கும் இராணுவம் முற்றாக விலகி ஒத்துழைப்பு நல்க வேண்டும்.

## கல்லூரிகள்

மேற்கூறியவற்றை விட ஏனைய பொது இடங்களையும் உடனடியாகப் புனரமைக்க வேண்டும். உதாரணமாக ஹாட்லிக்கல்லூரி, மெதடிஸ்த பெண்கள் உயர்தர கல்லூரி போன்றவை கடற்கரைக்கு மிக அருகில் அமைந்துள் என. சுனாமி அலைகள் வரலாம் என்பதற்காக இக் கல்லூரிகளை வேறு இடத்திற்கு மாற்றுவதும் சாத்தியமில்லை. எனவே உடனடித் தாக்கத்தைக் குறைக்கக்கூடியவாறு தடுப்புச் சுவர்களை அமைப்பதும், நெருக்கடியான ஒரு நேரத்தில் மாணவர்கள், ஆசிரியர்கள் உடனடியாக வெளியேறக்கூடியவாறு பாதைகள், வாசல்கள் என்பவற்றைத் தயார் நிலையில் வைத்திருப்பதும் அவசியமாகிறது. இதற்கும் அங்குள்ள இராணுவக் காவலரண்கள் இடையூறாக இருக்கலாம்.

இவற்றுடன் மாத்திரம் நின்றுவிடாமல் சிதைந்து போயுள்ள மயானங்கள், கோயில்கள், நூல்நிலையங்கள் போன்றவற்றையும் உடனடியாகப் புனரமைப்புச் செய்ய வேண்டும். அததுடன், வீதிகளும் இச்சுனாமி அலை அனர்த்தத்தால் முழுமையாக அழிந்து போயுள்ளன. அவற்றையும் காலதாமதமின்றி அமைத்து மக்களின் போக்குவரத்தை இலகுவாக்க வேண்டும்.

அனைத்துப் புனரமைப்பு வேலைகளும் நன்கு திட்டமிடப்பட் பின்னரே ஆரம்பிக்க வேண்டும். யாழ்ப்பாணத்தில் அவசரமாகக் கட்டி முடிக்கப்பட்டு போர் அனர்த்தங்களை மறைத்த கட்டட்ங்கள் போலவோ அல்லது கடந்த ஐந்து வருடங்களாக ஒவ்வொரு மழை காலத்திலும் கட்டத் தொடங்கி மழை முடிந்ததும் நிறுத்தப்படும் வல்லைப் பால புனர மைப்பு வேலைகள் போலவோ இருக்கக் கூடாது.

எனவே, எதிர்காலத்தில் சுனாமி அலைகளோ, சூறாவளிக் காற்றோ நம்மைத் தாக்கும்போது நமக்கு மீண்டும் அழிவுகளோ, உயிரிழப்போ ஏற்படாதவாறு திட்டமிட்டு புனரமைப்புப் பணிகள் மேற்கொள்ளப்படல் வேண்டும். இம்முறை ஒரு விடுமுறை தினத்தில், பகல் நேரத்தில் சுனாமி அலைகள் தாக்கியதால் உயிரிழப்புக்கள் அரைவாசியாக வேனும் குறைக்கப்பட்டுள்ளது. எனவே, இவ்வாறு தான் எப்போதும் நிகழுமென நாம் எதிா பார்க்க முடியாது. சுனாமி, என்றொரு ஜப்பானிய சொல்லைப் படிப பதற்கு நாம் செலுத்திய கட்டணம் மிக மிகப் பெரியது. எதிர்காலத்திலாவது முன்னெச்சரிக்கையுடன் இருப்பதுடன் நன்றாகத் திட்டமிட்டு இவ்வாறான பெரும் உயிர், உடமைச் சேதங்களைக் குறைக்க வேண்டும்.

மேலும் நூற்றுக்கணக்கான வருடங்களிற்கு முன்னரும் சுனாமியோ அல்லது ஒருவித கடல் பெருக்கோ ஏற்பட்டிருக்க வேண்டும். தும்பளைக் கிராமத்தில் முன்னர் கடற்பெருக்கு ஏற்பட்டதாகவும், வல்லிபுரத்தில் கோயில் கொண்டிருக்கும் மாயவர் அதைத் தடுத்து நிறுத்தியதாகவும் பல கர்ண பரம்பரைக் கதைகளை எனது தாயார் சிறு வயதுகளில் சொன்னது இன்றும் என் நினைவில் உள்ளது. அப்படியெல்லாம் நடக்குமா? இவை எல்லாம் சும்மா கதைகள் என்றே இதுவரை நான் எண்ணியிருந்தேன். ஆனால், அதையே என் கண்களால் நேரில் பார்ப்பேன் என்று கனவில் கூட நான் எண்ணியிருக்கவில்லை. 2001ஆம் ஆண்டில் ஹாட்லிக் கல்லூரி ஆசிரியர் பா. இரகுவரன் "ஊரும் வாழ்வும்; தும்பளைக் கிராமம் பற்றிய சமூகவியல் ஆவணம்" என்றொரு நூலை வெளியிட்டார். அப்போதும் நான் அவரிடம் இக் கர்ண பரம்பரைக் கதைகள் பற்றியும் எழுதும்படி கூறினேன். ஆனால் அவரும் அப்படியெல்லாம் நடந்ததற்கான ஆதாரங்களோ ஆவணங்களோ எதுவும் கிடைக்கவில்லை. எனக்கூறி அதை எழுதாமல் விட்டு விட்டார். எனவே, எனது இக்கட்டுரை மூலம் நடந்த விடயங்களை ஆவணப்படுத்தும் ஒரு நோக்கமாகும்.

இச்சுனாமியால் அழிந்த சில இடங்களை ஆங்காங்கே அதே நிலையில் பாதுகாத்து நினைவாலயங்கள் ஆக்கவேண்டும்.இன்று வந்த சுனாமி, இருபது நாள்களில் வரலாம் அல்லது இருநூறு வருடங்களின் பின்பும் வரலாம். ஆனால், எமது எதிர்கால சந்ததியினரும் எம்மைப் போல அழிவுகளைச் சந்தித்துத் தான் மீண்டும் 'சுனாமி' என்ற சொல்லைக் கற்க வேண்டும் என்றில்லாதவாறு நாம் சில அழிவுச் சின்னங்களைப் பேணிப் பாதுகாப்பதும் ஒருவித தேசியக்கடமையாகும்.

அத்துடன் ஒரு புறத்தில் அழிவு நடந்த இடங்களில் கொள்ளையடிப்பவர்களும்,

(12 ஆம் பக்கம் பார்க்க)



பருத்தித்துறைத் துறைமுகத்தை அண்டிய பகுதி...



துன்னாலைப் பகுதிக்குள் நுழைந்த சுனாமி அலைகள்...

படங்கள்: கட்டுரையாளர்.

# சர்வதேச உதவிகள் பாரபட்சமற்ற முறையில் கிடைப்பதை ஐ.நா. உறுதிப்படுத்த வேண்டும்

## கோபி அனானிடம் தமிழ்க் கூட்டமைப்பு வலியுறுத்து

பாதிப்புற்ற பகுதிகளைச் சேர்ந்த மக்களுக்கு சர்வதேச உதவிகள் பாரபட்சமற்ற முறையில் சென்றுகிடைக்க ஐ.நா.செயலாளர் நடவடிக்கை எடுக்கவேண்டும் என அவரைச் சந்தித்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எம்.பிக்கள் குழு தெரிவித்துள்ளது.

நேற்றுமுன்தினம் ஞாயிறு ஐ.நா. செயலாளர் கோபி அனானை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எம்.பிக்கள் கொழும்பில் சந்தித்தனர். அவ்வேளையிலேயே மேற்கண்டவாறு பிரஸ்தாபிக்கப்பட்டது.

எம்.பிக்கள் குழு மேலும் தெரிவித்ததாவது:-

நிவாரணமும், புனர்நிர்மாணப் பணியும் ஓர் இடத்தில் குவிவதும், சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுடன் கலந்தாலோசிக்காமலும், உள்ளூர் பங்களிப்பு இல்லாமலும் திட்டங்களை வகுப்பதும், அனர்த்தத்தைக் கையாள்வதில் திடமான, காத்திரமான பயனைத் தரா.

வடக்கு - கிழக்குக் கரையோரப்பகுதிகளில், மூன்றில் இரண்டு வீதமானோர் மரணித்துள்ளனர். பலர் இடம்பெயர்ந்துள்ளனர். வீடுகள் நாசமாகியுள்ளன. இவர்கள் தமிழர்களும், தமிழ்பேசும் முஸ்லிம்களுமாவர். இவர்களே படுமோசமாகப் பாதிப்புற்றவர்கள்.

எனவே, பாரபட்சமற்ற முறையில் சர்வதேச நிதி உதவிகள் பகிர்ந்தளிக்கப்படுவதை ஐ.நா. பொதுச் செயலாளர் உறுதி செய்யவேண்டும்.

இதுதொடர்பாக அரசு வகுத்துள்ள ஏற்பாட்டில் எமக்கு நம்பிக்கை இல்லை. அரசு தமிழரைப் புறம் தள்ளியே வந்துள்ளது. இது தொடர்பாக 50 வருடகால அனுபவம் தமிழருக்கு உண்டு.

தமிழர் தஞ்சம் புகுந்துள்ள முகாம்களில் அவர்களின் நலன்களைக் கவனிக்கவென அரச சிங்கள ஆயுதப்படைகள் குவிக்கப்பட்டுள்ளன.

பிரச்சினையைத்தணிப்பதற்கான அரசின் நடவடிக்கை இது அல்ல. இதனால், நலன்புரி மையங்களையும், தஞ்சம் புகுந்துள்ள இடங்களையும் விட்டு தமிழர் வெளியேறி வருகின்றனர். அவர்கள் வீடுகளை இழந்த நிலையிலேயே இத்தகைய நிலையங்களில் தங்கியிருந்தனர்.

அதுமட்டுமல்ல, அனர்த்தத்தால் படுமோசமாகப் பாதிப்புற்ற முல்லைத்தீவு உட்பட வடக்குப் பகுதிக்குச் சென்று பார்வையிடுவதை ஐ.நா.பொதுச்செயலாளரின் நிகழ்ச்சி நிரலில் சேர்க்காது விட்டமையும் அரசின் மாற்று மனப்பான்மையைத் துல்லியமாக எடுத்துக்காட்டுகிறது - என்று கூட்டமைப்பினர் தெரிவித்தனர்.

மாவட்ட மட்டத்தில் இதுதொடர்பில் செயலணி உருவாக்குவது பற்றிய கூட்டமைப்பினர் அனானிடம் தெரிவித்தனர். அரச அதிபர்கள், விடுதலைப் புலிகள், தமிழர் புனர்வாழ்வுக்கழகம், சர்வதேச தன்னார்வக் குழுக்கள், உள்நாட்டு அரச சார்பற்ற அமைப்புகள் ஆகியவற்றையும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் ஏனையோரையும் அடக்கி அனர்த்தத்தைக் கையாளவதில் மாவட்ட மட்டத்தில் செயற்படுவது தொடர்பாகத் தமிழ்த் தேசிய எம்.பிக்கள் குழு விளக்கியது.

இத்தகைய முறை ஒன்று, ஏற்கனவே விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிகளுக்குள் உண்டு. விடுதலைப் புலிகளும், அரசும் மனிதநேய உதவிகள் தொடர்பாக இணைந்தே செயற்பட்டனர். இத்தகையமுறை சண்டைக் காலத்திலிருந்து நடைமுறையில் உண்டு.

சர்வசேத நிதி உதவிகளை வடக்கு - கிழக்கிற்கும் பாரபட்சமற்ற முறையில் விநியோகிக்கவும் நிவாரணம் மற்றும் மீள் கட்டுமானம் என்பவற்றில் திடமான சேவையை வழங்கவும் என வடக்கிலேயே சுனாமி அனர்த்தத்தைக் கையாள்வதில் ஒரு பொறிமுறையை - வழிமுறையை - தோற்றுவிக்கவேண்டும். என்றும் கோரப்பட்டது.

பாதிப்புற்ற மக்களுக்கு நிவாரணம் வழங்குவதில் விடுதலைப்புலிகளும், தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் பங்களிப்பு குறித்தும் ஐ.நா. பொதுச் செயலாளர் கோபி அனானுக்கு கூட்டமைப்பினர் எடுத்துக்கூறினர்.

கோபி அனான், தான் மீண்டும் ஒரு தடவை இலங்கை வருவார் என்றும்:-

அப்படிவரின் பாதிப்புற்ற பகுதிகளை நேரில் சென்று பார்வையிடப்ளபெரிதும் ஆர்வம் கொண் டுள்ளார் எனவும் தெரிவித்தார்.

- இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.(க-8)

## மாமனிதர் கலைஞானியின் சிரார்த்த தின நிகழ்வு

யாழ்ப்பாணம்,ஜன.11

மாமனிதர் கலைஞானி அ.செல்வரத்தினத்தின் 3ஆவது சிரார்த்த தின அஞ்சலி நிகழ்வு நேற்றுமுன்தினம் கரவெட்டி ஞானவில்லாவிலில் இடம்பெற்றது.

மாமனிதர் கலைஞானி அருங்காட்சியக இயக்குநர் எம்.ஷாந்தன் சத்தியகீர்த்தி தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் சட்டத்தரணி பொன்.பூலோகசிங்கம், தேசிய திரைப்படக் கூட்டுத்தாபனத்தின் பணிப்பாளர் சபை உறுப்பினர் க.தேவதாசன் ஆகியோர் உரையாற்றினர்.

சட்டத்தரணி பொன்.பூலோகசிங்கம் இரங்கல் உரை நிகழ்த்துகையில்:-

தமிழ் இனத்தின் வரலாற்றை ஆவணமாக்கும் முயற்சியில் ஈடுபட்ட கலைஞானிக்கு வாழும்போது மாமனிதர் என்ற உயர்விருது கிடைத்திருந்தது. சமூகப் பணியாற்றுபவர்களுக்கான கௌரவம் அவர்கள் உயிருடன் வாழும்போதே கொடுக்கப்படவேண்டும். அவ்வாறான, ஒரு கௌரவத்தைத் 'தொல்பொருள் சேகரிப்பும் பாதுகாப்பும்' என்ற துறைக்காகப் பெற்றுக்கொண்டவரே கலைஞானி செல்வரத்தினம் என்று தெரிவித்தார்.

க.தேவதாசன் அஞ்சலி உரைநிகழ்த்துகையில்:-

ஓர் ஆய்வுத் தேவைக்காகப் பாரதி கௌரவிக்கப்படுவது போல கலைஞானியும் ஆய்வுக்கு உட்படுத்தப்படவேண்டும். தேசிய ரீதியாகப் பங்களிப்புச் செய்தவர்களை ஆவணப் படங்கள் மூலமாக வெளிக்கொணர வேண்டும் என்று தெரிவித்தார். (10-202)


**சமூக தொழில்நுட்பக் கல்வி நிலையம்**

கொம்ரெக் சுழிபுரம்

ஆண், பெண் இருபாலாருக்குமானது

**தொழிற்பயிற்சி நெறிக்கான விண்ணப்பம் கோரல்**

வானொலி, தொலைக்காட்சி சீர்செய்தல் - 10 மாதங்கள்
மோட்டார் வாகனப்பொறியியல் - (பெற்றோல், டீசல்) 10 மாதங்கள்
வீட்டு மின்சுற்று இணைப்பும், மின்னியந்திரங்கள் மீளமுறுக்குதலும் - 10 மாதங்கள்
மரவேலை தொழில்நுட்பம் - 06 மாதங்கள்

*வயதெல்லை 16-25 வரை*
*பயிற்சிகள் யாவும் முழுநேரம்*

இந்நிறுவனத்தில் பயிற்சியைமுடித்து வெளியேறும் பயிலுநர்கள், சுயதொழில் முயற்சி ஆரம்பிப்பதற்கு கடன் உதவி சுழற்சி முறையில் வழங்கப்படும்.

போருட் நிதியுதவியுடன் அதி நவீன பயிற்சி உபகரணங்கள் பயன்படுத்தப்பட்டு பயிற்சி வழங்கப்படுகின்றது. பயிற்சிகள் யாவும் வெளிநாட்டு வேலைவாய்ப்புகளுக்கு ஏற்றவாறு வழங்கப்படுகிறது. விண்ணப்பங்களில் பெயர், முகவரி, கல்வித்தகைமை, தெரிவுசெய்யும் பயிற்சிநெறி போன்ற விவரங்களைக் குறிப்பிட்டு 17 ஜனவரி 2005 இற்கு முன் பதிவுசெய்யவும்.

விண்ணப்பிக்கும் முகவரி:
இயக்குநர், கொம்ரெக் - சுழிபுரம்

(40682)(26-12-15-18) - இயக்குநர்.


## சந்நிதியான் ஆச்சிரமத்தில்

தொண்டைமானாறு சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவையினால் நடத்தப்படும் வாராந்த நிகழ்வில் கடந்த வெள்ளிக்கிழமை காலை சந்நிதியான் ஆச்சிரமத்தில், ஆச்சிரம இயக்குநர் செ.மோகனதாஸ் சுவாமியின் பூசை வழிபாடுகளுடன் நடைபெற்றது.

பேரவைத் தலைவர் எஸ்.அருண்லிங்கம் தலைமையில் "சிவஞானச் செல்வர்" சி.சி. வரதராசாவின் தேவார பாராயணத்துடன் இந்நிகழ்வு ஆரம்பமாகியது.

இந்நிகழ்வில் மறவனூர் ரி.எம்.வாசகர் குழுவினர் மங்கள இசை வழங்கினர்.

(ஐ)


**ஒத்துமாறல்**

முல்லைத்தீவு கல்வி வலயத்திற்கு பட்டதாரி ஆசிரிய நியமனம் பெற்ற ஒருவர் பொது நிர்வாகத்துறையில் நியமனம் பெற்ற ஒருவருடன் ஒத்துமாற விரும்புகின்றார். விரும்புவோர் கீழ்க்காணும் இலக்கத்துடன் உடன் தொடர்புகொள்ளவும்.

T.P.: 077-6158742

(40681)



**31 ஆம் நாள் கண்ணீர் அஞ்சலி**

யாழ்ப்பாண மாநகரசபை நலன்புரிச்சங்க அங்கத்தவரும் கு.ந. உதவியாளருமாகிய திருமதி க.தேவராணி அவர்களின் அன்புத் தந்தையார்

**சின்னன் நல்லையா**

அவர்கள் காலமாகிவிட்டார். அன்னாரின் இழப்பினால் துயருறும் குடும்பத்தினரின் துயரில் நாமும் பங்குகொள்வதுடன், ஆத்மசாந்திக்காகப் பிரார்த்தித்து கண்ணீர் அஞ்சலியைக் காணிக்கையாக்குகின்றோம்.

~சுகாதாரப் பகுதி
நலன்புரிச்சங்க அங்கத்தவர்கள்.

(40676)(12-15-18)



**ஒத்துமாறல்**

யாழ். மாவட்டத்திலுள்ள பிரதேச செயலகம் ஒன்றில் கலாசார உத்தியோகத்தராக அண்மையில் நியமனம் பெற்ற பட்டதாரி ஒருவர் யாழ்ப்பாணத்தில் ஆசிரியர் நியமனப் பெற்ற ஒருவருடன் ஒத்துமாற விரும்புகிறார்.

தொடர்புகளுக்கு:
தொ. பே. இல: 077-6660206
021-2225295

(40679)(12-15-18)



**ஒத்துமாறல்**

முல்லைத்தீவு வலயத்திற்கு ஆசிரிய நியமனம் கிடைத்த பட்டதாரிப் பயிலுநர் ஒருவர் யாழ். மாவட்டத்திற்கு ஆசிரிய நியமனம் கிடைத்த ஒருவருடன் ஒத்துமாற விரும்புகின்றார். விரும்பின் தொடர்புகொள்ள T.P.: 021 2263516

(40680)



**மனமார்ந்த நன்றியை தெரிவித்துக்கொள்கின்றோம்.**

2000ஆம் ஆண்டில் இடம்பெற்ற இராணுவ நடவடிக்கை காரணமாக செயல் இழந்துபோன மின் விநியோகம் 01-01-2005 தொடக்கம் கிராம அலுவலர் பிரிவு கைதடி கிழக்கு, கைதடி வடக்கு, கைதடி மத்தி, குமார நகர் வன்னியசிங்கம் வீதி, நவபுரம் மயான வீதி ஆகிய பகுதிகளின் மக்களின் தேவைகளைப் பூர்த்திசெய்ய ஏதுவாக மீண்டும் கிடைத்துள்ளது.

பல சிரமங்களின் மத்தியிலும் மிகவும் அக்கறையுடன் செயற்பட்ட சாவகச்சேரி மின்சார சபையின் பொறுப்பதிகாரி மற்றும் ஒப்பந்த அடிப்படையில் வேலை செய்தவர்கள் பணிமனை ஊழியர்கள், யாழ். மாவட்ட மின்சாரசபை அதிகாரிகள், கைதடி பிரதேச பொது அமைப்புக்கள், கிராம அலுவலர்கள் அனைவருக்கும் எமது நிலையத்தின் சார்பில் நன்றியையும் பாராட்டுகளையும் தெரிவித்துக்கொள்கின்றோம்.

நிர்வாகத்தினர்
செல்வா சன சமூகநிலையம்.
கைதடி வடக்கு.கைதடி. (40674)(15-18-12)



**கண்ணீர் அஞ்சலி**

எமது கல்லூரி மாணவன் (கா.பொ.த. சாதாரணதரம் 2004)
செல்வன் **விமலநாதன் தர்சன்**
26.12.2004 ஞாயிறு ஏற்பட்ட இயற்கை அனர்த்தத்தினால் அகாலமரணம் அடைந்தார். அவரது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திப்பதோடு, அவரின் பிரிவுத் துயரால் வாடும் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களையும் தெரிவித்துக்கொள்கின்றோம்.

அதிபர், ஆசிரியர், மாணவர் (11C2004)
யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி.

(40671)(12-15-18)



**விற்பனைக்கு**

இந்தியாவிலிருந்து நேரடியாக இறக்குமதி செய்யப்பட்ட சுடிதார், மற்றீரியல், சுடிதார் முகூர்த்தப் புடைவைகள், புடைவை வகைகள், லேடீஸ் ஸ்கேட், ரீசேட், கவுண் ஆகியவை நியாயமான விலையில் விற்பனைக்குண்டு.
ஆடைகள் உடனுக்குடன் தைத்துக்கொடுக்கப்படும்.

**பபுடெக்ஸ் & கொமினிக்கேஷன்**
இல. 30, வளாக வீதி,
திருநெல்வேலி.
(40677)



**மரண அறிவித்தல்**

**நாகலிங்கம் கனேசலிங்கம்**



அளவெட்டி, முதலியார் கோயிலடியைப் பிறப்பிடமாகவும் கனடாவை வசிப்பிடமாகவும் கொண்ட நாகலிங்கம் கணேசலிங்கம் அவர்கள் நேற்று (10.01.2005) திங்கட்கிழமை கனடாவில் காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற நாகலிங்கம் - தெய்வானைப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும் அன்னலட்சுமியின் அருமைக் கணவரும் காலஞ்சென்ற கனகம்மா மற்றும் ஞானாம்பிகை, காலஞ்சென்ற தியாகராஜா மற்றும் முருகையா மகேஸ்வரன், வ.சிவநாதன் (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரருமாவார்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
நா.முருகையா
அளவெட்டி முதலியார் கோயிலடி.
அளவெட்டி வடக்கு. (40673)(12-15-18)


## சிமெந்து இடிபாடுகளைக்.....

(11 பக்கத் தொடர்ச்சி...)

அனாதரவான சிறுவர், சிறுமியரை, பெண்களைக கடத்தி பாலியல்ரீதியாக துன்புறுத்துவர்களும் தமது கைவரிசையைக் காட்டிக் கொண்டிருக்கிறார்கள். மறுபுறத்தில் பெருந்தொகைப் பணமும் உதவிகளும் கிடைத்த வண்ணம் உள்ளன. ஒரு விடயத்தில் நாம் மிகவும் எச்சரிக்கையுடன் இருக்கவேண்டும். முன்னர் போரைக்காட்டிக் லாபம் சம்பாதித்துக் கோடீஸ்வரர் ஆனவர்களின் பட்டியலுடன் "சுனாமியைக் காட்டி கோடீஸ்வரர் ஆனவர்கள்" என்றொரு பட்டியலும் சேராதவாறு அனைத்து மக்களும், அனைத்து ஊடகங்களும எச்சரிக்கையுடன் கண்காணித்துக் கொண்டு எந்நேரமும் விழிப்பாக இருக்க வேண்டும்.

இது சம்பந்தமாக ஒவ்வொரு தனிநபரும் புத்தி கூர்மையுடனும், நற்சிந்தனையுடனும், அர்ப்பணிப்புடனும் எமது பிரதேசத்தை மீளக் கட்டியமைக்க உறுதி பூண்டு இப்புதிய ஆண்டில அதை செயற்படுத்துவோமாக.

முற்றும்.


**ஈராண்டு நினைவலைகள்**



பிறப்பு 1943 07 16
இறப்பு 2003 01 11

அமரர் **சபாபதி நாராயணன்**

*(ஓய்வுபெற்ற கிராம அலுவலரும், சமாதான நீதிவானும்)*

எங்கள் அன்பான அப்பாவே! நீங்கள்
எங்களைப் பிரிந்து ஈராண்டுகள்
சென்று விட்டபோதும் நெஞ்சில்
உங்கள் நினைவு தினம் நெருப்பாகச் சுடுகிறது!
உங்களையும் நாம் இழந்தோம் - அத்துடன்
நிம்மதி சந்தோசம் அத்தனையும் நாமிழந்தோம்!
மீண்டும் பிறப்புண்டேல் எம்மிடம் வந்துவிடுங்கள்!
உங்கள் ஆத்மா சாந்திபெற இறைவனை வேண்டுறோம்.

பிள்ளையார் கோயிலடி.வடலியடைப்பு. - மனைவி, பிள்ளைகள்.

(C40341)(12-15-18)

# அம்பாறையில் நிகழ்ந்த அவலக் கதைகள்

## பேரிரைச்சலுடன் வந்த பேரலை பேர்த்தியைப் பறித்துச் சென்றது!

### ஐந்து பேரைக் காவுகொடுத்த ஐயாவின் கதறல் இது

காரைதீவு,ஜன.11

"பேரிரைச்சலுடன் உயர்ந்துவந்து தாக்கிய பேரலை எனது பேர்த்தியைப் பறித்துச்சென்றது. வாழ்க்கையில் இழக்கக்கூடாத ஐவரை இழந்து தவிக்கிறேன்"

- இவ்வாறு காரைதீவில் ஆழிப்பேரலை அனர்த்தம் பற்றிக் கூறிய குடும்பஸ்தர் க.தம்பியப்பா என்பவர் கூறியிருக்கின்றார்.

காரைதீவு ப.நோ.கூ. சங்க லொறிச் சாரதியான இவர் தனது அனர்த்த அனுபவம் பற்றி மேலும் விவரிக்கையில் -

"சம்பவ தினம் வழமைபோல் கடலுக்குச் சென்று 8.30 மணிவரை கடற்கரையில் கதைத்து விட்டு வீடு திரும்பி மாட்டுக்குத் தவிடு வைத்தேன்.

பின்பு பல் துலக்கிக்கொண்டிருந்தபோது பாரிய வெடிச்சத்தம் கேட்டது. என்னவென்று கேற்றடிக்குச் சென்று பார்ப்பதற்குள் சனக்கூட்டம் ஓலக்குரல் எழுப்பிய வண்ணம் ஓடி வந்து கொண்டிருந்தது. செய்வதறியாது என்ன ஓடி வருகிறீர்கள் என்று வினவினேன். கடல் மிக வேகமாக வருகிறது ஓடுங்கள் என்று கூறிய வண்ணம் ஓடிக்கொண்டிருந்தனர். மீண்டும் வீட்டிற்குள் சென்று உடனே வீட்டிலிருந்தவர்களை ஓடும்படி கூறிவிட்டுத் திரும்புவதற்குள் பாரிய அலையொன்று என்மீது தாக்கியது.

குறைந்தது 8 அடி உயரமிருக்கும். நான் ஒருவாறு எழும்பி வீட்டு வளையில் தொங்கினேன். மற்றுமொரு அலை வந்தது. ஒன்றுமே செய்யமுடியாமல் வீட்டின் கூரை மீது ஏறினேன்.

அப்போது எனது மனைவி துளசிமணி, மகள் இந்திராணி, பேர்த்தி சதுஷ்டிகா, மாமா கிருஷ்ணபிள்ளை, மாமி சுந்தரவல்லி ஆகியோர் அலையில் அடித்துச்செல்லப்படுவதை கண்களால் பார்த்தேன். ஆனால் இறங்கிக் காப்பாற்ற முடியவில்லை.

கீழே, 10 அடிக்குமேல் கடல் நீர். மூன்று பாரிய அலைகளும் பாரிய சேதத்தை விளைவித்தன. நீர் குறைந்ததும் கீழே மருமகன் நடேசன் வர அவரது உதவியுடன் இறங்கினேன். பின்பு சடலங்களை மீட்டேன்" - என்றார். (4)

## ஓடுங்கள் என்று கூறி முடிப்பதற்குள் எல்லோருமே அள்ளுண்டு போயினர்!

கடற்கரையில் உள்ள இராசையா நவசேகரம் (வயது 45) என்பவர் தனது அவலங்களைக் கூறும்போது தெரிவித்ததாவது:-

"அன்று காலை வீட்டிலிருந்தபோது பாரிய இரைச்சல் கேட்டது. ஓடி வந்து கேற்றடியில் சேரமுன்பு 6அடி உயரமான பாரிய அலை என்னைத் தாக்கி வீழ்த்தியது.

ஓடுங்கள் என்று கூறி முடிப்பதற்குள் பாரிய அலை வந்து அனைவரையும் அள்ளிக் கொண்டு போனது. என்னை அடித்துச்சென்ற அலை ஒரு மாமரத்தில் என்னைக் கொண்டுபோய் வைத்தது. இறங்க முயற்சித்தபோது பலர் கடலினுள் அடித்துச்செல்லப்படுதைக் கண்டேன். அப்போது அருகில் மிதந்துவந்த பற்றைக்குள் 2 வயதுக் குழந்தையொன்று கிடந்தது. மரத்திலிருந்தவாறு எட்டிப் பிடித்தேன். சிறிது நேரத்தில் நீர் மட்டம் குறைய கீழே வந்து தாயைக்கண்டு பிள்ளையை ஒப்படைத்தேன். கிண்ணை மரத்தில் மகள் இருந்து அதிரடிப்படை காப்பாற்றியதாக அறிந்தேன். ஆனால் எனது மனைவி இன்னும் கிடைக்கவில்லை. எனது வண்டில் மாடும் தப்பிற்று. வண்டில் 300 மீற்றருக்கு அப்பால் அடித்துச் செல்லப்பட்டு நொறுங்கிக் கிடந்தது - என்றார். (4)

## நூறுபேரைக் காப்பாற்றிக் கரைசேர்த்தேன்; அம்மாவும் அக்காவும் சடலமாய்க் கிடந்தனர்!

காரைதீவு,ஜன.11

படகு மூலம் 100 பேரைக் காப்பாற்றிய எனக்கு எனது அம்மா தெய்வானையையும், அக்கா மீனாட்சியையும் காப்பாற்ற முடியாமல் போனமை தாங்கமுடியாத துயரத்தை ஏற்படுத்தி விட்டது என்று காரைதீவைச் சேர்ந்த குடும்பஸ்தர் க.புவிநாயகம் கூறினார்.

அவர் ரயில்வேத் திணைக்கள ஊழியர். விடுமுறைக்காக வீடுவந்தவர்.

அவர் கூறும் அனுபவம் இது -

சம்பவதினம் காலை 8.40 மணியளவில் சனங்களின் அவலக்குரல் கேட்டது. வெளியில் வந்து பார்ப்பதற்குள் 20அடி உயரமான கறுப்பு நிற அலை என்மீது தாக்கியது.

ஒருவாறு சமாளித்துக்கொண்டு எழுந்து மனைவியையும், பிள்ளையையும் பிடித்து நீந்த முயற்சித்தபோது மற்றுமொரு பேரலை என்னைத் தாக்கியது.

கையிலிருந்த பிள்ளையும், மனைவியும் பறிக்கப்பட்டு அலையில் சென்றதைக் கண்டேன்.

மறு 'அலை என்னை அடித்துச்சென்று கரையில் சேர்த்தது. அங்குள்ள மரங்களிலும், பற்றைகளிலும் சுமார் 100இற்கு மேற்பட்ட பிள்ளைகள் தொங்கியவண்ணம் அலறிக் கொண்டிருந்தனர். அப்போது கடலிலிருந்து அடித்து வரப்பட்ட ஒரு தோணி கரையில் கிடந்தது.

அதனைப் பயன்படுத்தி அங்கு வந்து சேர்ந்த அதிரடிப்படை வீரர்களுடன் இணைந்து அப்பிள்ளைகளைக் கஷ்டத்தின் மத்தியில் காப்பாற்றினேன்.

துடுப்புக்குப் பதிலாக கைகளைப் பயன்படுத்தி தோணியை நகர்த்திக் கரைசேர்ததோம்.

கரைக்கு வந்த பின்தான் தெரிந்தது எனது அம்மாவும் அக்காவும் சடலமாகக் கிடப்பது - என்றார். (4)

## அந்தரித்து ஓடிவந்த அப்பாவி மக்களை ஆலயத்துள் விடாது தடுத்த பாதகர்கள்!

### குருக்கள் ஒருவரின் குமுறல் இது

காரைதீவு,ஜன.11

யாழ்கோப்பாயைச் சேர்ந்த காரைதீவு, பாலையடி விக்னேஸ்வரர் ஆலய பிரதம குரு சிவஸ்ரீ ச.பிரகதீஸ்வரசர்மா கூறுகையில் -

"சம்பவ தினம் அதிகாலை 2 மணிக்கு எழும்பி ஆலயத்திற்குச் சென்று வேலைகளை முடித்துவிட்டு திரும்வெம்பாவைப் பூசை செய்தேன்.

அப்போது பஞ்சாராத்தியிலிருந்த கற்பூரம் எனது கையில் விழுந்தது எனக்குச் சந்தேகம் ஏற்பட்டது. அன்றிரவு கனவில் கடல் வருவது போலவும் நானும் எனது இரு பிள்ளைகளும் தப்பியோடுவது போலவும் கண்டேன். கற்பூரமும் விழுந்த சம்பவம் எனது மனதை உறுத்தியது. இருப்பினும் பூசையை முடித்துவிட்டு ஆறு மணியளவில் வீடு வந்து சோந்து சற்றுக் கண்ணயர்ந்தேன்.

அப்போது கடல் வருது என்று கத்திக் கொண்டு சிலர் ஓடிவந்தனர்.

நான் எழும்பி வந்து வெளியில் நின்று பார்த்தேன். கடல்நீர் அருகிலுள்ள வளவிற்குள் வந்து கொண்டிருந்தது. நான் பிள்ளைகளையும் மனைவியையும் அழைத்துக்கொண்டு அம்மா வீட்டுக்கு ஓடினேன். அக்கா, அத்தான் தியாகராஜக் குருக்கள் பிள்ளைகளுடன் ஓடி வந்தனர். எனது சகோதரனும் பிள்ளைகளுடன் ஓடி வந்தார்.

அனைவரும் அருகிலிருந்த அம்மா வீட்டிற்குச் சென்றோம். அங்கு "வந்தால் அனைவருக்கும்தானே. பயப்படவேண்டாம்" என்று கூறியபடி சாஸ்திரம் பார்க்கும் மேசையின் பின்னால் அமர்ந்திருந்தார். நாமனைவரும் அம்மாவைக் கட்டிப்பிடித்த வண்ணம் இறைவனை அழைத்தோம்.

மறுகணம் பாரிய இரைச்சலுடன் வந்த பேரலை எம்மைப் பிய்த்து ஆளையாள் வெவ்வேறு திசையில் அடித்துச் சென்றது. என்னைக் கொண்டுபோய் மரமொன்றில் பொறுக்கவைத்தது.

களப்பு என்ற பகுதியில் நின்றபடியால் அவ்விடத்தில் சுமார் 20 அடி நீர் நின்றிருக்கும்.

அப்போது அங்கு ஒரு குழந்தை அலையில் அடித்து வந்துகொண்டிருந்தது. உடனே எட்டிக் குழந்தையையும் பிடித்துக்கொண்டு மரத்தில் தொங்கினேன்.

மற்றக்கிளை ஒன்று முறிந்து எம்மீது விழ அதிலிருந்த முசுறுகள் என் முகத்தின்மீதும் குழந்தையின் மீதும் படர ஆரம்பித்தன.

அவை கடிக்கத் தொடங்கின. கையை விட்டால் 20 அடி நீர். குழந்தையும் பீறிட்டு அழுதது. ஒன்றும் செய்ய முடியாத நிலையில் மரத்தில் குழந்தையைப் பிடித்தவாறு தொங்கினேன். முசுறு கடித்துக் கொண்டிருந்தது.

அப்போது என்னையறியாமல் அலறினேன். தூரத்திலிருந்த சீராளன் என்பவரது பிள்ளைகளும் நண்பர்களும் சேர்ந்து கயிற்றைக் கட்டி என்னை மீட்க முயற்சித்தனர். கயிற்றைப் பற்றிப் பிடித்தவாறு நீரினுள் அமிழ்ந்து பின் கரை சேர்ந்தேன்.

உடம்பில் சிறு துணிகூட இல்லை. சுயநிலைவற்றவனாக கரையேறியதும் ஒருவர் சேட்டினால் கச்சை கட்டி விட்டார். பின்பு வீதிக்கு வந்தேன். ஒருவர் என்னைக் கண்டு ஓடிப்போய் வேட்டியொன்றைக் கொண்டு வந்து கட்டிவிட்டார்.

என்னை சம்மாந்துறை ஆஸ்பத்திரிக்குக் கொண்டுபோய் ஊசி போட்டார்கள். எனது குடும்பத்தாருக்கு என்ன நடந்தது என்று எனக்குத் தெரியாது.

எனது மனைவி, இரு குழந்தைகள், அம்மா, எனது அக்கா, பிள்ளைகள் என ஏழு பேர் பலியாகியுள்ளனர் என்று பின்னர் தெரியவந்தது.

ஒருவாறு தமிழர் வாழும் பகுதியென்று எண்ணி வரமுனைப் பிள்ளையார் ஆலயத்திற்குச் சென்றேன்.

அங்கு ஆயிரம் பேர் வரையில் நின்றனர். அன்றிரவு பாரிய மழை பெய்தது. ஆலயத்தினுள் சனம் உட்செல்ல முயற்சித்தபோது ஆலயம் பூட்டப்பட்டது.

துடக்குள்ளவர்கள் வருவார்கள் ஆசூசம் நேரும். எனவே யாரும் வரவேண்டாமென்று கூறி ஆலயத்தைப் பூட்டிவிட்டார்கள்.

ஆயிரம் சனமும் கொட்டும் மழையில் அழுதழுது நனைந்தனர். அந்தரித்து வந்த அப்பாவி மக்களை ஆலயத்துக்குள் செல்லவிடாது தடுத்த பாதகர்களின் செயல்கண்டு மனதிற்குள் அழுகிறேன்.

சுனாமியைப் போல் ஆயிரம் சுனாமிகள் வந்தாலும் எம்மவர் திருந்தமாட்டார்கள் என்று கூறினேன்.

மறுநாள் வீடு வந்து பார்த்தேன். அங்கு கிடந்ததாகக் கூறப்படும் உடமைகள் எதுவுமே இல்லை. அண்ணனின் அறுபது பவுண் நகைகள், 2 லட்சம் ரூபா பணம் வகைவகையான வேட்டிகள் ஒன்றையும் காணோம்.

நான் மனம் தளரவில்லை. பிள்ளையார் என்னை மட்டும் மிஞ்சவைத்தது அவருக்குச் சேவை செய்யவே என்று நினைத்தவனாக வாழ்கிறேன் - என்றார். (4)

**சோகக் கதைகளை வடித்துத் தொகுத்தவர்: வி.ரி.சகாதேவராஜா**

---

### வலி.தென்மேற்கில் சனசமூக நிலையங்களுக்கு நன்கொடை

யாழ்ப்பாணம்,ஜன.11

வலி.தென்மேற்கு மானிப்பாய் பிரதேச சபை எல்லைக்குட்பட்ட சனசமூக நிலையங்களுக்கு 2004ஆம் ஆண்டுக்கான நன்கொடை வழங்கப்படவுள்ளது.

இதுவரையில் நன்கொடைப் பணம் பெறுவதற்குரிய பரிசோதனைப் படிவங்களைப் பெற்றுக்கொள்ளாதவர்கள் எதிர்வரும் 15ஆம் திகதிக்கு முன்னர் அவற்றைத் திட்டமிடல் பிரிவில் பெற்று உடன் ஒப்படைக்கவேண்டும்.

ஏற்கனவே படிவங்கள் பெற்று ஒப்படைக்காதவர்கள் இன்று செவ்வாய்க்கிழமை முதல் திட்டமிடல் பிரிவு உள்ளூராட்சி உதவியாளரிடம் ஒப்படைக்கலாம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் 20ஆம் திகதி முதல் வங்கிகள் ஊடாகக் கொடுப்பனவு செய்யப்படும். 'ஏ' தரத்தில் பதிவுசெய்யப்பட்ட சனசமூக நிலையங்களுக்கு தலா ஆயிரத்து 600 ரூபாவும், 'பி' தரத்தில் பதிவுசெய்யப்பட்ட சனசமூக நிலையங்களுக்கு தலா ஆயிரத்து 400 ரூபாவும் வழங்கப்படவுள்ளன.

வலி. தென்மேற்கில் 78 சனசமூக நிலையங்களுக்கு இந்தக் கொடுப்பனவு வழங்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (10-185)

### சமுர்த்தி வங்கி இடமாற்றம்

காரைநகர் ஆலடியில் இயங்கிவந்த சமுர்த்தி வங்கிச் சங்கம் நேற்று முதல் காரைநகர் வலந்தலையில் உள்ள கமநல சேவைகள் திணைக்களக் கட்டடத்திற்கு இடம்மாற்றப்பட்டுள்ளதாகக் காரைநகர் சமுர்த்தி வங்கி முகாமையாளர் திருமதி எம்.வி.பத்மதயாளன் தெரிவித்துள்ளார்.

இதுவரை காலமும் ஆலடிப் பகுதியில் இயங்கிவந்த இந்த வங்கி, காரைநகரில் உள்ள அனைத்து வாடிக்கையாளர்களினதும் நலன் கருதி காரைநகரின் மையப் பகுதியான வலந்தலையில் நேற்று திங்கட்கிழமை முதல் செயற்படத் தொடங்கியுள்ளதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, காரைநகர் சமுர்த்தி வங்கிக்கான நிரந்தரக் கட்டம் அமைப்பதற்கான காணி வலந்தலைப் பகுதியில் தெரிவுசெயயப்பட்டுள்ளமையால் விரைவில் இதற்கான கட்டடம் அமைக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (10-73)

### சந்நிதியான் ஆச்சிரமத்தால் உணவுப் பார்சல் விநியோகம்

தொண்டைமானாறு சந்நிதியான் ஆச்சிரமம் சைவ கலை பண்பாட்டுப் பேரவையினால் கடல் அனர்த்தத்தால் பாதிக்கப்பட்டு இடம்பெயர்நது வாழும் வடமராட்சி மக்களுக்கு தினமும் 500 சாப்பாட்டுப் பொதிகளை வழங்கி வருகின்றனர்.

இடம்பெயர்ந்தோருக்கான இந்த உணவுப் பொதிகளில் தொண்டைமானாறு சந்நிதியான் ஆச்சிரமத்திலிருந்து இடம் பெயர்ந்து வாழும் மக்களுக்கு தற்போது தினசரி வழங்கப்பட்டு வருகின்றது.

சந்நிதியான் ஆச்சிரமத்தின் இப்பணி தொடர்ந்து செயற்படுத்தப்படும் என ஆச்சிரம இயக்குநர் செ.மோகனதாஸ் சுவாமி தெரிவித்துள்ளார். (ஐ)

### விவசாயிகள் சம்மேளனக் கூட்டம்

யாழ்ப்பாணம்,ஜன.11

மானிப்பாய் மேற்கு விவசாயிகள் சம்மேளனத்தின் (ஜே-140) விசேட பொதுக்கூட்டம் எதிர்வரும் 16ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 10மணிக்கு கட்டுடை சம்மேளன காரியாலயத்தில் இடம்பெறும்.

சம்மேளனத் தலைவர் சமாதான நீதவான் சி.பொ.வ.மா.க.முதலியார் தலைமையில் கூட்டம் இடம்பெறும்.

பிரதம அதிதியாக யாழ்.மாவட்ட கமநல சேவைகள் திணைக்கள உதவி ஆணையாளர் க.சுந்தரேசன் கலந்துகொள்வார்.

சிறப்பு விருந்தினராக வலி. தென்மேற்கு பிரதேச செயலர் ஆ.சுப்பிரமணியசர்மா கலந்துகொள்வார். (ஐ-185-152)

### சத்திய சாயி நிறுவன உலகத் தலைவர் வருகை

யாழ்ப்பாணம்,ஜன.11

சுனாமி பேரலையால் பாதிக்கப்பட்ட பகுதிகளை அமெரிக்க நாட்டைச் சேர்ந்த பகவான் சத்தியசாயி நிறுவன உலகத் தலைவர் கோலட் ஸ்ரீன் பார்வையிட்டார்.

பாதிக்கப்பட்ட பல பகுதிகளுக்கும் நேரடியாகச் சென்று பார்வையிட்ட கோல்ட் ஸ்ரீன், நாடளாவிய ரீதியில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிதி உதவி வழங்கியுள்ளார்.

அமெரிக்க நாட்டைச் சேர்ந்த சத்யசாயி நிறுவன உலகத் தலைவர் கோல்ட் ஸ்ரீன் வழங்கிய நிதியுதவி வடக்கு - கிழக்கு மக்களுக்கும் பயன்படும் என மானிப்பாய் சத்தியசாயி சமித்தி தலைவர் சட்டத்தரணி இரா. வசந்தசேனன் தெரிவித்தார்.

இதேவேளை, மானிப்பாய் சத்திய சாயி சமித்தி நிலையம் வடமராட்சியில் பாதிக்கப்பட்ட பகுதி மக்களுக்கு தொடர் நிவாரணப் பணிகளை மேற்கொண்டுவருகிறது. (ஐ-185)

# அலையில் அள்ளுண்ட தங்க நகை 10 நாள்களின் பின் கண்டெடுப்பு

## உரியவரிடம் ஒப்படைக்கப்பட்டது

தென்மராட்சி,ஜன.11

'சுனாமி' கடல் பேரலைகளால் அள்ளிச் செல்லப்பட்டு நிலத்தில் புதைந்திருந்த தங்க நகை, வெடிபொருள் அகற்றும் பிரிவினரால் கண்டெடுக்கப்பட்டு உரியவரிடம் ஒப்படைக்கப் பட்டது.

வல்வெட்டித்துறை ஆதிகோயிலடியில் கடந்த புதன்கிழமை வெடிப்பொருள்கள் அகற்றும் போதே இந்த நகை கண்டெடுக்கப்பட்ட தாகத் தெரிவிக்கப்பட்டது.

'ரின்' ஒன்றில் வைக்கப்பட்டிருந்த 3½ பவுண் நிறையுடைய தங்க அட்டியலே கண்டெடுக்கப் பட்டது.

வீட்டிலிருந்து 100 யார் தூரத்திற்கு அப்பால் நகை மீட்டெடுக்கப்பட்டதாகவும் 'ஹலோ ரஸ்ற்' நிறுவனத்தின் வெடிப்பொருள்கள் அகற்றும் பிரிவில் கடமையாற்றும் அ.சத்தியராஜ் என்பவர் நகையைக் கண்டெடுத்து நிறுவன பொறுப்பதிகாரி மூலம் உரியவரிடம் ஒப்படைத்தார் எனவும் தெரிவிக்கப்பட்டது. (4-117)

# வடபகுதிக்கான நிவாரணப் பணிகள் ஓர் அமைப்பினால் மேற்கொள்ளப்படுவதே சிறந்ததாக அமையும்

யாழ்ப்பாணம்,ஜன.11

வடபகுதிக்கான நிவாரணப் பணிகள் நேரடியாக ஓர் அமைப்பின் மூலம் மேற்கொள்ளப்படுதலே சிறந்ததாக அமையும்.

- இவ்வாறு யாழ். மாவட்ட மனிதநேய அமைப்புகளின் ஒன்றியம் ஐ.நா. செயலாளர் நாயகம் கோபி அனானுக்கு அனுப்பி வைத்துள்ள மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த மகஜரில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

வடபகுதி மக்கள் தங்களின் துன்ப துயரங்களையும் இடர்பாடுகளையும் ஐ.நா. செயலாளர் நாயகமாகிய உங்களிடம் நேரடியாக எடுத்துக்கூறக்கூடிய சந்தர்ப்பத்தினை இலங்கை அரசு வழங்காதுவிட்டமை எமக்குப் பெரும் கவலையைத் தருகிறது.

சுனாமியால் ஏற்பட்டுள்ள அனர்த்தமானது வடக்கு - கிழக்கு மக்களைப் பொறுத்தவரை இரட்டைத் துன்பமாக அமைந்துவிட்டது. இரண்டு தசாப்தங்களாக இடம்பெற்ற யுத்தத்தினால் ஏற்பட்டிருந்த துன்பத்திலிருந்து மீள்வதற்கு முன்பதாக இம்மக்கள் இன்னுமோர் இயற்கை அனர்த்தத்திற்கு முகம் கொடுத்துள்ளார்கள்.

வடபகுதிக்குத் தாங்கள் விஜயம் செய்திருந்தால் இங்குள்ள கள நிலைமைகளை அறிந்துகொள்ளவும் இம்மக்களின் துன்பங்களைப் புரிந்துகொள்ளவும் முடிந்திருக்கும் இயற்கை ஒருபோதும் பாரபட்சம் காட்டுவதில்லை. ஆனால், பெரும்பான்மை சமூகத்தின் மேலாண்மைதான் பாரபட்சத்துக்கு இடமளிக்கின்றது.

சிறுபான்மையினருக்கு தனி மனித உரிமைகளையும் பாதுகாப்பையும் வழங்குவதன் மூலமே இதனைத் திருத்தி அமைக்க முடியும். அமைதிச் செயற்பாடுகளை முன்னெடுப்பதே இன்றைய தேவையாகும். இடம்பெயர்ந்த மக்கள் ஐ.நா. வழிகாட்டல் நியமங்களுக்கமைவாக பாதுகாப்புடன் திரும்புவதையும் மீளக்குடியமர்வதையும் இலங்கை அரசு உறுதிசெய்யவில்லை.

அமைதியின் இலட்சித்தை அடைவதற்கும் நல்லிணக்கத்தை உருவாக்குவதற்கும் சர்வதேச உதவிகள் வடக்கு - கிழக்கிற்கு சேர்வதுடன் ஓர் அமைப்பின் மூலமாக பகிர்ந்தளிக்கப்படவும் வேண்டும். இது விரைவான மீள்குடியமர்வையும், புனர்வாழ்வையும் உறுதிப்படுத்துவதாக இருக்க வேண்டும்.

தமிழ் பேசும் மக்கள் கௌரவமாகவும் கண்ணியமாகவும் வாழ்வதற்குத் தங்களின் தலையீடு வழிவகுக்கும் என நம்புகிறோம் என்று அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.(10-5-86)

புதிய ஆண்டில்

# தரம் ஒன்று மாணவர்களை உள்வாங்கும் நிகழ்வு எதிர்வரும் 27ஆம் திகதி நடைபெறவுள்ளது

வலி.தெற்கு, ஜன.11

உத்தியோகபூர்வமாகத் தரம் ஒன்று மாணவர்களைப் பாடசாலைகளில் உள்வாங்கும் நிகழ்வு எதிர்வரும் 27ஆம் திகதி நடைபெறும் என்று வடக்கு-கிழக்கு மாகாண கல்வித் திணைக்களம் அறிவித்துள்ளது.

நேற்றுத் திங்கட்கிழமை இடம்பெற இருந்த இந்த நிகழ்வு நாட்டில் ஏற்பட்ட சுனாமி அனர்த்தங்களால் எதிர்வரும் 27ஆம் திகதிக்குப் பிற்போடப்பட்டுள்ளது.

எனினும் 27ஆம் திகதிக்கு முற்பட்ட இரண்டு வார காலப்பகுதியிலும் சீருடையில்லாமல் சாதாரண உடையுடன் தரம் ஒன்று மாணவர்கள் பாடசாலைகளுக்குச் சென்று புதுமுகத் தேர்ச்சி வேலைத் திட்டத்தில் ஈடுபடுவார்கள்.

புதுமுகத் தேர்ச்சி தொடர்பான 16 செயற்பாடுகளில் அவர்கள் ஈடுபடும் பொழுது தனியாகவும், கூட்டாகவும் அவர்களது செயற்பாடு அவதானிக்கப் பட்டு இறுதியிலே அவர்களின் செயற்பாடுகள் கணிப்பீட்டுப் படிவங்களில் பதிவு செய்யப்படும்.

எதிர்வரும் 27ஆம் திகதி இப்பிள்ளைகள் உத்தியோக பூர்வமாக உள்வாங்கப்படுவதை ஒரு நிகழ்ச்சித்திட்டமாகச் செயற்படுத்துமாறு வடக்கு - கிழக்கு மாகாணக் கல்விப்பணிப்பாளர் இ.விசாகலிங்கம் அறிவித்துள்ளார். (10-152)

# நிவாரணப் பணிகளைப் புலிகளிடம் கையளிக்குமாறு வேண்டுகோள்

## ஆளுநரிடம் இ.த.க. சங்கம் விடுத்தது

யாழ்ப்பாணம்,ஜன.11

வடக்கு - கிழக்கு மாகாண மக்கள், விடுதலைப் புலிகள்தான் தமது ஏகப்பிரதிநிதிகள் என்று தீர்ப்பளித்திருக்கிறார்கள். எனவே முழு நிவாரண வேலைகளும் மீள் கட்டுமானமும் புனர்வாழ்வு, மீள்குடியமர்வு ஆகிய அனைத்துமே புலிகளுடன் ஆலோசனை கலந்த பின்பே செயற்படுத்தப்படவேண்டுமென்றும் இந்தப் பொறுப்பினை அவர்களிடமே கையளிக்க வேண்டும் என்றும் கேட்டுக்கொள்கின்றோம்.

- இவ்வாறு தெரிவிக்கும் கடிதம் ஒன்றினை இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் வடக்கு- கிழக்கு மாகாண ஆளுநர் டிரோன் பெர்னாண்டோவுக்கு அனுப்பியுள்ளது. வடக்கு - கிழக்கில் தெரிவு செய்யப்பட்ட சபை எதுவும் செயற்படாததால் வடக்குக் கிழக்கின் ஆளுநர் என்ற முறையில் தாங்களே இந்த மாகாணங்களின் பொறுப்பை ஏற்றுக் கொள்ளவேண்டும், அந்த வகையில் உள்ளூர், வெளிநாட்டு அரசசாராத நிறுவனங்கள், ஐ.நா. முகவர்கள் மற்றும் உதவி வழங்கியவர்களதும் அரசினதும் உதவிகள் யாவற்றையும் சமமாகப் பகிர்ந்தளிக்கப்படுவதை அவர் உறுதி செய்ய வேண்டுமென்றும் இ.த.ஆ. சங்கம் கோரியுள்ளது. (ப-5)

# ஈரோஸ் சங்கர் ராஜி நேற்று கொழும்பில் மரணமானார்

கொழும்பு,ஜன.11

ஈரோஸ் இயக்கத்தின் ஸ்தாபக உறுப்பினர்களின் ஒருவரும் சங்கர் ராஜி என்றழைக்கப்படுபவருமான நேசதுரை திருநேசன் தனது 54 ஆவது வயதில் நேற்றுக் கொழும்பில் காலமானார்.

ஈரோஸ் இயக்கத்தின் சர்வதேச இணைப்பாளராகச் செயற்பட்ட சங்கர் ராஜி, பலஸ்தீன விடுதலை இயக்கத்துடன் நேரடியான தொடர்புகளைக் கொண்டிருந்தார். 1975 ஆம் ஆண்டுக்குப் பின்னர் பலஸ்தீனத்தில் பல தமிழ் இளைஞர்களுடன் இணைந்து ஆயுதப்பயிற்சி பெற்றவர் அவர். அதிவிசேட இராணுவப் புலனாய்வுப் பயிற்சிகளையும் அவர் பெற்றிருந்தார்.

ஈரோஸ் இயக்கம் 1989ஆம் ஆண்டு தனது செயற்பாடுகளை நிறுத திக்கொள்வதாக அறிவித்தது. இயக்கத்தைக் கலைத்துவிடுவதாக அதன தலைவர் வே.பாலகுமார் அறிவித்தார். அத்துடன், ஈரோஸ் இயக்கத்தின் முக்கிய உறுப்பினர்களில் பெரும்பாலானோர் தமிழீழ விடுதலைப் புலிகளுடன் இணைந்துகொண்டனர். இதேவேளை, அமைப்பின் கொழும்புக் கிளையில் பணியாற்றிய சங்கர் ராஜியுடன் இருந்த சிலர் தாமே ஈரோஸ் இயக்கத்தினர் என்று அறிவித்ததுடன், அதன் தலைமைப் பொறுப்பை சங்கர் ராஜி வகிக்கின்றார் எனவும் தெரிவித்தனர்.

சிறிதுகாலம் சிறு குழுவாக இயங்கிய சங்கர் ராஜி தலைமையிலான ஈரோஸ் இயக்கம் பின்னர் செயலற்றுப்போனது. பின்னர் மரமுந்திரிகைக் கூட்டுத்தாபனத்தில் ஆலோசகராகப் பணியாற்றினார் சங்கர் ராஜ். (எ-க)

# அனர்த்தம் பாதித்த மக்களை ஆயர் சந்தித்தார்

யாழ். ஆயர் மேதகு தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை கடந்த வெள்ளியன்று மாலை சாவகச்சேரிக்கு விஜயம்செய்தார்.

சுனாமி கடல் பேரலைகளினால் பாதிக்கப்பட்டு சாவகச்சேரி புனித லிகோரியார் தேவாலய சுற்றாடலில் தங்கியுள்ள முல்லைத்தீவு பிரதேச மக்களை நேரில் சந்தித்து அவர் ஆறுதல் கூறினார்.

அப்பகுதியில் இடம்பெயர்ந்த மக்கள் தங்கியுள்ள வீடுகளுக்கு நேரடியாகச் சென்று ஆறுதல் கூறியுள்ளார். ஆயருடன் சாவகச்சேரி பங்குத்தந்தை அருட்திரு. ரவிச்சந்திரன் அடிகளும் உடன் சென்றிருந்தார்.

## சக்கரநாற்காலிகள் அன்பளிப்பு

சாவகச்சேரி வைத்தியசாலைக்கு இரண்டு சக்கரநாற்காலிகள் வழங்கப்பட்டுள்ளன.

யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பிரதி மாகாணப் பணிப்பாளர் பணிமனையினரால் இவை வழங்கப்பட்டுள்ளது.

மேற்படி வைத்தியசாலை மீள இயங்கத் தொடங்கி இரண்டரை வருடங்களுக்கு மேலாகியும் சக்கரநாற்காலி இல்லாததால் அவசர நோயாளர்கள் ஸ்ரெச்சர் மூலம் தூக்கிச் செல்லப்பட்டு வார்டுகளில் அனுமதிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (எ-117)


## நீங்கா நினைவில்...

கோப்பாய் ஆசிரிய கலாசாலை மாணவன்
திரு. அ. ஜோன்பிரகாஸ் அவர்களின் அன்புத் தாயார்

**திருமதி அந்தோனிப்பிள்ளை மதலேனா**

அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தின் துயரில் நாமும் பங்கேற்பதோடு, இந்நாளில் அவரின் ஆத்மசாந்திக்காகப் பிரார்த்திக்கிறோம்.

மாணவர்கள் முதலாம் வருடம்
கோப்பாய் ஆசிரிய கலாசாலை,
துனுக்காய் வலயம்.

(40686)(38-11-18)

CIMA

சகல அங்கத்தவர்கள் மற்றும் மாணவர்களுக்கான அறிவித்தல்

முகாமைத்துவ பட்டயக் கணக்காளர் நிறுவனம் அண்மையில் ஏற்பட்ட சுனாமி அனர்த்தத்தில் பாதிக்கப்பட்டுள்ள அங்கத்தவர்களையும், மாணவர்களையும் பின்வரும் முகவரியுடன் தயவுசெய்து தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றது.

CIMA ஸ்ரீலங்கா பிரிவு
356, எல்விட்டிகல மாவத்தை,
கொழும்பு 5.

தொலைபேசி: 4514554
ஈ மெயில்: colombo@cimaglobal.com

## ஒத்துமாறல்

பட்டதாரிகளின் பயிற்சிக்காக Vocational Training, Ministry of Aggrecultural Marketing Development இல் நியமனம் பெற்ற ஒருவர் யாழ்., வலிகாமம் வலயங்களில் ஆசிரிய நியமனம் பெற்ற ஒருவருடன் ஒத்துமாற விரும்புகிறார்.

தொடர்புக்கு:
T.P:0776510941, 021 222 6371

## ஒத்துமாறல்

முல்லைத்தீவு வலயத்திற்குப் பட்டதாரி ஆசிரியர் நியமனம் பெற்ற ஒருவர், வடமராட்சி, தென்மராட்சி, கிளிநொச்சி, தீவகம் வலயங்களில் நியமனம் பெற்ற பட்டதாரி ஆசிரியர் ஒருவருடன் ஒத்துமாற விரும்புகிறார். விரும்புவோர்கள் கீழ்க்காணும் முகவரி, இலக்கத்துடன் தொடர்புகொள்ளவும்.

T.P:0776153843,
0712509253, 021 222 3480
534, பருத்தித்துறை வீதி, நல்லூர்.

## மரண அறிவித்தல்

### சதாசிவம் வல்லிபுரநாதர்

(இளைப்பாறிய ஆசிரியர்)



சிவசக்தி வாசா, நாகர்கோவில் தெற்கைப் பிறப்பிடமாகவும் தற்போது 9/6, மலர்மகள் வீதி, அரியாலையில் (மாம்பழம் சந்தி அருகில்) வசித்து வந்தவருமாகிய சதாசிவம் வல்லிபுரநாதர் (வல்லிபுரம் - பொன்னையா வாத்தியார் - இளைப்பாறிய ஆசிரியர்) அவர்கள் நேற்று (2005.01.10) திங்கட்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற சதாசிவம் - சின்னபபிள்ளை தம்பதிகளின் சிரேஷ்ட புத்திரனும், காலஞ்சென்ற சங்கரப்பிள்ளை - முத்தம்மா தம்பதிகளின் மருமகனும், பதஞ்சலியின் அன்புக் கணவரும், தில்லைநாதன் (உதவிமுகாமையாளர், இலங்கை வங்கி, கொழும்பு தலைமைக்காரியாலயம்), பத்மநாதன் (மோட்டார் போக்குவரத்து உதவி ஆணையாளர், கச்சேரி, யாழ்ப்பாணம்), கணேசநாதன் (மாவட்ட முகாமையாளர், தேசிய வீடமைப்பு, அபிவிருத்தி அதிகார சபை, வவுனியா), சிவயோகநாதன் (ஜேர்மனி), சிவ்சக்தி (ஜேர்மனி), சோதிநாதன் (டென்மார்க்), லோகநாதன் (ஜேர்மனி) ஆகியோரின் பாசமிகு தந்தையும், சிவராணி, இந்திராணி, சுபாதேவி, இந்திராதேவி, ஜெயதேவன், நிரஞ்சனி, அகிலா ஆகியோரின் அன்பு மாமனாரும் ரஜனி, ஜெகதீஸ்வரன் (லண்டன்), [illegible]தினி, மனோராகவன் (ஹொலண்ட்), யாழினி, சிவசொரூபன், சிவாஜினி, பாமதி, நந்தகுமார் (சுவிஸ்), காண்டீபன், பார்த்தீபன், பிரதீபன், நவதீபன், சபேசன், அபிரா, சிவகணேசன், சசிரேகா, சிவஅனுசன், அனந்தன், யதுர்சன், கீர்த்தனா, சங்கவி, தினேஸ், தனேஸ் ஆகியோரின் அன்புப் பேரனும் குகனன், குகனி ஆகியோரின் அன்புப் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (2005.01.11) செவ்வாய்க் கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் பிற்பகல் 2.00 மணியளவில் தகனக்கிரியைகளுக்காக அரியாலை சித்துப் பாத்தி இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*9/6, மலர்மகள் வீதி,*
*அரியாலை, யாழ்.*
*(மாம்பழம் சந்தி அருகில்)*

தகவல்:
வ.பத்மநாதன் - (மகன்),
மோட்டார் போக்குவரத்து
உதவி ஆணையாளர்-
யாழ்ப்பாணம்.

(40684)(38-11-18)



ஆளுநர் வருகையை முன்னிட்டு யாழ்.செயலகத்தில் நடைபெற்ற கூட்டத்தில் கலந்து கொண்ட அரச அதிகாரிகளை முதலாவது படத்திலும், கூட்டத்திற்குத் தலைமை வகித்த யாழ்.அரச அதிபர் கே.கணேஸ் உரை நிகழ்த்துவதை இரண்டாவது படத்திலும், யாழ்.பொதுநூலகத்திற்கு ஒருதொகுதி நூல்களை பிரதம நூலகரிடம் மாகாண ஆளுநர் டிரோன் பெர்னாண்டோ கையளிப்பதை அடுத்துள்ள படத்திலும் காணலாம்.

படங்கள்: அலுவலகச் செய்தியாளர்.

## துயர்பகிர்கின்றோம்

எமது பிரதேச செயலகத்தில் கிராம உத்தியோகத்தராகக் கடமையாற்றும் திரு. வே. கண்ணப்பமூர்த்தி அவர்களின் அன்பு மைத்துனர்

**நாகரராசா ரவீந்திரன்**

அவர்களின் திடீர்மறைவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினரின் துயரில் நாமும் பங்குகொள்வதுடன், அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

*நலன்புரிச்சங்கம், பிரதேச செயலகம், பச்சிலைப்பள்ளி.* (40700)(43-11-14)

*உதவிப் பிரதேச செயலரும், அனைத்து உத்தியோகத்தர்களும்.*

ஏழாலை களபாவோடை
வசந்தபுரம் அருள்மிகு வசந்தநாகபூசணி அம்பாள்
தேவஸ்தான

## மகோற்சவ விஞ்ஞாபனம்

ஏழாலைகளபாவோடை
வசந்தபுரம் அருள்மிகு வசந்தநாகபூசணி அம்பாள்
தேவஸ்தானம்

**இராஜகோபுர மகாகும்பாபிசேக விஞ்ஞாபனம்**

காலம்: 19-01-2005
தை மாதம் 6 ஆம் நாள் புதன்கிழமை
மு.ப.10.00 மணி

பிரதிஷ்டா கும்பாபிசேகப் பிரதமகுரு பிரம்மஸ்ரீ
தியாக கெங்காதரக்குருக்கள் புன்னாலைக்கட்டுவன்

அருளாசியுரை
**பிரம்மஸ்ரீ தா.மகாதேவக்குருக்கள்**
காயத்திரிபீடம், இனுவில்
**கலாநிதி அருட்கவி சீ.வினாசித்தம்பி ஐயா**
அவர்கள் ஸ்ரீநாகவரத நாராயணர் தேவஸ்தானம்,
அளவெட்டி.

ஆசியுரை
சிவானந்த வாரிதி
**சிவத்திரு. வ.குமாரசாமிஐயா** அவர்கள்
மயிலணி

இப்புனித கும்பாபிசேகத்தில் கலந்து அன்னையின் திருவருள் பெற்று அடியவர்கள் இன்புறப் பிரார்த்திப்போமாக.

(40698)(43-11-14) - தேவஸ்தானம்.

## 41 ஆம் நாள் விண்ணக வாழ்வில்

கருவறையில் 01 - 07 - 1978



கல்லறையில் 01 - 12 - 2004

**சார்ள்ஸ் எமிலியான்**
**கெல்வின் தயான் (ஹமில்டன்)**

உன் பிரிவில் முட்களும் கற்களும்
எம் பயணப்பாதைகளாகிவிட்டன!
உறுத்தும் உன் நினைவால் மனதில்
நிம்மதியின்றி தூக்கம் தொலைந்து
உருகிக் கரையும் அடுத்த மெழுகுதிரிகள் நாம்.
**இவரின் ஆத்மசாந்திக்காக**
**இறைவனை வேண்டுகின்றோம்.**

*53,3ஆம் குறுக்குத் தெரு, குருநகர், யாழ்ப்பாணம்.* (40693)(43-11-14)

பிரிவால் துயருறும்:
மனைவி, மகன், தாய், தந்தை, ,சகோதரர்கள், உற்றார், உறவினர்கள்.


## வர்த்தகமும் கணக்கியலும்

| Day | O/L 2005 | Gr.10 |
|---|---|---|
| Thu. | 3.15. p.m. | 4.15 p.m |
| Fri. | 4.15 p.m. | 3.15 p.m. |

ஆரம்பம்: 13.01.2005 Thu. 3.15. p.m.

தனிப்பாட அனுமதி வழங்கப்படும்

By: K.B. Kajan

**நாவலர் இன்ஸ்ரிரியூட்**
ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம் (40704)

## NEW SCIENCE HALL PHYSICS

2005 அலகுரீதியான மீட்டல்
(மின்னியல், இலத்திரனியல், புலம், சடமும்கதிர்ப்பும், சடப்பொருளியல்)
பிரிவு(1) திங்,வெ. 8.15 - 9.30 (a.m.)
பிரிவு(2) திங்-வெ. 9.30 - 10.15 (a.m.)
(NEW SCIENCE COLLEGE)
பிரிவு(3) கடந்தகால வினாவிடை
(99 முதல் 2004 வரை)

(40692) By.R.குகன்

**நிரஞ்சனாஸ் சங்கானை**

சரத்குமார், ரோஜா நடித்த
சின்னத்துரை
காட்சி நேரம்: 11.00, 3.45, 8.00 (பு.நே.)
வெள்ளி, சனி, ஞாயிறு இரவு 8.45 (பு.நே.) ANACONDA 2

**ராஜா யாழ்ப்பாணம்**

விஜய் ஸ்நேகா வடிவேல் நடித்த
வசீகரா





காட்சிநேரம் 10.30, 2.30, 6.30 (பு.நே.)
பொங்கல் வெளியீடு சரத்குமாரின் ஐயா.

**நாகம்ஸ் சினிமா சுன்னாகம்**

இந்தியாவிலும் இலங்கையிலும் ஒரே தின வெளியீடாக அர்ஜுன் (இருவேடம்) சாயாசிங் லைலா வடிவேல் நடித்த
தினசரி 11.00, 3.00, 7.00. (பு.நே.)
ஜெய் சூர்யா





பொங்கல் வெளியீடு தனுசின்
தேவதையைக் கண்டேன்
(C/39654)

**நாதன்ஸ் சினிமா யாழ்ப்பாணம்**

குளிரூட்டப்பட்டது
குதூகல ஆரம்பம்
கா.நேரம்: 10.30, 2.30, 6.30.,9.30 (பு.நே.)
இலங்கை மண் தாவடியின் மைந்தன்
ஜெய் ஆகாஷ், ஸ்ரீதேவிகா, வாணி நடித்த





ராமகிருஷ்ணா

இந்தியாவிலும் இலங்கையிலும் ஒரே தின
அதிரடி வெளியீடு


## ஒத்துமாறல்

யாழ். மாவட்டத்திற்கு நிர்வாக துறையில் நியமனம் பெற்ற ஒருவர் ஆசிரியர் நியமனம்பெற்ற ஒருவருடனும், கிளிநொச்சி வலயத்திற்கு ஆசிரிய நியமனம் பெற்ற ஒருவர் யாழ்மாவட்டத்திற்கு ஆசிரியர் அல்லது நிர்வாகத்துறையில் நியமனம் பெற்ற ஒருவருடனும் ஒத்துமாற விரும்புகின்றனர்.

T.P.: 0777 222424, 0777 291602.

(40702)


**SHAMROCK**
J/Eachchamoddai Rd.

2007A/L

C/Maths - Mr.GEETH
PHY - Mr.லெனின்
CHE-Mr.ஜெயந்தன
BIO - Mr.ஜக்சன்

★ Yr.3 முதல O/L வரை
★ Yr.6-Eng Meduam
★ 10+11 Eng.Lit
(40678)


## மனதார வாழ்த்துகின்றோம்

சபாபதிப்பிள்ளை வீதி, சுன்னாகத்தில் அமைந்துள்ள விழிப்புல வலுவிழந்தோர் வாழ்வகத்தின் தலைவர் அன்னை செல்வி அன்னலக்ஷ்மி சின்னத்தம்பி அவர்கள் இன்று தனது 68 ஆவது பிறந்த தினத்தை முன்னிட்டு விழிப்புலனற்ற மாணவர்களுக்கான கல்விப் புனர்வாழ்வு நிதியமொன்றினை ஆரம்பிக்கிறார். இந்நிதியம் வளர்ந்தோங்க நாமும் நமது பங்களிப்பை வழங்க முன்வரும் அதேவேளை விழிப்புலனற்ற பிள்ளைகளின் ஒளிவிளக்காய்த் திகழும் இந்த அன்னை இன்னும் பல தசாப்தங்கள் நம்மோடு வாழ்ந்து தன்பணியைத் தொடரவேண்டும் என நெஞ்சார வாழ்த்துவோமாக. **- வாழ்வக சமூகம்.**

(ச-40351) (43-11-14)

# மரண அறிவித்தல்கள்

## சின்னையா செல்லத்துரை

நாவற்குழி கிழக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சின்னையா செல்லத்துரை அவர்கள் 09.01.2005 ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற பிள்ளையம்மாவின் கணவரும் காலஞ்சென்ற செல்வநாயகம் மற்றும் லோகேஸ்வரி (லண்டன்), நாகேஸ்வரி (கனடா), நகுலேஸ்வரி, செல்வகுமார் (சுவிஸ்) ஆகியோரின் தந்தையும் உலகநாதன் (லண்டன்), தவராஜா (கனடா), யோகேஸ்வரி, வெனிற்றா (சுவிஸ்), பதி ஆகியோரின் மாமனாரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (11.01.2005) செவ்வாய்க்கிழமை 9.00 மணியளவில் தகனக்கிரியைக்காக நாவற்குழி பிண முருங்கை மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*நாவற்குழி கிழக்கு, நாவற்குழி.* (40706)(43-11-14)

தகவல்: செல்வக்குமார் (மகன் - சுவிஸ்).

## திருமதி கந்தையா அலங்காரம்



3ஆம் வட்டாரம், புங்குடுதீவைப் பிறப்பிடமாகவும் அத்தியடி, யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கந்தையா அலங்காரம் அவர்கள் நேற்று (10.01.2005) திங்கட்கிழமை கொழும்பில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற தாமோதரம்பிள்ளை - முத்தம்மா தம்பதிகளின் அன்பு மகளும் காலஞ்சென்ற வைரமுத்து - சின்னம்மா தம்பதிகளின் அன்பு மருமகளும் வைரமுத்து கந்தையா (முன்னாள் வர்த்தகர், கொழும்பு) அவர்களின் பாசமிகு மனைவியும் இரவீந்திரன் (ஹொலண்ட்), இந்திராதேவி, யோகேஸ்வரன் (Sun Printek - Colombo), புவனேந்திரன் (கனடா), சுரேஸ்குமார் (கனடா) ஆகியோரின் அன்புத் தாயாரும் மஞ்சுளாதேவி (இந்தியா), சுந்தரலிங்கம் (மயூரா உரிமையாளர், கொழும்பு - யாழ்ப்பாணம்), சுலோசனா (கொழும்பு), ரஞ்சி (கனடா), அகிலா (கனடா) ஆகியோரின் அன்பு மாமியாரும் காலஞ்சென்ற சிவலோகநாதன், மகேந்திரன் (ஜேர்மனி) ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் ஜெயவர்த்தனபுர மலர்ச்சாலையில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு நாளை (12.01.2005) புதன்கிழமை மாலை 4.00 மணிக்கு நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*க.யோகேஸ்வரன் (மகன்)*
*இல.06.நியூ சதுக்கம் லேன்,*
*கொச்சிக்கடை,*
*கொழும்பு - 13.*
*0112 335567 - 0777 311367*

தகவல்:
அ.சுந்தரலிங்கம் (மருமகன்.)
0112-335109,
0777 747095
(40699)(43-11-14)

## சங்கரராமன் கொலை வழக்கு ஐயேந்திரருக்குப் பிணை

காஞ்சி.ஜன.11

சங்கரராமன் கொலை வழக்கில் காஞ்சி சங்கராச்சாரியார் ஜயேந்திரருக்கு உச்சநீதி மன்றம் நேற்று பிணை வழங்கியது.

குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்படும் வரை மற்றும் விசாரணை முடியும் வரை காஞ்சிமடத்திற்கு ஜயேந்திரர் செல்லக்கூடாது என்ற நிபந்தனையின் பேரில் அவருக்குப் பிணை வழங்கப்பட்டுள்ளது. (எ-12)

## கல்விச் சான்றிதழ்களை மீண்டும் பெற ஏற்பாடு

கொழும்பு,ஜன.11

ஆழிப்பேரலையின்போது காணமற்போன கல்விச் சான்றிதழ்களை மீண்டும் வழங்குவதற்குப் பரீட்சைத் திணைக்களம் நடவடிக்கை எடுத்துள்ளது.

கட்டணம் அறவிடப்படாமல் சான்றிதழ்கள் வழங்கப்படவுள்ளன என அறிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சை திட்டமிட்டபடி ஏப்ரல் மாதம் நடைபெறும் என கல்வி அமைச்சு அறிவித்துள்ளது. (எ-7)

# விஜயேந்திர சரஸ்வதி சுவாமிகள் திடீர் கைது!



காஞ்சிமடத்தின் இளைய சங்கராச்சாரியார் விஜயேந்திர சரஸ்வதி சுவாமிகளை நேற்று மாலை பொலீஸார் கைதுசெய்து அழைத்துச் சென்றபோது...

சங்கரராமன் கொலை வழக்கில் ஜயேந்திரருக்கு உச்சநீதிமன்றம் பிணை வழங்கித் தீர்ப்பளித்த சில மணி நேரங்களில் பொலீஸார் சங்கர மடத்துள் புகுந்து இளைய சுவாமியான விஜயேந்திரரைக் கைதுசெய்தனர்.

வரதராஜப் பெருமாள் கோயில் மேலாளர் சங்கரராமன், கடந்த ஆண்டு செப்ரெம்பர் மாதம் 3 ஆம் திகதி கொலை செய்யப்பட்டார். இவ்வழக்கில் ஜயேந்திரரை கடந்த நவம்பர் மாதம் 11 ஆம் திகதி நள்ளிரவு ஆந்திர மாநிலம் மகபூப் நகரில் வைத்து பொலீஸார் கைது செய்திருந்தனர்.

அதைத் தொடர்ந்து அவர் வேலூர் மத்திய சிறையில் அடைக்கப்பட்டுள்ளார்.

பின்னர் பிணைகோரி ஜயேந்திரர் தாக்கல் செய்த மனுவை விசாரித்த உச்ச நீதிமன்றம் நேற்று பிணை வழங்கி உத்தரவிட்டது.

நேற்று மாலை 5 மணியளவில் திடீரென வந்த பொலீஸார் காஞ்சி மடத்தை முற்றுகையிட்டனர். பின்னர் உள்ளே சென்ற பொலீஸ் அதிகாரிகள், விஜயேந்திரரைக் கைதுசெய்து அழைத்துச்சென்றனர். இளையசுவாமிகள் எந்தப்பிரிவின் கீழ் கைதுசெய்யப்பட்டார் என்பது தெரியவில்லை என தமிழகச் செய்திகள் தெரிவித்துள்ளன. இதனால், காஞ்சிபுரத்தில் கடும் பரபரப்பு ஏற்பட்டுள்ளது. (எ-12)

# அமெ.படைகளின்..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வருகின்றனர் - என்றார் புலித்தேவன். நூற்றுக் கணக்கானவர்கள் வெளியேறுகின்றனர். பலர் காடுகளில் தஞ்சமடைகின்றனர் - என்றார் அவர். ஐ.நா. செயலர் கோபி அனானைப் புலிகளின் பகுதிக்குச் செல்லவிடாமல் அரசு தடுத்தது குறித்து தமது அதிருப்தியையும் புலித்தேவன் வெளியிட்டார்.

இது குறித்துத் தாங்கள் மகிழ்ச்சியாக இல்லை என்று தெரிவித்த அவர், இதன் பிறகும் தங்களுடன் சேர்ந்து நாங்கள் பணியாற்றுவோம் என்று அவர்கள் (அரசுத் தரப்பினர்) எப்படி எதிர்பார்க்கின்றார்கள்? - என்று கேட்டார்.

எங்களுடைய தேசியத் தலைவர் உயிருடனேயே இருக்கின்றார். தேகாரோக்கியத்துடன் இருக்கின்றார். நோர்வேயின் உதவியுடன் இந்த சமாதான முயற்சிகள் தொடரும் என்றே நாம் எதிர்பார்க்கின்றோம். முதலில் இந்த மனிதப் பேரழிவைக் கவனிக்கவேண்டும். அது அவசரமானதும் கூட - என மேலும் குறிப்பிட்டார் புலித்தேவன். (எ-க)

# எஸ்.பி.திஸநாயக்கவுக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தளிப்பை ஏற்படுத்தியிருந்தது.

ஆனால், சுனாமிப் பேரலையால் ஏற்பட்ட அனர்த்தத்தால் எஸ்.பி.திஸநாயக்கவின் விவகாரம் அடிபட்டுப்போனது.

இதேவேளை, எஸ்.பி.திஸநாயக்கவின் விடுதலை தொடர்பாக ஐ.தே.க. சர்வதேச நீதிமன்றத்திற்கும், ஐ.நா. சபைக்கும் முறைப்பாடுகளைச் சமர்ப்பிப்பதற்கான ஏற்பாடுகளையும் செய்துவருகின்றது.

உயர் நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பை உயர் நீதிமன்றமே மீளாய்வு செய்யக்கோரும் மனு ஒன்றையும் தாக்கல் செய்வதற்கான நடவடிக்கைகளையும் கட்சி மேற்கொண்டுள்ளது.

எனவே, இந்தச் சந்தர்ப்பத்தில் எஸ்.பி.திஸநாயக்க விடயத்தில் ஜனாதிபதி விட்டுக்கொடுப்புடன் செயற்படவேண்டும் என சிரேஷ்ட அமைச்சர்கள் வலியுறுத்தியுள்ளனர். இதனை ஜனாதிபதி அக்கறையுடன் கேட்டுக்கொண்டார். எனினும், உடனடியாகச் சாதகமான பதில் எதையும் அவர் கூறவில்லையாம்.

இந்தநிலையில், சித்திரை புதுவருடத்தின் போது எஸ்.பி.திஸநாயக்காவுக்கு ஜனாதிபதி பெதுமன்னிப்பு வழங்குவார் என்று நம்பிக்கை ஏற்பட்டுள்ளதாக அந்த சிரேஷ்ட அமைச்சர் தெரிவித்தார். (எ-க)

# ஆளுநருக்கு யாழ்ப்பாண...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வேண்டிய நிவாரணப் பணிகள் தொடர்பாக ஆராயப்பட்டது.

யாழ். மாவட்ட அரச அதிபர் கே.கணேஸ் தலைமையில் இடம்பெற்ற இக்கலந்துரையாடலில் யாழ். மாவட்ட கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் சுனில் தென்னக்கோன், வடபகுதி சிரேஷ்ட பொலீஸ் அத்தியட்சகர் வானகுகு, மேலதிக அரச அதிபர் ஆ.சிவசுவாமி மற்றும் ஈ.பி.டி.பி. அமைப்பைச் சேர்ந்த என். மதனராஜா ஆகியோரும் பிரதேச செயலாளர்களும், திணைக்களத் தலைவர்கள் பலரும் கலந்துகொண்டனர். இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம், வடபகுதியில் படையினரால் கைதுசெய்யப்பட்டுக் காணாமற்போனோர் சங்கம், அன்னையர் முன்னணி உட்படப் பல பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் தமது கோரிக்கைகள் அடங்கிய மகஜர்களை அங்கு வைத்து ஆளுநரிடம் கையளித்தனர்.

தொடர்ந்து யாழ். பொது நூலகத்தைப் பார்வையிட்ட ஆளுநர், பின்னர் சுனாமி அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட வடமராட்சியைப் பார்வையிடக் கிளம்பினார். அதுவரை அவரது நேற்றைய நிகழ்ச்சிகள் அமைதியாக இடம் பெற்றன.

வடமராட்சியை வந்தடைந்த ஆளுநர், வடஇந்து மகளிர் கல்லூரியில் அமைந்திருந்த நலன்புரி நிலையத்திற்கு, தெல்லிப்பழை சுகாதாரப் பகுதியினரின் வெள்ளைநிற 'ஹைஏஸ்' வாகனத்தில் திடீரென வந்திறங்கினார். அச்சமயம் அங்கு பலத்த பாதுகாப்புப் போடப்பட்டிருந்தது.

யாழ். அரச அதிபர் மற்றும் பருத்தித்துறைப் பிரதேச செயலர் ஆகியோருடனும், தமது மொழி பெயர்ப்பாளருடனும் அகதிகள் தங்கியிருந்த நலன்புரி நிலையத்தை நோக்கி அவர் சென்றார். அச்சமயமே அவருக்குக் கடும் எதிர்ப்புக் காட்டப்பட்டது.

கறுப்புக் கொடியுடன் வந்த அகதிகள், முதலில் ஆளுநரை நோக்கித் தாறுமாறாகவும், சரமாரியாகவும் கேள்விக் கணைகளைத் தொடுத்தனர். பின்னர், அவர்கள் ஆளுநருக்கு எதிராக உரத்த குரலில் கோஷமெழுப்பினர்.

'ஆளுநரே திரும்பிப்போ!', 'நாம் பட்ட துயர் உங்களால் போக்கமுடியாது', 'எமக்கான சர்வதேச உதவிகளைப் பாரபட்சம் காட்டி ஒதுக்காதே!', 'எம்மைப் பார்க்க வரும் சர்வதேச சமூகத்தை மறிக்காதே!', 'தமிழ் மக்களின் மனித உரிமைகளைப் பறிக்காதே!' - என்றெல்லாம் அவர்கள் கோஷமிட்டனர்.

ஆளுநருக்கு எதிரான சுலோக அட்டைகளையும் சிலர் தாங்கியிருந்தனர். ஆளுநருக்குப் பாதுகாப்பாக வந்த படையினர் ஆவேசமுற்ற அகதிகளை ஆளுநரை நெருங்கவிடாமல் அவருக்குப் பாதுகாப்பு அளித்து, அவரை வெளியே அழைத்து வந்து, வாகனத்தில் ஏற்றி, பாடசாலை வளாகத்தைவிட்டு அப்புறப்படுத்தினர்.

சம்பந்தப்பட்ட நலன்புரி நிலையத்தில் 5 நிமிடம் கூட மக்களுக்கு முகம்கொடுக்க முடியாமல் ஆளுநர் திரும்பிவிட வேண்டியதாயிற்று.

ஆளுநர் பின்னர், வடமராட்சியில் சேதமுற்ற ஏனைய இடங்களைப் படையினருடன் சென்று பார்வையிட்டு விட்டுத் திரும்பினார். (எ-க-5-70-73-7-9)

# வீதிகள் திருத்தப்படாமை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

லில் ஈடுபட்டனர்.

தீவுப்பகுதியில் இயங்கும் அரச திணைக்களங்களில் பணியாற்றுவோரும், பாடசாலைகளின் அதிபர், ஆசிரியர்களும் தீவுப்பகுதிப் பாடசாலைகளில் தமது கடமையைப் பொறுப்பேற்கச் சென்ற நூற்றுக்கும் அதிகமான பட்டதாரி பயிலுநர்களான ஆசிரியர்களும் மறியல்போராட்டம் காரணமாக இ , மணிநேரம் வீதியில் தவம் கிடக்க நேரிட்டது.

காலை 9 மணியளவில் சம்பவ இடத்துக்கு வருகைதந்த தீவகம் வடக்கு, ஊர்காவற்றுறை உதவி அரச அதிபர் க.ஸ்ரீமோகனன், தீவகம் தெற்கு, வேலணை உதவிப் பிரதேச செயலர் எஸ்.நந்தகோபாலன் ஆகியோர் மறியல் போராட்டத்தில் ஈடுபட்டவர்களுடன் பேச்சுநடத்தினர்.

தீவுப்பகுதியின் அரச நிர்வாகத்துக்குப் பொறுப்பானவர்கள் என்ற வகையில் வீதிகளின் நிலைமை குறித்து பல தடவைகள் சம்பந்தப்பட்ட திணைக்களங்களுக்குத் தாம் எழுத்துமூலம் அறிவித்ததாகவும் -

பிரதேச செயலகங்களில் மாதாந்தம் நடைபெறும் ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டங்களில் வீதி திருத்தப் பணிகள் குறித்து விரிவாக ஆராயப்பட்டதுடன், அது குறித்த கூட்ட அறிக்கைகளை சம்பந்தப்பட்ட தரப்பினருக்கு அனுப்பிவைத்ததாகவும் - மறியல் போராட்டத்தில் ஈடுபட்டவர்களுடன் பேச்சுநடத்திய தீவகம் வடக்கு, ஊர்காவற்றுறை உதவி அரச அதிபர் க.ஸ்ரீமோகனன் தெரிவித்தார்.

வீதி பரிபாலனத்துக்குப் பொறுப்பான திணைக்களங்களுடன் தொடர்புகொண்டு விரைவில் உரிய தீர்வு பெற்றுத்தருவதாக ஊர்காவற்றுறை, வேலணை பிரதேச செயலர்கள் வழங்கிய உறுதிமொழியை அடுத்து மறியல் போராட்டம் கைவிடப்பட்டது.

இதற்கிடையில் - நேற்று முதல் இடைநிறுத்தப்படுவதாக அறிவிக்கப்பட்ட ஊர்காவற்றுறைப் பகுதிக்கான மினிபஸ் சேவை, வீதி திருத்த நடவடிக்கை எடுக்கப்படும் என்ற பிரதேச செயலர்களின் உறுதிமொழியை அடுத்து இன்று செவ்வாய் முதல் வழமைபோல் நடைபெறும் என ஊர்காவற்றுறை சிற்றூர்திச் சேவைச் சங்கம் அறிவித்துள்ளது. (எ)

2007
கலை, வர்த்தக, கணித,
விஞ்ஞான வகுப்புகள்
ஆரம்பம்: (40694)
12.01.2005 (புதன்) 4 மணி
நிரு கோண்டாவில்

விசேட விலைக்கழிவு
KODAK EXPRESS!!!
புகைப்படச்சுருள் பிரதியாக்கம் 4R அளவுகளில் 10.00
CD க்கள் மூலம் பிரதியாக்கம் செய்யும் 4R மொத்த கொள்வனவுகளிற்கு... 09.00
குறிப்பு: CD க்கள் மூலம் செய்யும் அனைத்து அளவுகளில் பிரதியாக்கங்களிற்கு (திருமண வாழ்த்துமடல், CD Cover, பிறந்தநாள் வாழ்த்து அட்டைகள் Etc.....
"அனுபவம், சிறந்த தொழில்நுட்பம், துரிதசேவை".
ஸ்ரீ டிஜிற்றல் கலர் லாப் (கொனிக்கா கலர் லாப்)
இல.14, ஸ்ரீவெங்கடேசன் வீதி,
பெருமாள் கோயிலடி, யாழ்ப்பாணம்.
T.P. : 021 - 222 3493 (சி-40348)

கற்சுமி
தரம் - 1 முதல் O/L, A/L வரை
★ சங்கீத ஆசிரியர் தேவை.
★ அலுவலக உதவியாளர் தேவை.
நேரில் வருக. (40683)
166, நாவலர் வீதி, யாழ்நகர்.

தமிழ் S.கேசவன்
A/L - 2007
புதன் வெள்ளி } பி.ப. 4 மணி
A/L - 2005
அலகு ரீதியான துரித மீட்டல்
புதன் வெள்ளி } பி.ப. 5 மணி (40647)
அறிவொளி நல்லூர்.

LOGIC
A/L 2007 Wed. 3.30 p.m. (40670)
R.S.சந்திரன்
கீரின் திருநெல்வேலி.

NEW SCIENCE COLLEGE
2007 PHYSICS
அடிப்படை பௌதிகவியல்
ஆரம்பம்:சனி, ஞாயிறு 9-10 a.m.
By: R. குகன் (40689)

NEW SCIENCE CENTRE
யாழ்நகர்
AL 2007
கணித, விஞ்ஞானப் பிரிவு
CHE. - திரு.அன்பழகன்
PHY. - திரு.ஜெயசீலன்
திரு. பிரபா
BIO. - திரு.அல்போன்ஸ்
Maths - திரு.ரஜனி (சி-40321)
இரசாயனவியல் கருத்தரங்கு 11.01.2005 செவ்வாய்க்கிழமை நடைபெறும்.

ஒத்திவைக்கப்பட்டுள்ளது
நேற்றைய உதயன் நாளிதழில் வெளியிடப்பட்ட C.C.S. நிறுவன கணனிப் புலமைப் பரிசிற் பரீட்சை விளம்பரத்தில் 02.01.2005 இல் பரீட்சை நடைபெறுமென அறிவிக்கப்பட்டது. ஆனால், சுனாமி அனர்த்தத்தின் காரணமாக அது 16.01.2005 ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது என்பதை சகலருக்கும் அறியத் தருகின்றோம்.
*(சி-40329) - நிர்வாகி

CHEMISTRY CENTRE
Temple Rd. (Greenpark முன்னே)
A/L 2007 பொது, அடிப்படை இரசாயனம்
ஆரம்பம்:12.01.2005 Wed. 5.00 p.m.
(சி-40350) அன்பழகன் B.Sc. (40646)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் [பிறைவேட்] நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 11.01.2005 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.